# நமஸ்காரம்

ஆசிரியர்
"சுகி"

(யுத்த கால இலக்கியம்)

கார்த்திகேயினி பிரசுரம்
இராமச்சந்திரபுரம் :: புதுக்கோட்டை ஸ்டேட்

முதற்பதிப்பு: அக்டோபர், 1946
உரிமை பதிவு

விலை ரூ. 2—8—0

பாப்பா பிரஸ், ராயவரம்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நமஸ்காரம் | ... | 1 |
| ஜோதிடப் புலி | ... | 9 |
| விஷமும் விஷயமும் | ... | 22 |
| அணுகுண்டு பயில்வான் | ... | 37 |
| பரீக்ஷை தேறுமா? | ... | 43 |
| "ஓ ஜெகதாம்பிகே!" | ... | 50 |
| மயூரத்தொனி மகிஷாம்பாள் | ... | 57 |
| கடவுள் பிறந்த கதை | ... | 64 |
| சிவகாமியின் விடுதலை | ... | 71 |
| வழக்குச் சொற்கள் | ... | 89 |
| கற்பகத்தரு | ... | 96 |
| நற்சாட்சிப் பத்திரங்கள் | ... | 101 |
| மோஹினி | ... | 113 |
| மாணவன் கஷ்டம்! | ... | 124 |
| சீசன் கதை | ... | 128 |
| நிலவும் செலவும் | ... | 138 |
| எமனுக்கும் எமன் | ... | 145 |
| ஞாபகசக்தி நிலையம் | ... | 170 |
| கடவுளுக்கே வெளிச்சம் | ... | 175 |
| கம்பனுக்குக் கடிதங்கள் | ... | 181 |
| "வெற்றி" | ... | 189 |

## நன்றியுரை

அவ்வப்போது வெளியிட்டு உற்சாக மூட்டிய ஆனந்த விகடன், வசந்தம், கிராம ஊழியன், ஹநுமான், நவயுவன், ஹிந்துஸ்தான், செட்டிநாடு முதலான பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு நன்றி.

## சமர்ப்பணம்

யார் யார் எழுதிய புஸ்தகங்களையும் பாரபக்ஷமின்றி நொடிப் பொழுதில் சுக்கு நூறாக்கும், என்னருமைக் குழந்தைகள் ராஜம்மா, நல்லபெருமாள் இருவருக்கும் இந்நூல் சமர்ப்பணம்.

# முன்னுரை

"என்ன சார், உங்கள் புத்தகம் வந்திருக்கிறதாமே?"

ஒரு அசட்டுச் சிரிப்பு.

சற்று நேரம் கழித்து இன்னொரு நண்பர் "உங்கள் புத்தக விமர்சனம் பார்த்தேன். சக்கைப் போடு போட்டிருக்கிறன்" என்பார்.

"நம்ம தம்பி கொண்டு வந்தான். நீங்கள் புத்தகம் கூடப் போடுகிறீர்களாமே?"

"பேஷ் தேவலே. உங்கள் புத்தகமும் கடைவீதிகளில் வந்து விட்டதே!"

"..........பத்திரிகை ரொம்பப் பாராட்டி எழுதியிருக்கிறது."

இப்படி ஆயிரம் பேர் வந்து கேட்பார்கள். புதிதாக குழந்தை பிறந்ததும் அது எத்தனுவது பிள்ளையாக இருந்தாலும் சரி, தாய்க்கு ஒரு மகிழ்ச்சி; அதைப் போய் பார்க்கிறவர்களுக்கும் ஒரு ஆனந்தம். 'தாயும் குழந்தையும் தனியாகப் போனல் போதும்' என்று பெண்கள் கவலைப் படுவார்கள்.

அப்படித்தான் ஆசிரியனும் அவனுடைய புத்தகமும். உரு வாகி விற்பனைக்கு வந்து விட்டால் அவன் பாடு சௌக்கியம்; அப் பால் பிரசுரகர்த்தா பாடு, பொது ஜனத்தின் பாடு என்ருகிவிடும்.

புத்தகம் வெளி வருவதற்கு முன்னல், என் மனம் பட்ட ஆனந்தம் நிறைந்த கவலை எவ்வளவு? ராஜ வம்சத்தில் பிறந்து பட்டத்திற்கு ஆசைப்பட்டுக் கொண்டிருக்கிற ராஜ குமாரனைப் போல் ஆதங்கம் கொள்ளும். ராஜ வம்சத்தில் பிறந்தாலும், கொலை, விஷம், சேனபதி, இளையவார்சுகளின் சூழ்ச்சி, இவற்றை

யெல்லாம் தாண்டி பட்டாபிஷேகம் நடக்க வேண்டும். எழுத்தாளர்கள் அத்தனை பேரும் மன்னர்கள்— முடி சூடா மன்னர்கள். புத்தக ஆசிரியர் ஆகி விட்டால், முடி சூடப் பெற்று ராஜ்ய உரிமை வந்து விடுகிறது.

ஆனால் இந்த ஜனநாயக யுகத்தில் ராஜாக்களுக்கும் புத்தக ஆசிரியர்களுக்கும் மதிப்பில்லை. அதற்கென ஆயிரம் பதினாயிரம் ரூபாய் செலவழித்திருந்தேனே?

அதிகமாகப் போனால், அந்த புத்தகத்தை எழுத நான் ஒரு அவுன்சு மை செலவழித்திருக்கலாம். கூடினால் இரண்டு துளி அதிகமிருக்கும். அவ்வளவே. துளிக்குத்துளி, பனித்துளி சூரியனையே ஒளி வட்டமிட்டு கண் சிமிட்டுவது போல ஒரேயடியாக எண்ணக் கலவைகளை வாரி விட்டிருந்தேன். அந்த எண்ணங்கள் இருக்கும்; நான் உலர்ந்துபோவேன். ஆனால் உலர்ந்தும் உலராத அந்த மைத் துளிகள், ஆயிரம் பேருடைய சிந்தனைகளுடன் உறவாடும். ஏன் லக்ஷோப லக்ஷம் பேர்கள் மனதைக் கவரும் என்று பெருமிதம் கொள்வதில் என்ன தவறு?

புத்தகமென்றால் அது இலக்கணப்படி அஃறிணைப் பொருளாக இருக்கலாம். ஆனால் அதற்கு ஹிருதயம் இருக்கிறது; பேசும் துடிப்பு இருக்கிறது; வேண்டாத போது ரேடியோவைத் திருகி விடுவது போல மூடி விடலாம்.

இப்பேர்ப்பட்ட பரிசுத்தமான ஹிருதயம் கொண்டவை புத்தகங்கள்; ஆனால் பட்டாபிஷேகத்தைவிட பெருமை தரத்தக்க இந்த சம்பவம் ஏன் ஒவ்வொருவருக்கும் அடிக்கடி கிடைப்பதில்லை? கிடைத்தாலும் மனிதன் ஏன் புகழுடைய புத்தகம் எழுத வேண்டும்? எத்தனை எத்தனையோ தொழில்கள் இருக்கின்றன!

வேறு நல்ல தொழில்கள் எனக்கு இல்லையா புகழின் பாதையைக் காட்ட? இருக்கலாம். பல்லாயிரக்கணக்காக இருக்கலாம்.

படிப்பும் பட்டமும் அல்லாத ஆத்மாக்களுக்கும், ஏன் பணத்தின் தரிசனம் அல்லாத ஆத்மாக்களுக்கும் புகழ் கிடைக்க

இலக்கியத்தை விட்டால் வேறு பாதை இல்லை. அதனால் தான் இலக்கியாசிரியர்கள் அவ்வளவு பேரும் தரித்திர நாராயணர் களாக இருக்கிறார்கள்.

இது காரணமாக ஏழையாகப் பிறந்தவன் ஒரு கலையில் வெற்றி பெற வேண்டுமானால் ' புஸ்தகம் எழுது ' என்கிறான் அனுபவசாலி. மற்ற எந்த வகைக் கலைக்கும், பொருள் அவசியம். இதற்கோ, அது வேண்டாம். சல்லிசான செலவில் கலா சிருஷ்டி யென வெளிக் கொண்டுவர முடியும்.

* * *

மேலே சொன்ன கதம்ப நினைவுமாலை இந்தப் புஸ்தகத்தை நினைக்கும்போது உண்டாகிறது.

ஏழு வருஷங்களுக்கு முன் வெளியான விஷயங்களிலிருந்து நேற்று வரை வெளி வந்த விஷயங்கள் இந்தத் தொகுதியில் இருக் கின்றன. எவை எவை முந்தியவை என்று படிப்பவர்களே கண்டு கொள்ளலாம். அந்த வித்தியாசம் நடை மூலமாகத் தெரியும். இன்றைய நடைக்குப் புதுக்கியும் திருத்தியும் செப்பனிட்டும் வெளியிடலாமென்றால், என்ன தான் செப்பனிட்டாலும் உள்ளான விஷயத்தில் மாறுபாடு இல்லை. வைரத்தை எத்தனை விதமாகப் பட்டைப் போட்டு மாறுதல் செய்தாலும் செய்கிற வேலைப்பாடு மேற்பரப்போடு நிற்கிறது. வைரத்தின் உள்ளொளி-ஹிருதயம்- எப்போதும் போலவே இருக்கிறது. அந்தக் கணக்கில் விஷயங்களை அன்று பிறந்த மேனியாகவே வெளியிட்டு இருக்கிறேன் என்பது தவிர வேறு என்ன இருக்கிறது சொல்ல?

விமர்சகர்களுக்காக ஒரு வார்த்தை எழுதியாக வேண்டும்.

விமர்சகப் பெருமக்கள், பொன்னை பொழுது படைத் தவர்கள். அவர்கள் கண் அமர வாழ்வு பெற்றவை. இமைக்கவே செய்யாது. பொது ஜனத்திற்கு எது தேவை, எது தேவையற்றது எனச் சீர்தூக்கிச் சொல்லி விடுவார்கள். பொதுவாக புஸ்தகங் களின் தன்மையையறிந்து வாங்குபவர்கள் ஆயிரத்தில் ஒருவர் என்றால், அதனுடைய கண் கவரும் படம் வர்ணஜாலம், கட்டிட

அமைப்பு, இதை மனசில் எடை போட்டே தொள்ளாயிரத்தி தொண்ணூற்றெண்பது பேரும் வாங்குகிறவர்கள். இப்படி வாங்குபவர்கள் எல்லாம் இலவச வாசகசாலையிலிருந்து வாங்குகிற பேர் வழிகள்.

காசு கொடுத்து புஸ்தகம் வாங்குபவர்களுக்குத் துணை புரிகிறவன் தான் உண்மையான விமர்சகனாக இருக்க வேண்டும். புஸ்தகத்தின் தரத்தை எடை போட்டுச் சொல்ல வேண்டுமானால் முழுவதும் படித்தாக வேண்டும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கிறது, மடைத்தொழிலில் உண்மை; இலக்கியத்தில் அது தப்பாக முடியும்.

விமர்சகர்களின் சோம்பேறித் தனத்தையும், தயவையும் நாட, முன்னுரையிலே இன்னின்ன 'எழுதியுள்ளேன்' என பட்டியல் தயாரிக்கிற சடங்குதான் முன்னுரை. அந்தச் சம்பிரதாயத்தை யொட்டி நான் ஒரு பட்டியல் கொடுக்கலாம். முன்னுரை விமர்சகர்களுக்கும், புஸ்தகம் வாசகர்களுக்கும் என்று பாகப்பிரிவினை செய்து ஆசிரியன் கொடுக்கிறான் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வாசகர்களாய் இருந்தால், இந்த இடத்திலேயே விட்டு விட்டு *விஷயங்களைப் பார்க்கலாம். விமர்சகர்களாய் இருந்தால், பேனைப் பிடிக்கலாம்.

**நமஸ்காரம்**

திருச்சி
10-10-46

சு. கி

* எழுத்துப் பிழைகளைத் திருத்திக்கொள்க.

# நமஸ்காரம்

மனசு வான வெளியில் சஞ்சரித்துக் கொண்டிருந் தது. திக்குத் திகுந்தமெலாம், செக்கச் செவலென்று, 'செக்கர் வானம்' பல்லாயிரக் கணக்கான ரோஜா இதழ் களைத் தூவியதுபோல, அக்காட்சி தோன்றியது. இத் தகைய காட்சியில் மனசு லயித்துவிட்டது. காலடி சப் தம் கேட்டதும் திரும்பினேன். "சம்பிரதாயமாம் ந-ல்-ல-சம்பிரதாயம்! எந்த மடப்பயல் இப்படிச் செய் தானே......அவனை......" என்று நிறுத்தினர் வந்தவர்.

"ஐயா, வாருங்கள்" என்று கும்பிடு போட்டேன். அவர் என்னுடைய நண்பர். அவர் முகத்தில் ஆங்காரத் தின் சாயை காணப்படவே, "என்னய்யா, வருகிற போதே எள்ளும் கொள்ளும் வெடிக்கிறதே. எந்நேரமும் குடும்ப விவகாரந்தானு......உட்காருமய்யா, உட்காரும்."

"எண்ணெய் சிந்தி வேட்டியெல்லாம் பாழாப் போச்சு. நல்ல வழக்கம்..." என்று முணுமுணுத்த படியே உட்கார்ந்தார்.

"விஷயம் என்ன? வாய்விட்டுப் பேசுங்களேன்."

"மார்க்கட்டிலிருந்து வந்துகொண்டிருந்தேன்."

"சரி கைநிறைய ஏகப்பட்ட சாமான். சோப்பு, ரிப்பன், தைலம், ஸ்நோ...இப்படிப்பட்ட சாமான்...அப் புறம்...,"

"அதோடு, கட்கத்தில் இலைக்கட்டு, ஒரு கையில் எண்ணெய்ச்சொம்பு, தோளில் சில சாமான்கள். நம்ம சுப்பையா இருக்கிறனல்லவா?"

"ஆமாம். அவனுக்கென்ன?"

"அவன் வந்தான். வந்தவன் நமஸ்காரம் செய்தான். பதிலுக்கு நமஸ்காரம் போடவேண்டாமோ?'

"போட வேண்டியதுதான்"

"போட்டேன். என்னத்தைப் போட்டேன்? கையிலிருந்த செம்பை வேஷ்டியில் போட்டுக் கொண்டேன். சோப்பு, தைலம் இவைகள் உருண்டு ஓடி சாக்கடையில் விழுந்து விட்டன. வேஷ்டி, சட்டையெல்லாம் எண்ணெய்; நாலுபேர் தங்கள் பல் வரிசையைக் காட்டினார்கள். சிலர் அனுதாபம் காட்டினார்கள். சுப்பையா என்ன செய்வான்? அவன் மேல் தப்பிதம் கிடையாது. எல்லாம் சம்பிரதாயம். நல்ல சம்பிரதாயம்!!..."

"இதுதானு விஷயம். வீட்டில் 'அடிகிடி' விழுந்து விட்டதா?" என்று நையாண்டியாகச் சொன்னேன்.

"நல்ல வேளை இன்னும் அந்த நிலைமைக்கு வரவில்லை."

"போகட்டும், அன்றைக்குப் பாருங்கள் நான் சைக்கிளில் போனேன்—எனக்குத்தான் புதுப்பழக்கம் என்று தெரியுமே! ஒருவர் நமஸ்காரம் செய்தார் எனக்கு சலாம் போடுவதா, நமஸ்காரம் செய்வதா எனத் தெரியவில்லை. கும்பிடப்போனேன். அதற்கப்புறம் பார்த்தால், நான் ரோட்டிலும், என் மேல் சைக்கிளும் இருக்கிறது! அது முதல், 'சைக்கிளில் போனுல் சலாம் போடுவது; மோட்டாரில் போனுல் நமஸ்காரம் செய்கிறது; நடந்து போனுல் சாஷ்டாங்கமாக விழுந்துவிடுகிறது' என்று தீர்மானித்திருக்கிறேன்."

"நான், நமஸ்காரம் கூடாது என்றால், நீங்கள் செய்யவேண்டிய விதங்களைச் சொல்லுகிறீர்கள். நான் மட்டும், உலகத்தின் சர்வாதிகாரியானால் முதன்முதலாகச் செய்வது 'நமஸ்காரம் செய்யக்கூடாது' என்பேன். அதுவும், தேவர்களைக் கண்டால் தலைக்குமேலே ஒரு அடி கையை உயர்த்தியும், குருவைக் கண்டால் முகத்திற்கு நேராக ஒரு அடி தள்ளி வைத்தும், சிநேகிதனைக் கண்டால் மார்புக்கு நேராக வைத்தும், நமஸ்கரிக்கவேண்டுமாம். எப்படியிருக்கிறது வேடிக்கை. இதுதான் போகட்டும். கடிதங்களில் முன்பின் பழக்கமில்லாதவர்களை எப்படி விளிக்கிறோம்! 'அன்புள்ள ஐயா' 'அன்புமிக்க ஐயா' 'கனம் பொருந்திய' இப்படி அழைத்துவிட்டு, 'தங்கள் கீழ்ப்படிதலுள்ள' 'தங்கள் அன்புள்ள' என்று பவ்வியமாக முடிக்கிறோம். இதற்கு ஏதாவது அர்த்தமுண்டோ! சொல்லுங்கள், சார் சொல்லுங்கள்......"

"அதில் என்ன கெடுதல்?"

"என்ன? என்ன கெடுதலா? இப்படி அநாவசியமாக மை செலவழிப்பானேன். எழுதுகிற நாம் உண்மையான அந்தரங்கத்தோடு எழுதுகிறோமா? மனசில் கைவைத்துச் சொல்லுங்கள். மனசில் நினைக்காத வார்த்தைகளை எழுதுவானேன்? அப்படி எழுதியதற்கு அர்த்தமுண்டா? இப்படி, நினைக்காத அர்த்தத்தைத் தருகிற வார்த்தைகளை எழுதி எவ்வளவு மரக்கால் கணக்காக மை செலவழிகிறது. ஏனய்யா எழுதவேண்டுமென்றால் எல்லாம் சம்பிரதாயம் என்போம். இப்படி எழுதுகிற மையை நல்ல வழியில் உபயோகம் செய்யலாம். உலகத்தில் எவ்வளவு பேர், முன்பின் பழக்கமோ, முகலோபமோ இல்லாத பேர்களை ஆசை வார்த்தைகளால் அழைத்து, பணிவாக கையெழுத்துப் போட்டு கடிதம் எழுதுகிறார்கள். விஷயத்தைச் சொன்னால் போதும்......

"ஏது, ஏது இப்படி ஒரேயடியாக வண்டிபோகிறது. குடை சாய்ந்துவிடாமல் போகிறது......"

"ஐயா. இந்த நமஸ்காரம் செய்தாவது தொலைத்து விட்டுப் போகலாம். கை குலுக்கும் வழக்கம், எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. எத்தனை கைகள், என் விரல்களை கை குலுக்குகிற பாவனையில் நசுக்கியிருக்கின்றன என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? கரும்பாறை போலவும், உலக்கை போலவும், பலாக்காய் முள் இருக்கிறது பாருங்கள் அந்த முள்போலவும் தினுசு தினுசான கைகளை நான் தொட்டிருக்கிறேன். ஆனாலும், பூச்செண்டு போல சில பெண்கள் கைகளிருக்கின்றன. இருந்த போதிலும் இந்தமாதிரி கரடுமுரடான கைகளை நினைத்தால் அந்தச் செண்டு கைகள் வேண்டாம் சுவாமி, வேண்டாம்! இதை அந்த ஆங்கிலேயன் எப்படித்தான் சகித்துக் கொள்ளுகிறானோ? நமக்கும் இந்த வியாதி தொற்றிவிட்டது..........."

"நல்ல வேளை நம்மை ஆங்கிலேயன் ஆண்டு வருகிறான்........இப்படி யில்லாது லாப்லாந்துக்காரன் ஆண்டுவந்தால் நமக்கு மூக்கே இருக்காது; எல்லோரும் சூர்ப்பனகையாக இருப்போம்!"

"அதென்ன சார்; நாம் சந்திக்கும்போது நமஸ்காரம் செய்வதுபோல, அவர்கள் மூக்கோடு மூக்கு தேய்த்துக் கொள்வார்கள் என்று சொல்லுகிறீர்கள்."

"சொல்லுகிறதென்ன? நடக்கிறது; நாளைக்கும் நடக்கிறது. ஆங்கிலேயன் கை குலுக்குவதுபோல பிரெஞ்சுக்காரன் கட்டித்தழுவான்......"

"நம்ப ஆனைக்குட்டியா பிள்ளையை ஒரு பிரெஞ்சுக்காரன் இல்லை, அவ்வளவு பிரெஞ்சுக்காரனும் சேர்ந்து கைகோர்த்துக் கொண்டாலும் முடியாதே!"

"ஆமாம்.....அராபியன் மாரைத்தொட்டுக் கொள்வான். ஒரு தீவில் உள்ள ஜனங்கள் தலைப்பாகை மாற்றிக் கொள்வார்களாம். காலைத் தூக்கித் தொடுவாரும் உண்டு. இதற்கெல்லாம் அர்த்தம் என்னமோ ஒன்றுதான்....."

"அட கடவுளே! நல்லவேளையாக லாப்லாந்துக்காரன் அரசாளாது, இங்கிலீஷ்காரன் அரசாளுகிறானே! இனிமேல் கைகுலுக்கிவிட்டுப் போகிறேன். மூக்கு எட்பூ (எள்ளின்பூ) போல இருந்தாலும் நான் மாட்டேன்! சார், சுப்பையா நமஸ்காரம் செய்தானே, அதில் ஏதாவது அர்த்தமுண்டோ, அல்லது லாபமுண்டோ?"

"லாப நஷ்டம் இருக்கட்டும். வணங்குவதின் நோக்கமென்ன? அதுதான் முக்கியம். வணங்கும் முறை நாட்டுக்கு நாடு வித்தியாசப் படுகிறது. நாட்டுக்குநாடு பாஷை வித்தியாசப் படவில்லையோ, அப்படித்தான். அதன் அர்த்தம் 'நான் உன் நண்பன்' என்பதே. இதைப் பலர் பலவிதமாக வெளியிடுகிறார்கள். இப்படி வெளியிடுவதால் நேசப்பான்மை ஏற்படுகிறது. ஒரு விஷயத்தை 'திடு திப்' பென்று ஆரம்பிப்பதைவிட, அதற்கு பீடிகை போடுகிற மாதிரி முதலில் 'நமஸ்காரம்' செய்துகொள்ளுகிறோம். எதிராளி நமஸ்கரிக்கும் முறையிலிருந்து அவருடைய மனசு நமக்குத் தெரியும். நாய் வாலாட்டாதபோது அதன் பக்கம் நெருங்கினால் நம்முடைய சதை அதன் வாய்க்குள் போய்விடும். அதன் வாலைக் கவனித்தால் போதும். கிட்டே நெருங்கிப் பழகுவதற்கு இதுபோலவே வேண்டியவன் வேண்டாதவன் இவர்களை 'நமஸ்காரம்' செய்யும் பாவனையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

சரிதான்சார்! கொஞ்சம் உண்மையாகப் படுகிறது.

"நமஸ்காரம் சிநேகபாவத்தின் முத்திரை" நம்முடைய ஆந்திர மணவாடுகள் தனி மாகாணம் வேண்டு

மென்கிருர்கள். நம்மைப் பிடிக்கவில்லை. இதனுல் அவர்கள் வியாபாரக் கடிதங்களில் ரூபாய், அணு, பைசா எழுதினுல் போதும். ஆனுல், அப்படி எழுதுவார்களா? மாட்டார்கள். 'அன்புள்ள ஐயா!' 'தங்கள் கீழ்படிதலுள்ள' 'விசுவாசமுள்ள' என்றெல்லாம் போடுவார்கள். அப்படியில்லாவிட்டால் வியாபாரத் தொந்தம் ஏற்படாது. நீங்கள் சர்வாதிகாரியாக வந்து சம்பிரதாயச் சட்டம்போட்டால் உங்களை 'அயோக்கியன்' என்பதைவிட 'சமூகத்தின் விரோதி' என்பார்கள்.

'இன்னும் என்னெல்லாம் உலகம் சொல்லும்! சொல்லுங்கள்.'

'சொல்லுகிறதென்ன நீங்கள். விஷயந்தானே முக்கியம்; இதற்காக மனப்பூர்வமாக உண்டாகாத வார்த்தைகள் வேண்டாமென்கிறீர்கள். சரி அய்யா! இன்றைக்கே அப்படி ஒரு சட்டம் வருகிறது' என்று வைத்துக்கொள்ளுவோம்.

நீங்கள் போகும்வழியில் பிச்சைக்காரன் 'தருமப் பிரபுவே மகாராஜனே, புண்ணியவானே' என்று சொல்லாமல் 'பிச்சைபோடு' என்பான். அவனுக்குப் பிச்சை கிடைக்குமா? நமக்குத்தான் மனசு வருமா? இது போகட்டும்; வீட்டிற்குப் போகிறீர்கள்.

வீட்டுக் காரியத்தை விட்டுத் தள்ளுங்கள்.

இங்கேதான் சுவாரஸ்யம். 'ஏய் உன்னைத்தானே கதவைத் திற' என்று சொல்கிறீர்கள்; 'கதவைத் திற' என்ருல் போதும். 'ஏய்' எங்கிருந்து வந்தது. 'இலை போடம்மா, என் கண்ணல்ல' என்பானேன். 'இலை போடு' என்ருல் போதாதோ! 'ராஜாத்தி' 'இந்தப் பாரு' 'உன்னைத்தானே' 'உங்களைத்தானே' 'கழுதை'

'அடியே' என்ற வார்த்தைகளுக்குத் தனியான முறையில் அர்த்தம் உண்டா? ஆனால் சல்லாபத்தில் இவைகளுக்கு எவ்வளவு அர்த்தபுஷ்டி இருக்கிறது. இதெல்லாம் சொல்லாமல் இருக்கமுடியுமா? என்ன சார்! பதிலைக் காணோம்?

'அதெப்படி யிருக்க முடியும்' பைத்தியம் பிடித்து விடுமே சொல்லாமல் இருந்தால். அதில் எவ்வளவு நயம் ஊடாடிக் கிடக்கிறது. நாம், 'சீ கழுதை' என்று அவளைச் சொன்னால் கோபிக்கிறாளோ இல்லை. அப்படிச் சொல்லாமல் இருக்கவும் முடியாது என்று சிரித்தார். அந்தச் சிரிப்பில் கொஞ்சம் அசட்டுத்தனம், சரச சல்லாபத்தில் உள்ள அசட்டுத்தனம் கலந்திருக்கிறது.

இன்னும் ஒன்று. நம்முடைய குழந்தையை 'இங்கே வா' என்று கூப்பிட்டால் போதும். ஏன் 'அடே ராசால்ல இங்கே வா கண்ணே' என்கிறோம். எப்படிக் கூப்பிட்டால் குழந்தையிடம் குதலைச் சிரிப்பு ஏற்படுகிறது. வெறுமனே கூப்பிட்டால் குழந்தை கவனிக்காது. விஷயத்தை முக்கியமாக வைத்துக்கொண்டால் பாசம், அன்பு, தொந்தம் ஏற்படாது. உலகத்திற்குப் பைத்தியம் பிடித்துவிடும். தாம்பத்திய வாழ்க்கையில் ருசிகிடையாது. தனிப்பட்ட சில வார்த்தைகளும், செய்கைகளும் சமுதாயத்தோடு ஆணிவேர் போட்டு, அசையா மரங்கள்போல் என்றும் நின்று நிழல்கொடுக்கின்றன. சௌகரியமிருப்பதால் சமூகம் நிழலைவிட்டு நகர மறுக்கிறது. வழக்கமாகிய தண்ணீர்விட்டு வளர்க்கிறது.

'பேஷ். நல்ல தத்துவம்' என்றார் நண்பர்.

இன்னும் பாருங்கள். உலகத்தில் இந்திய நாகரீகம் உயர்வானது. கைகுலுக்குவது சுத்தமாகப் பிடிக்கவில்லை

என்றீர்கள். அதில் சுத்தத்திற்கு வழியில்லை. இதைப் போல, மற்ற நாட்டினரின் வழக்கத்தில் குறைபாடு இருக்கிறது. நமது பாரத சமுதாயத்தில் அப்படி அப்பழுக்குக் கிடையாது. சுகாதாரக் குறைவு இல்லை...........இதைப் போலவே, மற்ற விஷயங்களிலும் இந்திய நாகரீகம் மேன்மையுற்று நிற்கிறது......"

* * *

பேச்சு சுவாரஸ்யத்தில் மேல் வானத்தைக் கவனிக்கவில்லை. பிறகு கவனித்தேன். செவ்வானத்திற்கு அப்பால் சூரியன் மறைந்துகொண்டிருந்தான். தங்க பாளங்கள் போன்று மின்னியது வானம். சூரியன் ஆழ்ந்தகாட்சி 'நான் போய்வருகிறேன், நமஸ்காரம்' என்று உலகிற்கு சொல்வதுபோல் இருந்தது.

நண்பரும் நானும் பிரிய முடியாமல் நமஸ்காரம் செய்துகொண்டே பிரிந்தோம்.

* * *

இதைப் படித்த நேயர்களுக்கு என் நமஸ்காரம்.

# சோதிடப் புலி

எனது கதாநாயகன் உ. பிரகஸ்பதி, காலஞ்சென்ற கடன்காரப் பேர்வழி உபகாரநாத பிள்ளையின் திருக் குமாரன். தான் காலமான பிறகு, உ. பிரகஸ்பதி 'பிதிரார் ஜிதத்தை'க் (கடன் வாங்கும் தொழில்தான்) கையாள முடியாமல் போகவே, அங்கிருந்து மூட்டைகட்ட வேண் டியதாயிற்று.

அவன் கட்டிய மூட்டையில் என்னென்ன வஸ்துக் கள் இருந்தன என்று சொல்லுவதைவிட, எவை எவை இல்லையென்று சொல்லிவிடலாம். கரன்ஸி நோட்டுக்கள் இல்லை. பட்டுப் பட்டாடை யில்லை. செந்தமிழ் நாவல் நகைச்சுவை சொட்டச் சொட்ட எழுதிய கட்டுரைகள், தீந்தமிழ் காதற்கதைகள், 'கடுந்தமிழ்' பாட புத்தகங்கள் இத்தியாதி இல்லை. கேவலம் வாகட சொப்பன பல்லி சாஸ்திரங்கள் அடங்கிய சில ஏட்டுப் பிரதிகளும் சோதிட நூல்களுமே யிருந்தன.

கட்டிய மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு அடுத்த தெருவிற்குப் புறப்பட்டான். இவன் வருவதைப் பார்த்த வனிதாமணி, இளமெழுத்தாளனைக் கண்ட பத்திராதிபனைப் போல் நடு நடுங்கி வீட்டுக்குள்ளே ஓடிவிட்டாள். வலது காலை எடுத்து ஒரு அடி தூக்கி முன்னால் எடுத்து வைத்தான்.

அங்கே 'கிட்டிப்புள் விளையாடிக்கொண்டிருந்த சின்னப்பயல்—வனிதாமணியின் தம்பியைத்தவிர வேறு யாராய்த்தான் இருக்க முடியும்?—பிரகஸ்பதியைக் கண்ட மாத்திரத்தில், கிட்டியை எடுத்து இடுப்பில் சொருகி, கையிலிருந்த கம்பைச் சுழற்றிக்கொண்டே, "என்ன எங்கே வந்தே?" என்றான்.

"அக்கா இருக்காளோ" என்றான் பிரகஸ்பதி.

"இல்லை, வெளியே போயிட்டாள்" என்றான் பயல்.

"அக்கா இல்லேன்னு யார் சொன்னா? எப்போ சொன்னா?" என்று குறுக்கு விசாரணை செய்தான்.

"இப்போதான் சொன்னா, அக்கா" என்று சொல்லிப் பல்லைக் காட்டினான் சின்னப்பயல்.

"நான் வந்திருக்கேன், கூப்பிட்டேன்னு சொல்லு" என்று கட்டளையிட்டான்.

அரைகுறையாக எட்டிப் பார்த்த வனிதாமணியைக் கண்டதும், "ஆ 'வனிதா!' நான் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. அதிக நேரம் பேச நான் வரவில்லை. சென்னைக்குப் போகிறேன். இன்னும் ஒரு வருஷம் பொறுத்துப் பார். என்னுடைய பதில் கிடைத்த பின் உனது கலியாணம் நடத்த வேண்டும். இதைச் சொல்லவே வந்தேன். புரிந்ததா?" என்றான்.

வனிதாமணி பதில் பேசவேயில்லை.

## 2

சென்னை வந்த பிறகு நம் கதாநாயகன் தன் அன்ன பானாதிகளை முடித்துக்கொண்டு செல்லரித்த ஏட்டுப் பிரதிகள், புஸ்தகங்கள், ஒரு சிலேட் இவை புடை சூழ, கடையைப் பரப்பினான்.

அநேகர் கை நீட்டினார்கள். (அடித்தார்கள் என்று தப்பர்த்தம் செய்யாதீர்கள்.) காலணா, அரையணாவாக நாலணா வரை சேர்ந்தது. தன்னைப் போல் எத்தனை பிரகஸ்பதிகள் அங்கு இருக்கிறார்கள் என்பதை எண்ண எண்ண, அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. கொஞ்ச நாள் வரைக்கும் சுமாராக ரோதை ஓடிக்கொண்டிருந்தது. பிறகு, வரவர பிரகஸ்பதியின் பொக்கிஷ நிலைமை சரியாக இல்லை.

சென்னைக்கு வந்த அறுபத்தோராவது நாள் காலையில், பிரகஸ்பதி புஸ்தகங்களின் மேல் இருந்த ஈக்களைக் கையால் ஓட்டிக்கொண்டிருந்தான். அந்தச் சமயம் வாரிவிட்ட கிராப்பும், வழித்துவிட்ட முகமுமாய் மூக்குக் கண்ணாடி அணிந்த ஒருவர் அவன் முன்னால் பிரசன்னமானார். அவருடைய முக வெட்டிலிருந்தும், (சொந்த க்ஷவரத்தால் ஏற்பட்ட சில வெட்டுகளும் இருந்தன.) 'மேக்கப்' பிலிருந்தும், அங்க அசைவிலிருந்தும், முகத்தில் வழிந்தோடிய பரவத்திலிருந்தும் தற்போது அவர் ஒரு சினிமாப் பத்திரிகையின் ஆசிரியர் என்ற முடிவுக்கு வந்தான்.

எனது கதாநாயகன் அவரைப்பார்த்த அதே சமயம் ஆசிரியரும் நோக்கினார். அவர் மனதில் ஒருவித எண்ணம் எழுந்தது: தம்முடைய "சினிமா கலகம்" பத்திரிகையில் சோதிடப் பகுதி ஒன்று ஏற்படுத்த எண்ணினார். அந்தப் பகுதிக்கு பிரகஸ்பதியை ஆசிரியராக நியமித்து, அந்தப் பகுதி ஒன்றினாலேயே, பத்திரிகையின் வளர்ச்சியையும் செழிப்பையும் எதிர் நோக்குவதாக சொல்லாமல் சொன்னார். பிரகஸ்பதி கொஞ்சம் 'பிகு' பண்ணவே, சம்பளம் கொடுப்பதாகச் சொன்னதோடு நில்லாமல், ஆசிரியர் கன்னத்தில் அடித்து, (தமது கன்னத்தில்தான்) தோப்புக் கர்ணம் போடக் கூடத் தயாராயிருந்தார்.

கடைசியாகப் பிரகஸ்பதியும் ஒப்புக்கொண்டான். சம்பள விஷயத்தைப் பற்றி மட்டும் கேட்டு விடாதீர்கள்.

பிரகஸ்பதி சோதிடப் பகுதியின் அவசியத்தைப்பற்றி ஹாஸ்ய ரஸத்தில் பேனவைப் தோய்த்து வெளு வெளு வென்று வெளுத்து வாங்கி இருந்தான். அந்த வாரத்தில் எல்லாப் பிரதிகளும் (அச்சடிக்கப் பட்டவை நூறுதான்) விற்பனையாயின. ஐம்பது பிரதிகளுக்குமேல் வாங்கினவன் யாரென்று கேட்டாலும் கேட்காவிட்டாலும், அது பிரகஸ்பதிதான் என்று நிஸ் சந்தேகமாகக் கூறிவிடலாம்,

'சினிமா கலகத்தின் விற்பனை வளர ஆரம்பித்தது. முதன் முதலில் என்ன முகூர்த்தத்தில் விற்பனைப் பிரதிகள் பிரகஸ்பதி வாங்க ஆரம்பித்தானோ? வாரா வாரம் சோதிடப் பகுதியில் நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்கப்பட்டன. மூன்று கேள்விகளுக்கு இரண்டு ரூபாய் ஏற்படுத்தி, கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அநா யாசமாக பதில் எழுதி வந்தான். இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற மூன்று காலங்களிலும், கேள்விகள் கேட்கப்பட்டன. இறந்த கால நிகழ்கால கேள்விகளுக்கு வெண்டைக்காயை ஆமணக்கெண்ணெய் ஊற்றித் தாளித்துக் கொட்டியதுபோல் பதில் எழுதி விடுவான். எதிர் காலம். 'ஆம், அதைப் பற்றித்தானே துணிவாக எழுத முடியும்.' பிரகஸ்பதி இதைக் கையாண் டதில்—ஆச்சர்யமும் அதிசயமுமில்லை. பத்திரிகையின் விற்பனை ஐந்நூறு பிரதிகள் வரை உயரத் தொடங்கியது.

## 3

ஆறு மாதங்கள் ஓட மறைந்தன. பத்திரிகையின் விற்பனை வளர வளர பிரகஸ்பதியின் காதலும் வளரத் தொடங்கிற்று. தன் சொந்த ஊருக்கு ஒரு முறை போய்வர எண்ணினன்.

இதுவரைக்கும் பிரகஸ்பதியின் பிறந்த ஸ்தலத்தைப் பற்றிச் சொல்ல மறந்துவிட்டதற்கு, நேயர்கள் சார்பாக நான் என்னையே மன்னித்துக்கொள்ளுகிறேன்.

பிரகஸ்பதி பிறந்த இடம் சிந்து பூந்துறை. "ஆ." சிந்து பூந்துறையா? எவ்வளவு அழகான பெயர்? பூக்கள் சிந்தக்கூடிய துறை; அதாவது இடம். எவ்வளவு சொகுசாக அமைந்திருக்கிறது. சிந்து பூந்துறையில் சந்தனக் காடுகளும், சண்பகச் சோலைகளும், கொஞ்சும் பைங்கிளிகளும், ரஞ்சித வனங்களும், பச்சைப் போர்வை போர்த்தது போன்ற சம்பா நெல் வயல்களும், வானுற ஓங்கி வளம் பெற வளர்ந்த முக்கனி மரங்களும், அல்லி, தாமரை, நீலோற்பலம் முதலிய புஷ்பங்களில் மெல்லென மிதித்து விளையாடும் அன்னங்களும் வாத்துக்களும், இன்னோரன்ன பிறவோடு இயற்கையன்னை கொலுவீற் றிருப்பாளென்று கற்பனை ஓடுகிறதல்லவா?

ஆனால், உண்மையாக நீங்கள் காண்பது ஊரைச் சுற்றி ஏழெட்டுச் சுடுகாடு. ஒன்றிரண்டு வேலையில்லாத் திண்டாட்டத்தில் கிடந்து முழிக்கின்றன. எங்கு நோக்கினும், கன்னங்கரிய தூண்கள்போல் நிற்கும் இடி விழுந்த மொட்டைப் பனைமரங்கள். சில நூற்றாண்டுகளாகப் புல்பூண்டு முளையாத விளைநிலங்கள். மருந்துக்குக் கூட சில யுகங்களாகத் தாமரை முளையாத வாவி, தடாகங்கள். இத்தியாதி சிறப்புக்கள் பரிபூரணமாய் நிறைந்து விளங்கும் பூம்பொழில் 'சிந்து பூந்துறை' என்று என் கதாநாயகன் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பிரகஸ்பதி சிந்து பூந்துறையை நோக்கி வந்தபொழுது அவனுடைய மனதில் எத்தனையோ கேள்விகள் எழுந்தன. வனிதாமணி 'தன்னுடைய வேலை யென்ன? சம்பளம் எவ்வளவு? அதோடு ஏதாவது கிம்பளம்?' இப்படியாகக்

கேட்டால் என்ன பதில் சொல்லுவது? 'சினிமா கலக'த்தின் சோதிடப் பகுதியின் ஆசிரியர் என்று சொல்லலாமாவென நினைத்த பொழுது வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்னத் தொடங்கியது. வனிதாமணியின் கேள்விகளுக்கு எப்படிப் பதில் பேசுவது என்று முன் யோசனை செய்து கொண்டு போனான் பிரகஸ்பதியாகிய சோதிடப்புலி.

பிரகஸ்பதி வனிதாமணியின் வீட்டிற்குள் போன சமயம், அவள் 'சினிமா கலகம்' படித்துக் கொண்டிருந்தாள். அதுவும் சோதிடப் பகுதி படித்துக் கொண்டிருந்தாள் என்று சொல்லவேண்டியதில்லை. இதைப் பார்த்ததும், அவன் உச்சி குளிர்ந்து விட்டது.

"ஆ, கண்மணி வனிதா, நான்தான் அந்தப் பகுதியின் ஆசிரியர்" என்று சொல்ல நினைத்தான். ஆனால், நாவெழவில்லை. "நீ ஒழுங்காக இந்தப் பகுதி படிப்பதுண்டோ?" என்று நாசூக்காக ஒரு கேள்வியைப் போட்டு வைத்தான்.

"யார்? நானா? சேச்சே. 'அந்த மாதிரியான நல்ல வழக்கம் என்னிடம் கிடையாது.' அப்பாவுக்கு இதில் கொஞ்சம் சபலம். நாங்கள் சந்தாக் கட்டவில்லை. ஆனால், பத்திரிகை இனமாக வருகிறது. தூக்கம் வருவதற்காக இதைப் படிப்பேன்" என்று பதில் சொன்னாள். (இலவசமாகப் பத்திரிகை அனுப்பியது பிரகஸ்பதிதான் என்று சொல்லாமல் சொல்லியிருப்பதின் நயம் கவனிக்கத்தக்கது.)

இந்த நெருக்கடியான சமயத்தில் வனிதாமணியின் தகப்பனார் வந்துவிட்டார். அவரைக் கண்டவுடன் க்ஷேமலாபங்களை விசாரித்து வனிதாமணியின் கலியாண விஷயத்தில் கொண்டு வந்து நிறுத்தினான். அவர் சொல்லிய

மாதிரியிலிருந்து கலியாணம் இன்னும் நாலைந்து மாதத்தில் நடக்குமென்றும், பிரகஸ்பதிக்கே கொடுப்பதாக ஜாடை ஜாடையாகச் சொன்னார்.

விஷயங்கள் திருப்திகரமா யிருக்கவே, அடுத்த ரயிலில் சென்னைக்குக் கிளம்பினான் உ. பிரகஸ்பதி.

# 4

ஒரு நாள் மாலையில் பிரகஸ்பதி ஆபீஸிலிருந்து ஜாகைக்கு வந்துகொண்டிருந்தவன் தன்னூர் சிநேகிதன் கோபியைச் சந்தித்தான். கோபியின் வரலாறு தெரிய வந்ததில், அவனுடைய தகப்பனார் அடித்துத் துரத்தி விட்டார் என்பது சாராம்சமாகும். இருவரும் பேசிக் கொண்டே பிரகஸ்பதியின் இருப்பிடத்தையடைந்தார்கள்.

"ஏண்டா, பிரகஸ்பதி. நீ எனக்கு கொஞ்சம் உதவி செய்யவேண்டும்" என்றான். இதைக் கேட்டதும் பிரகஸ்பதியின் வயிற்றில் புளியைக் கரைத்தது போலிருந்தது. இருந்தாலும் விட்டுக் கொடுக்காமல், "அதற்கென்ன, பார்ப்போம்" என்று சொல்லிவைத்தான். கோபி மேலும் பேசத்தொடங்கினான் :—உனக்கு 'சினிமா கலக'த்தின் ஆசிரியரைத் தெரியுமா?"

"ஏதுடா என்ன விஷயம்? ஏதேனும் வேலைக்காகவா?"

"சீச்சீ. அந்த ஆபீஸிற்கு வேலைக்குப் போவதில் எனக்கு லாயக்கு உண்டா? நான் வேறு விஷயத்திற்காகக் கேட்கிறேன்."

"என்ன விஷயம்? எனக்குத் தெரியலாமோ?"

"உன்னிடம் சொல்லத்தானே வந்தேன். 'சினிமா கலக'த்தின் ஜோதிடப் பகுதி எழுதும் ஆசாமியைக் குல்லாப் போடவேண்டும்" என்று சொன்னான்.

"என்ன பிரமாத விஷயம், சொல்லுடா," என்றான் பிரகஸ்பதி.

"நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் மற்றொருவனைக் காதலிக்கிறாள்."

"அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லையே. உலகத்திலேயே அப்படித்தான் வழக்கம். பெண் எந்த ஊரில் இருக்கிறாள்?" என்று விரைவாகக் கேட்டான் பிரகஸ்பதி.

"இல்லேடா நம்ம — நம்ம — சிந்துபூந்துறையில்." இதைக் கேட்டதும் பிரகஸ்பதியின் உடம்பு ஜில்லிட்டு விட்டது. இருதயம் படபடவென அடித்தது. குளறிக் கொண்டே "அவள் யாரென்று நான் அறியலாமோ?" என்று கேட்டான்.

"அவளைத் தெரியுமோ என்னமோ? அவள் ஊருக்குப் புதுசு. பெயர் சுந்தரம். மாமன் வீட்டிற்கு கோடை விடுமுறைக்கு வந்திருக்கிறாள் அவள்."

ஒருவாறு பிரகஸ்பதியின் ரத்த ஓட்டம் பழைய நிலைமை அடைந்தது. முகத்தில் புன்னகை தவழ்ந்தது. மனதிற்குள், "நல்லவேளை, நான் பயப்பட்டுப்போனேன். எண்ணிய படியில்லை" என்று நினைத்துக் கொண்டே, "சரி, குறையும் சொல்லு" என்றான்.

"அவள்—அதுதான் எனது காதலி சுந்தரம்—வெகு காலமாக இன்னொருத்தனை நேசிக்கிறாள். ஆனால் என்னையும் மறந்து விடவில்லை. என்னையே கட்டாயம் கலியாணம் செய்து கொள்ளுவாள். எங்கள் இருவரில் யாரை மணப்பது என்ற கேள்வி எழுந்தது. சோதிடப் பகுதிக்கு எழுதித் தீர்மானம் செய்வதாக முடிவும் செய்யப் பட்டிருக்கிறது. அந்தச் செய்தி இன்றையத் தபாலில் வந்து சேரும்......"

"பலே நீ பெரிய பளுவன்" என்று சர்டிபிக்கட் கொடுத்தான் பிரகஸ்பதி.

"உன்னுடைய தமாஷ் இருக்கட்டும். கொஞ்சம் தயவு செய். சோதிடப் பகுதியின் ஆசிரியரைப் பார்த்து, விஷயத்தைச் சொல்லி காரியத்தை முடிக்க வேண்டும். சீக்கிரம் போவோம் வா" என்று துரிதப் படுத்தினன்.

"வேறு எங்கும் போக வேண்டாம். உனக்கு நாளைக்குப் பதில் கொடுக்கிறேன்" என்று அலக்ஷியமாக பிரகஸ்பதி சொன்னன்.

"அடே உன்னுடைய கையில்தான் என்னுடைய தலையெழுத்து அடங்கி யிருக்கிறது, சோம்பலைப் பார்க்காமல் அந்த மகானுபாவரைப் பார்க்கப் போகலாம். வா, உனக்குப் புண்ணியம் உண்டு" என்று கெஞ்சினன்.

"நீ யாரிடம் குல்லாப் போடுகிருயோ, அதே ஆசாமி தான் சோதிடப் பகுதியின் ஆசிரியர். நான்தான் அவர்; அவர்தான் நான்."

"நிஜந்தான? அடபாவி; அப்போதே சொல்லியிருக்கக்கூடாதா" என்று அதியாச்சர்யப்பட்டான் கோபி.

"ஆமாம், நான்தான் என்ருல் நான்தான். வேறு யாருமில்லை. நாளைக்கு நீ சொல்லிய கடிதத்திற்குப் பதிலை உனக்குக் காண்பிக்கிறேன்" என்ருன் சிரித்துக் கொண்டே.

கோபி, சிறிது நேரம் சென்றதும் தனது உறவினர் ஒருவரைப் பார்க்கப் போவதாகச் சொன்னன்.

## 5

பஞ்ச பஞ்ச உஷத் காலத்தில் எழுந்த ஹோட்டல் கார கோரமய்யர் "அந்தப்பால்கார தடிப்பயல் எங்கே?" என்று கேட்டுக் கர்ஜிக்கும் காலத்திலே, நாதசுர நாகய்யா, ச, ரி, க, ம, ப, த, நி என்ற சப்த சுரங்களைத்

தனித் தனியே பிரித்தெடுத்து, தாவிப்பிடித்து, குழாயில் போட்டுக் குலுக்கி, எல்லா ஸ்தாயிகளிலும் அப்படி அப்படி அங்கங்கே பாதாளத்திலும் அந்தரத்திலும் நிறுத்தி வாசிக்கும் நேரத்திலே, கிழக்கு வெளுத்ததைக் கண்ட சூரியன் முகம் சிவந்து அவசரம் அவசரமாக வெளியே வந்த சமயமும், எனது கதாநாயகன் உ. பிரகஸ்பதியின் பள்ளியெழுச்சி நடந்த சமயமும் ஒன்று யிருந்ததைத் தவிர வேறு விசேஷமில்லை.

மணி ஒன்பது அடித்ததும் பிரகஸ்பதி ஆபீசுக்குப் புறப்பட்ட பொழுது ஒற்றைப் பார்ப்பான் இரட்டைக் காலோடு வந்தது வாஸ்தவந்தான். கோபி சொல்லிய கவரை எடுத்து உடைத்துப் பார்க்காமலே பதில் எழுதி முடித்தான். இதே போன்ற மற்றைய கேள்விகளுக்கும் பதில் எழுதிக் கொண்டிருந்த சமயம் கோபி வந்து சேர்ந் தான். பிரகஸ்பதி தான் எழுதிய பதிலைக் கோபியின் கையில் கொடுத்தான். அதில்,

"நாம் கடிதத்தைப் பார்த்தோம். எங்களுடைய புத்திமதிகளைப் பின்பற்றுவீர்கள் என்ற நம்பிக்கையில் எழுதுவோம். தங்களுடைய முதல் காதலனால் எவ்வித பிரயோஜனமுமில்லை. அவன் ஒரு முட்டாள். இரண்டாவது காதலனின் கிரகங்கள் அதிர்ஷ்ட திக்கில் ஓடுகின்றன. பொருளும் பூமியும் பெறுவான். இது அரிய சந்தர்ப்பமாதலால், கைவிடாமல் இரண்டாவது காதலனை மணம் செய்து கொள்ளவும்."

கடிதத்தைப் படித்ததும், "ரொம்ப சரி. நீ இவ்வாறு உதவி செய்ததற்கு நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?" என்று பச்சாத்தாபப் பட்டான்.

"கைமாறு என்ன, கைமாறு வேண்டிக் கிடக்கு? ஒரு விளக்குமாறும் வேண்டாம். ஊருக்கு எப்போ?" என்றான் பிரகஸ்பதி.

"சாயங்காலம் உன்னைப் பார்க்கிறேன்; போய்வருகிறேன்" என்று மறைந்தான் கோபி.

சாயங்காலம் பார்த்தான்; கோபி வரவில்லை. மறு நாள் "ஊஹூம்" கோபியைக் காணோம். அதற்கடுத்த நாளும் வரவே யில்லை. நாலைந்து நாள் ஆயிற்று; ஆசாமியைக் காணோம். ஒரு வாரம் சென்றது; கோபியின் நிழல்கூட வரவில்லை என்றால், கோபியைப் பற்றிக் கேட்பானேன்.

# 6

ஒரு நாள் மாலை பிரகஸ்பதிக்கு வழக்கம்போல் அசமந்தம் பிடித்தாற் போலிருக்கவே சினிமாப் பார்க்கப் புறப்பட்டான். இவன் போகு முன்பே, காட்சி ஆரம்பிக்கப்பட்டது. கொஞ்ச நேரம் சென்றது. விளக்குகள் ஏற்றப்பட்டன. அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. இரண்டு மூன்றுதடவை கண்ணை நன்றாக மூடிக்கொண்டு கூடப் பார்த்தான்.

சந்தேகத்தை பக்கத்திலிருந்தவரிடம் நிவர்த்தித்துக் கொள்ள எண்ணினான்.

"அதோ இருக்கிறது பெண்தானே? அவள் பெயர் உங்களுக்குத் தெரியுமா?" என்று ஜோதிடப் புலி கேட்டான். ஆசாமி பிரகஸ்பதியை 'பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையை முறைத்துப் பார்ப்பதுபோல்' பார்த்துவிட்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டார். மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல் சங்கடப்பட்டுக்கொண்டே, "என் வனிதா, நீதானா?" என்று கேட்டுவிட்டான்.

வனிதா வாய் மூடி மௌனியானுள். ஒரு பார்வை பார்த்துவிட்டுத் திரும்பிக்கொண்டாள்.

"வனிதா என்ன, இங்கே தனியாக வந்திருக்கிருய்? எப்பொழுது வந்தாய்?" என்று கேட்கத் தொடங்கவே "ஏன் யாரது? உன்னிடம் பேசப் பிரியப்படாதவளிடம் என்னய்யா பேச்சு வேண்டிக் கிடக்கு?" என்ற குரல் கேட்டது. அந்தக் குரல் வேறு யாருடையதுமில்லை; நீங்கள் நினைத்தபடி அந்தப் பெண்ணிற்குச் சொந்தமான கோபியின் குரல்தான்.

"என்ன கோபியா? சரியாப் போச்சு; எப்போ வந்தாய்?" என்று மேளதாளத்துடன் குசலம் விசாரிக்க ஆரம்பித்தான்.

"சரிடா சரி. நீ இப்போது பேசியது வனிதாமணியிடம் இல்லை. மிஸஸ் கோபியிடம் பேசுகிருய். ஞாபகம் இருக்கட்டும்" என்று தொண்டை கிழியக் கத்தினுன்.

இதைக் கேட்டதும் பிரகஸ்பதி தமிழ் டாக்கி பார்ப்பதற்காக எடுத்து வந்திருந்த பஞ்சை காதில் வைத்துக் கொண்டான். "அடாடா இந்தக் கோபி என்னை ஏமாற்றி விட்டான். அவனுக்கு நான்தான் ஜோதிடப் பகுதியின் ஆசிரியர் எனறு தெரிந்திருக்கவேண்டும். தெரியாதவன் போல் நடித்து, எனக்குப் பெரிய கோபியைக் குழைத்துச் சாத்திவிட்டான். ஆமாம்; வனிதா; அவள் என்ன செய்ய முடியும்? மைக்கறை படிந்த என்னுடைய சொந்தக் கையாலேயே எழுதிய பதிலைப் பார்த்த பின்பு அவள் கலியாணம் செய்து கொண்டிருக்கிருள். வனிதாமணி என்பதற்குப் பதில், சுந்தரம் என்று சொல்லி ஏமாற்றி விட்டான் அந்தக் கோபி. என்னுடைய தலையெழுத்து எனக்கே தெரியவில்லை," என்று எண்ணி உழன்ருன்.

உடனே அவனுடைய இரு கண்களும் சுழன்றன. பூகோள பாடத்தில் சொல்லிய சொல்லியபடி உலகம் சுற்றுவது அவன் கண்ணுக்குத் தெரிய வந்தது. அடுத்த விநாடி கோபு சினிமாவை விட்டு வெளியே நடந்தான்.

# விஷமும் விஷயமும்

தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன் சோணு சலம் பி. ஏ. (ஹானர்ஸ்) மதவக் குறிச்சிக்கு வந்தான். மதவக் குறிச்சி ஒரு பட்டிக்காடு. பட்டதாரியான ஒருவன் பட்டிக்காட்டிற்கு வந்திருப்பதால் நீங்கள் ஏதோ கிராமப் புனருத்தாரணம் செய்ய வந்திருக்கலா மென்று எண்ணிவிடக்கூடாது. தீபாவளிக்காகத் தன் தாயாரின் வற்புறுத்தலின் பேரில் நாலே நாள் தங்கிவிட்டு மறுபடி பட்டணத்திற்கு வந்து தன் வேலையைத் (என்ன வேலை தெரியுமா? வேலைக்காக மனுப்போடும் வேலை) தொடங்க நினைத்தான்.

பட்டதாரிகளுக்குக் கிராமங்களில் ஒருமணி நேரங்கூட இருக்க முடியாது. அதிலும் மதவக் குறிச்சியில் ஒரு ஓட்டுக்கட்டோ, கேவலம் ஒரு காப்பிக்கிளப்போ கிடை யாது. அப்படியிருக்க, சோணுசலம் பி. ஏ. (ஹானர்ஸ்) இக் கிராமத்தில் நாலு நாட்களை, நான்கு யுகமாகக் கழித்துத் தொலைக்க, முக்கியமாகத் தூக்கத்தையே நம்பி யிருந்தான். ஆகவே, சாப்பிட்டபின், பிரயாண அலுப்புத் தீரத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

நாலு மணி சுமாருக்கு, 'என்ன, பையன் வந்தவன் தூங்குகிறுன் போலிருக்கு' என்று சொல்லிக்கொண்டு ஸ்ரீமான் வைத்தியம் பிள்ளை வந்தார்.

சோணாசலம் பி. ஏ. ஹானர்ஸ், ஒரு தடவை பெரு மூச்சு விட்டுவிட்டு, மல்லிகைக் கொடியைப் பார்த்தான். அக்கொடி அங்கே துவண்டு ஆடிக்கொண்டிருந்தது; ஆனால், அதன் பக்கம் ரஞ்சிதம்—சற்று முன் நின்ற ரஞ் சிதம்—இல்லை. இக்காட்சி, அவனுக்குச் சந்திரன் இல்லாத வானத்தை நினைப்பூட்டியது. உடனே வானத்தைப் பார்த்தான்.

காதல் வந்து விட்டால் மனிதன் சக்திக்கு மீறிய காரியங்களைச் செய்து விடுவது இயல்பாம். மண்ணையும் விண்ணையும் சாடுவார்களாம். ஆனால், நமது சோணா சலமோ, அதற்கெல்லாம் மேலாக ஒரு காரியம் செய்ய நினைத்தான். அதாவது அப் பட்டிக்காட்டில் தன் வாழ் நாள் முழுதும் கழித்துவிடத் திட சங்கல்பம் செய்து விட்டான்.

இந்த சமயம் "என்னடாப்பா தோட்டத்துக்குள் வந்தவன் இப்படியே உட்கார்ந்திருக்கிறாய்? காப்பி போட்டு உனக்காக வைத்திருக்கிறேன். வாடா அப்பா" என்று தன் தாயார் கூப்பிட்டது காதில் விழவே, சோணா சலம் இந்த உலக நினைவிற்கு வந்தான்.

"காப்பியா, அம்மா? எனக்கு வேண்டாம்" என் றான் சோணாசலம்.

காதல் கொண்டு விட்டால் உணவு செல்லுமா? உறக் கந்தான் கொள்ளுமா? இப்படி நடக்கவேண்டுமே என்றுதான் பிச்சம்மாள் தன் பிள்ளையைத் தீபாவளியைச் சாக்கிட்டு, மதராசிலிருந்து அழைத்திருந்தாள். அவள் மனோரதத்திற்குக் குதிரை பூட்டியமாதிரி இருந்தது சோணாசலம் காப்பி வேண்டாமென்று பதில் சொல்லி யதும்.

# 3

மறுநாள் பொழுது விடிந்தது. சோணாசலம் எட்டு மணி சுமாருக்கு ஸ்ரீமான் வைத்தியம் பிள்ளையின் வீட்டுக்குள் நுழைந்தார். "வாருங்க மருமகப் பிள்ளைவாள். காப்பி பலகாரம் ஆச்சா?" என்று கேட்டார். சோணாசலம் தலையை அசைத்தான்.

வீட்டுக்குள்ளிருந்து எது வீணையின் நாதம், எது ரஞ்சிதத்தின் குரல் என்று பேதம் தெரியாதபடி தோடி ராகம். "யார் போய்ச் சொல்லுவார்? எனக்கான பேரையும் காணோம்?" என்ற அடிகளாக சோணாசலத்தின் காதில் விழுந்தது. ரஞ்சிதம் யாரோ வருகின்ற காலடிச் சப்தம் கேட்டு மெதுவாகப் பாட்டையும், வீணையின் சுருதியையும் நிறுத்திவிட்டாள்.

"ஐயையோ நான் அசந்தர்ப்பமாக வந்துவிட்டேன். பாடியதுகூட நின்றுவிட்டது" என்று வருத்தம் கனியச் சொன்னான்.

"அதற்கென்ன, நாளைக்குத் தீபாவளி; வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் பாடச் சொல்லுகிறேன். இப்படி இங்கே வந்து உட்காருங்கள்" என்று உபசாரம் செய்தார்.

சோணாசலம் உட்கார்ந்தான்.

"சார் தந்தி," என்ற குரல் கேட்டது. ஸ்ரீமான் வைத்தியம் பிள்ளை முற்றத்திற்குப் போய்த் தந்தியை வாங்கிக் கொண்டு, நாலு சொம்புத் தண்ணீரைத் தலையில் விட்டவுடன் ஈரவேஷ்டியுடன் மந்திர உச்சாடனம் செய்ய உட்கார்ந்து விட்டார்.

"அப்பா வேப்பங்குழை" என்றவள் ஒரு பிடியை அவர் கையில் கொடுத்தாள். அவருடைய கைக்குள் அகப்பட்ட வேப்பங்குழை வேகமாக ஆட ஆரம்பித்தது.

மனதிற்குள்ளே சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த சோணாசலம், ஜன்னல் பக்கமாகத் திரும்பினான். அதன் பின் கடலினும் பெரிய கண்களில் அகப்பட்டு, நிலை தடுமாறிக் கொண்டிருந்தான்.

அவ்வீட்டில் மௌனம் குடிகொண்டது. இரண்டு நிமிஷத்திற்குப் பின் "பாடுவதெல்லாம் தமிழ்ப்பாட்டுக்கள் தானா?" என்று பேச்சுக் கொடுத்தான்.

"அப்பாவுக்கு அதில்த்தான் பிரியம்; எனக்கும் அப்படியே"

"எனக்கும் அப்படித்தான்" என்று சோணாசலம் சொல்லிக்கொண்டே ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தான். அதில் முதல் நாள் அவனே கவனம் செய்திருந்த ஒரு பாட்டு எழுதியிருந்தது அதைப் பாடிக் காட்டினான்.

"உங்களுக்குப் பாடத் தெரியுமா?" என்று கேட்டாள் ரஞ்சிதம்.

"ஏன், இந்த சந்தேகம்? நான் இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறேன்?"

"பேசிக் கொண்டிருக்கிறீர்கள்."

"சற்று முன் பாடத்தானே செய்தேன்?"

இருவரும் சிரித்தார்கள்.

"இது யாருடைய பாட்டு?"

"நன்றாய் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"நன்றாய் இருந்தால் ஏன் கேட்கிறேன்?"

"நன்ருய் இல்லை என்று சொல்லுகிருய்?"

"நான் அப்படிச் சொல்லவில்லையே."

"உன்னோடு எனக்குப் பேசத் தெரியாது."

"உங்களுக்குப் பேசத் தெரியாதா?" என்று சிரித்தாள் ரஞ்சிதம். பிறகு இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

* * *

ஸ்ரீமான் வைத்தியம் பிள்ளை மந்திர உச்சாடனம் முடிந்து அங்கு வந்தார். அவருடைய கையில் வேப்பங் குழை குழைந்து கொண்டிருந்தது. மெதுவாக, "நேற்று உங்கம்மா இங்கே வந்திருந்தாள்" என்று சொல்லி நிறுத்தினர்.

"இருக்கலாம்" என்ருன் சோணசலம் பி. ஏ. ஹானர்ஸ்.

"வந்தவர்கள் சும்மா போகவில்லை."

"ஏன், என்ன நடந்தது?"

"ரஞ்சிதம் அழகாக இருக்கிருளாம்" என்று பிள்ளை சொன்னதும் ரஞ்சிதத்தை சோணசலம் ஒருமுறை பார்த்தான். மேலும் தொடர்ந்து பிள்ளை சொல்ல ஆரம்பித்தார். "ரஞ்சிதத்தின் முகத்தில் கிளி கொஞ்சுகிறதாம்; முத்துப் போல் பேசுகிருளாம்; இதனுல் நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துக் கொடுக்கச் சொன்னுள்." உங்கள் துப்பில் யாராவது இருந்தால் பார்த்துச் சொல்லுங்கள்.

சோணசலத்திற்கு வெட்கமும் கோபமும் சரிபாதியாகக் கலந்து வந்தன.

"நான் இருக்கிறேனே" என்று சொல்லிவிடக்கூட நினைத்தான். ஆனுல், சொன்னதோ, "பார்த்துச் சொல்லுகிறேன்" என்ற வார்த்தைகளே.

ஸ்ரீமான் பிள்ளையோ, " இன்னொரு விஷயம். அதாவது மாப்பிள்ளை பி. ஏ. யாக இருக்க வேண்டும். பி. ஏ. ஹானர்ஸ் என்றால் ரொம்ப நல்லது. எஸ். எஸ். எல். ஸி. படித்தவளுக்கு ஹானர்ஸ் மாப்பிள்ளைதான் வேணும்" என்று பேச ஆரம்பித்தார்.

சோணாசலம், "பெண்ணுக்குப் படித்த மாப்பிள்ளை வேணும்; தாயாருக்கு பணக்கார மாப்பிள்ளை வேணும்" என்றான்.

"ஐயையோ, அவள் ஞாபகத்தை ஏன் எடுத்துவிட்டீர்கள்?" என்று பாம்பை மிதித்து விட்டாற்போல் சொன்னார் பிள்ளை. அவர் குரலில் பச்சாத்தாபமும் தாம்பத்திய அன்பும் கலந்திருந்தன.

சோணாசலம், " ரஞ்சிதம் சொன்னாள்; அவள் தாயார் நாலு வருஷத்திற்குமுன் பாம்பு கடித்து இறந்துவிட்டதாகவும், தாங்கள் எவ்வளவோ குழையடித்தும்........." என்று சொல்லி நிறுத்தினான்.

"நாசமாய்ப் போகிற பாம்பு எப்படியோ அவள் உயிரைக் குடித்துவிட்டது. அது சொல்லப் போனால் பாரதம். நான் அப்போது ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தேன். அன்றைக்கு 317-ம் நம்பர் ஷெட்டுலுக்குப் பச்சைக் காட்டிக்கொண்டிருந்தேன். ரஞ்சிதம் ஓடிவந்து 'அம்மாவுக்கு பாம்பு கடித்துவிட்டது' என்றாள் அப்படியே மரம் போல் சாய்ந்துவிட்டேன். திடீரென விழித்தேன்........."

இதற்குள் சோணாசலம் தொடர்ந்து, " நீங்கள் மரம் போல் சாய்ந்துவிட்டீர்கள். பாயிண்ட்ஸ்மேன் பண்டாரம் எங்கோ தொலைந்து போனான்; ஓடிப்போய் பாயிண்டு அடித்தீர்கள். வீட்டிலோ, விஷம் தலைக்கேறிவிட்டது, அப்புறம்......" சொன்னான்.

"நேரில் பார்த்தது போல் சொல்லுகிறீர்களே......... ரஞ்சிதம், 'இவர்களுக்கு இதை யெல்லாம் எப்போ சொன்னாய்? நீ சொல்லிக் கொடுத்தபடி ஒப்பிக்கிறார் களே'...........சரிதான் நிச்சயமாக ரஞ்சிதத்திற்கு பி. ஏ. ஹானர்ஸ் படித்த மாப்பிள்ளை......"

"போங்க அப்பா" என்று வெட்கத்துடன் ரஞ்சிதம் சொல்லிக்கொண்டு ஓடினாள். அந்த ஓட்டத்தை மட்டும் ஒரு மான் பார்த்திருந்தால் வெட்கத்தினால் தற்கொலை செய்திருக்கும்.

"இந்த சமயம் பார்த்து, "அம்மா.........ஏ ஏ" என்ற கன்றுவின் பயங்கர அலறல் கேட்டது. கன்றின் குரலைக் கேட்டு, ஸ்ரீமான் வைத்தியம் பிள்ளை பதை பதைக்க ஓடினார். அவர் பின்னால் ரஞ்சிதமும் ஓடவே, சோணாசலம் பின் தொடர்ந்தான். கன்றின் அலறல் சோணாசலத்தின் தோட்டத்திலிருந்து வந்ததால், அப் பக்கத்திற்கு ஓடினார்கள்.

## 4

வாழை மரத்தின் நடுவில் வாழைத்தண்டு எப்படியோ, அப்படித்தான் இக்காதற் கதையின் நடுநாயகமாக விளங்குகிறது எருமைக் கன்றுக்குட்டி. அந்தக் கன்றினால், மகத்தான காதல்—வாழ்க்கையே பாழாகப் போகிறது. பாவம், அவ்வாயில்லாப் பிராணிக்கு இதெல்லாம் தெரியவா போகிறது?

காதல் வாடி வதங்கிப் போய்விட்டதின் விபரத்தை சற்று விபரமாகச் சொல்லவேண்டும். கன்றுக் குட்டிக்கு; சோணாசலத்தின் தோட்டத்திலிருந்த பூசணியின் இளந் தளிர் மேல் காதல் பிறந்து விட்டது. பூசணித்தளிர்களின்

சௌந்தர்ய உணர்ச்சியில் தாகம் பொங்க ஆரம்பித்ததும் அவைகளைத் தின்றது. அதன் பின் சுவரேறி விழுந்து, தளிர்களின் தாயகமான கொடியையே வேரோடு விழுங்க ஆரம்பித்தது.

இந்த வேளையில் சோணசலத்தின் தந்தை அதைப் பார்த்து விட்டார். அவர் உயிரே (அவருக்கு உயிர் பூசணிதானே) போய்விட்டது. தடி எடுத்து வந்தார். மறு நிமிஷம் கன்றுக்குட்டி 'அம்மா மா........ளள' என்று அலறியது. இது கேட்டுத்தான் வைத்தியம்பிள்ளை ஓடி வந்தார்.

வந்தவர் பார்த்தார்; அந்த இடத்திலேயே மூர்ச்சை யடைந்தார். அவருக்கு மூச்சு வந்து கொண்டிருந்தது கன்றுக்குட்டிக்கு வரவில்லை.

வீட்டுக்குள்ளிருந்து ஓடோடி வந்த பிச்சம்மாள், "வெண்ணெய் திரளும் சமயம் தாழியை உடைத்து விட்டீர்களே" என்று கதறினாள்.

"என் அருமாந்த பூசணிக் கொடி வேரோடு போய் விட்டதே" என்று தம் மனைவியைப் பார்த்துச் சொன்னார். அவர் கண்களிலே, கண்ணீர் முத்துக்கள் ததும்பி நின்றன.

பையன் சோணசலமோ, நாலா பக்கமும் பார்த்து விழித்தான். கன்றுக் குட்டியையும் ஸ்ரீமானையும் மாறி மாறிப் பார்த்தான்.

மூர்ச்சை தெளிந்து வைத்தியம் பிள்ளை எழுந்தாரோ இல்லையோ, பிச்சம்மாள், "அண்ணாச்சி, மன்னிக்கணும்" என்று கையெடுத்தாள். வைத்தியம் பிள்ளை, "உன் முகத்திலோ, உன் குடும்பத்தார் முகத்திலோ, இனி ஏழேழு ஜன்மத்திற்கும் விழிப்பதில்லை. வா, ரஞ்சிதம்" என்று கோபவெறி பொங்க சாரைப் பாம்பு போலப் பாய்ந்து விட்டார்.

இது கேட்டதும் சோணாசலம் மூர்ச்சையடைந்தான். ரஞ்சிதமோ, கடலினும் பெரிய கண்களை மூடிக்கொண்டாள்.........மாலைநேரத்தில் திக்கற்று மூடிக்கொள்ளும் தாமரை இதழைப்போல். மறு நிமிஷம், அக் கண்களிலிருந்து இரண்டே கண்ணீர்த் துளிகள்—இல்லை, முத்துக்கள்—பூசணிக் கொடி இருந்த இடத்தில் விழுந்தன.

## 5

இதெல்லாம் போன வருஷம் தீபாவளிக்கு முதல்நாள் நடந்த சமாச்சாரங்கள். கதாசிரியர்கள் சொல்லுவது போல, காலப்பறவை தன் இறக்கையை ஒருதரம் அடித்தது. அதாவது காலச் சக்கரத்தில் ஒண்ணேமுக்கால் பல் நகர்ந்தது. எதை வைத்துக் கொண்டாலும்சரி, வருஷம் ஒன்று சென்றது.

சோணாசலத்துக்கும் ரஞ்சிதத்துக்கும் இந்த வருஷம் தலைத்தீபாவளி. குல விரோதிகள் ஆயிற்றே என்கிறீர்களோ? காதலுக்கு முன் குல விரோதம் (கன்றுக்குட்டியும் பூசணிக்கொடியும்) என்ன செய்துவிடும்? தம்பதிகள் பேசுகிறதை சற்று செவிசாயுங்கள்.

* * *

சோணாசலம்:—ரஞ்சிதம், எனக்கு வேலை கிடைத்துவிட்டது. நான் மதருஸ் போகவேண்டியதுதான்.

ரஞ்சிதம்:—அப்பா என்ன சொன்னார்கள்?

சோ:—அப்பாவா? உன்னிடம் உத்தரவு வாங்கிக் கொள்ளச் சொன்னார்கள். உத்தரவு கொடுத்தால் தான் ஆச்சு. இல்லாவிட்டால், உன்னைவிட மாட்டேன்..............

ரஞ்சிதம்:—அய்யோ, அப்பா.....நீங்கள் என்ன விளை யாட்டு விடுங்கள்...விடுங்கள்.

இது ரஞ்சிதம் விளையாட்டாகப் பேசின பேச்சு. இவ் வார்த்தைகளைக் கேட்டு வந்த வைத்தியம்பிள்ளை, "என்ன அம்மா...ஏன் கூப்பிட்டாய்?" என்று நேரிலேயே வந்து விட்டார்.

பெண்களுக்கா நிலையை சமாளிக்கத் தெரியாது? "அப்பா இவர்கள் பட்டணம் போகப் போகிறார்களாம்," என்று சொன்னாள்.

வைத்தியம்பிள்ளை, "நான் வேண்டாமென்றுதான் சொன்னேன்; நான் சொன்னதை, நீ சொன்னால் அது வேதவாக்காக இருக்கும். என்னிடம் போகத்தான் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார்கள்," என்றார்.

"இவாளுக்குப் பட்டணம் போக-தனியாகப் போகப் பயமாக இருக்கிறதாம், அப்பா"

"எதற்காகப் பயம்?"

"முன் கடிதத்தைப்போல் அல்லாமல், நிஜமாகவே பாம்பு கடித்து விட்டால் என்ன செய்கிறது என்று பயப் படுகிறார்களாம்."

சோணாசலம் குறுக்கிட்டு, "நிஜமென்று ஊடே ஒரு வார்த்தையைப் போடுகிறாயே. இதனால், முன்பு பாம்பு கடிக்கவில்லை யென்றும், கடித்ததாக நான் பாசாங்கு செய்ததாகவும், மாமா அவர்கள் எண்ணிக்கொள்ளவா?" என்று பரிகாசமாகச் சொன்னான்.

"எண்ணிக் கொள்ளுகிறதென்ன? உண்மை அப்படித் தானே."

ஸ்ரீமான்பிள்ளை, இரு தவளைகளைப் பார்க்கும் பாம்பு போலப் பார்த்தார்.

"பாம்பு கடித்ததாகப் பாசாங்கு செய்தேன், அது உண்மைதான். அப்படிச் செய்யும்படி சொல்லிக் கொடுத்தவள் யாரென்று ஞாபகப்படுத்திப் பார்."

"நான் சொன்னால், உங்களை யார் பாசாங்கு செய்யச் சொன்னது? சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்கு மதியில்லையா?"

"மதி இருந்ததனால்தான் அப்படிச் செய்தேன். நீ சொன்னாய், 'குலவிரோதியாக இருந்தாலும் பாம்புக்கடியென்றால், அப்பா மனம்இறங்கி விடுவார்கள்' என்று... நானும் அப்படியே நடித்தேன்"

பெருமூச்சுவிட்டவர், "அடடே, நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து செய்த சூழ்ச்சியா? இதை நான் தெறிந்து கொள்ள வில்லையே. ஏமாந்து போனேனே."

"நிஜத்துக்குப் பாம்பு கடித்தவர்கள்கூட அந்தமாதிரி கூச்சலும் அமர்க்களமும் பண்ணமாட்டார்கள். அப்படி இவர்கள் அமர்க்களமும் கூப்பாடும் போட்டுவிட்டார்கள். இல்லையா அப்பா?"

"மாமா, ஒன்று நிச்சயம். பாம்பு கடித்து, எத்தனையோ பேருக்கு, நீங்கள் விஷம் இறக்கியதில் குணம் ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் எனக்கு மட்டும் குணம் ஏற்பட்டது, மாமா" என்றான் சோணாசலம்.

ஸ்ரீமான் வைத்தியம் பிள்ளை ஏதோ சொல்ல வந்தார். "ஸார், தந்தி" என்ற குரல் கேட்கவே, தலையில் தண்ணீர் கொட்டிக்கொள்ள ஓடவே, ரஞ்சிதம் வேப்பங்குழை எடுக்க முனைந்தாள்.

வழக்கம் போல் சோணாசலம் சிரித்தான்.

# அணுகுண்டு பயில்வான்

ஊரில் ஒரு அடிதடியோ, பல அடிதடியோ நடக்க வேண்டுமானால் ராஜு இல்லாமல் நடக்காது. இல்லாமல் என்ன, அவன் தான் நடத்திக் கொண்டிருப்பான். அடிதடி இருக்கிற இடத்தில் அவனும், அவன் இருக்கிற இடத்தில் அடிதடியும் சர்வசாதாரணம். ஆள் மோட்டா வாக இருப்பதோடு, புத்தியும் மொந்தையாக இருக்கும்.

ஓட்டலுக்குள்ப் போனால் முதலில்டிக்காக்ஷன் கேட் பான். பிறகு பால்; அப்புறம் சர்க்கரை கேட்க மாட்டான். இன்னும் கொஞ்சம் டிக்காக்ஷனோடு பால்; அப்பால், பாலோடு டிக்காக்ஷன்! இப்படி மாற்றி மாற்றி தனக்கு அலுப்பு ஏற்பட்டால்தான் நிறுத்துவான். சர்க் கரைக்கு அவன் வருவதற்குள், கடைக்காரன் சண் டைக்குத் தயாராக இருப்பான். ராஜு உடனே சண்டை போட பைத்தியமா என்ன? சர்க்கரை வாங்கும்வரை, இனிப்பாகப் பேசிவிட்டு, பின்னால்தான் சப்பாத்தி (வம்பு) இழுக்க ஆரம்பிப்பான். அவ்வளவு யோக்கியன்.

செக்குலக்கையுடன் சண்டைபோட யாருக்காவது இஷ்டம் இருக்குமா, செக்கு மாடுகளைத்தவிர? மனித ஜன்மம் எடுத்தவன் நாலடி எட்டி நடந்தால், யோக்கியன் பதினாறடி பாயவேண்டும். யானைக்கு மதம் பிடித்தால் ஊருக்குக் கேடு என்பது உண்மையோ, யுத்த ஹேஷ்யமோ? இந்தச் சித்தானைக்குட்டிக்கு எப்பவும் தலை கிறங்கிக் கிடக்கும். ஒரு சமயம் எங்களூர் மாவுத்தன்

ஒருவன் இந்த சித்தானைக் குட்டியை வம்புக்கு இழுத்தான். தன்னிடம் கோவில் யானை இருக்கிறதென்று அவனுக்குத் திமிர். ராஜு ஒன்றும் சொல்லாமல், தன்னுடைய கர்லாக் கட்டையைத் தூக்கி வந்து "உன் யானை இதைத் தூக்கட்டும்," என்றான். அது மலையாளத்தில் பெரிய பெரிய மரங்களை வேரோடு அசைத்த யானை. ஆனால், கர்லாக்கட்டையைத் தூக்கப்போக துதிக்கையே சுளுக்கிக் கொண்டது! கோணக் கோணப் புளியங்காய் மாதிரி துதிக்கை கோணிப்போய் விட்டதை யாரும் நிமிர்த்திய பாடில்லை. இன்றுவரை அப்படியே இருக்கிறது. அன்று முதல் யானைப்பாகன் தலைமறைவாகத் திரிகிறான். யானை ஞாபகசக்தியுள்ள பிராணி. ஆகையால், ராஜு வந்தால் உடனே மண்டியிட்டு சலாம் செய்யும், கோணல்த் துதிக்கையை நிமிர்த்துவிடச் சொல்லி. அவ்வளவு பலசாலியாக இருக்கிறவன் ராஜு. இவனைக் கண்டு பயப்படாதவன் கள்ளரக்கன் ஒருவன்தான். கள்ளரக்கன் சாரத்தியம் செய்ய, ராஜு பவனி வந்தால், திகில் அங்குமிங்குமாக ஓடி எல்லோருடைய மனதிலும் குடி புகுந்து கொள்ளும்!

"பேச்சில் என்ன இருக்கிறது செய்கை! செய்கை!" என்று கதறுகிறார்களே அவர்கள் இவனைப் பார்த்தால் "அப்பனே செயல் வேண்டாம், வேண்டாம்" என்று பத்தடிக்கு அப்பால் நின்று சொல்லவாவது முடியுமா! ஓட்டமும் நடையுமாகத்தான் உளறுவார்கள். எங்களூரில் அவன் ஒரு அணுக்குண்டு!

இவ்வளவு பொல்லாதவஸ்தாத் நேற்று நாலுபேருக்கு மேலாளாகப் போய்விட்டான், என்பதைக் கேட்டதும் எனக்கு ஆச்சர்யம் இல்லை. திடீரென இதய பலவீனத்தால் மாரடைத்துக் காலமானான் என்பதைக் கேட்டு

பரமாச்சர்யம் அடைந்தேன். கடவுள் இவ்வளவு பல ஹீனமான இருதயம் கொடுத்திருக்கா விட்டால் அவன் சாகவே முடியாது. அவன் செத்ததை நம்பிக்கொண்டு உயிரோடு ஓடுகிற என் இதயம் அவனைவிட ஆயிரம் பங்கு பலம் பொருந்தியது.

செத்துப்போன ராஜு சடலாப்பியாசம் செய்வதில் நிபுணன். பசியெடுக்க, சாப்பிடும் முன்னும், செரிப்பதற்காகச் சாப்பிட்ட பின்னும் தண்டால் எடுக்க மாட்டான். சாப்பிடும்போது தண்டால் எடுக்கிறானா, தண்டால் போடுகிறபோது சாப்பிடுகிறானா என்பது தெரிய முடியாது. சாத உருண்டைகளைத் தட்டில் வைத்து, தண்டால் போடுகிறபோது வாயால் கௌவிக் கொண்டே, சாப்பாட்டிற்குச் சாப்பாடும், சடலாப்பியாசத்திற்கு சடலாப்பியாசமும் செய்து முடிப்பது வழக்கம்!

உண்டகிறக்கம் தொண்டருக்கும் உண்டு என்பதோடு தண்டால் தாஸர்களுக்கும் உண்டு எனலாம். தூங்கும் போது சுவாஸாப்பியாஸம் நடக்கும். அதாவது வலது நாசி துடிதுடிக்கும்; இடது நாசி அப்படியே பிரேதமாக இருக்கும். தூக்கத்தின் போது, சுவாஸாப்பியாஸம் நடக்கிறதோடு, ரத்த ஓட்டமும் நடக்கும். தூக்கம் என்றால், அவன் அகராதியில், தலைகீழாகத் தொங்கியபடி வௌவால் கணக்கில் தூங்குதல் என அர்த்தம். சிரஸாஸனம் போடும் போதுதான், அவன் தலை தரையில்படும். அப்போதும் ஒரு சிறு வேலை. வீடு பெருக்குகிறது என்பது, வாயால் ஊதி ஊதி, ஒரு பக்கமாகப் பெருக்கி விடுகிறது. குப்பைகளை அப்படியே ஒரு மூலையில்க் கூட்டி —இவ்வளவும் சிரஸாஸனம் நடக்கும்போது உப அப்பியாஸங்கள்—'கும்' என்று ஒரு நாசியில் உறிஞ்சிடுவான். (கையால் குப்பை அள்ளுகிறதென்பது கிடையாது.)

குப்பை கூளம் அப்படியே, சிவனுக்கு விஷம் கண்டத்தில் நின்றதுபோல, நாசிக்குள்ளேயே நிற்கும். அப்பால் ஒரு அந்தர் அடித்து, காலைத் தரைக்குக் கொண்டுவந்து, சன்னல்ப்பக்கம் போய், சிந்திவிட்டால், குப்பை தூசியெல்லாம், "டாண்டாண்" என, முனிஸிபல் குப்பைத் தொட்டியில்ப் போய் விழும்!

இப்படிக் குப்பை விழுகிற சப்தம் கேட்டுத்தான், முனிசிபல் வேலை யாட்கள் காலையில் வெளியே புறப்படுகிறார்கள். இவர்கள் காதில் இது அபாய அறிவிப்புச் சங்கநாதம் போலக் கேட்கும்.

குப்பை கொட்டியபின், உடனே பற்றுலக்குப் படலம். (கஷ்டமான காரியம்; ஆகவே கடினசந்தி.) சுவரில் மாட்டியிருக்கும் பிரஷில், பல்லைக்கொண்டு தேய்ப்பான். இப்படித் தேய்ப்பதால்ப் பற்களுக்கு சுத்தம் கொடுக்கிற போதே, கழுத்துக்கும் வேலை கொடுக்க முடிகிறது என்பது அவன் கொள்கை. சுவரிலுள்ள பிரஷ் சும்மா வந்ததில்லை. பட்டாளத்தில் 600 குதிரைகளைத் தேய்த்தும், தேய்ந்தும், போகாத பிரஷ் தற்சமயம் தேய்ந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்; பார்த்தாலும் தெரிகிறது.

பற்றுலக்கியதும், ஸ்நானபானம். முதலில் குளிர்ந்த தண்ணீரில் அரைமணி அழுந்திக்கிடப்பான். இதனால் சருமம் சுருக்கமடைகிறதாம். சருமம் வீக்கமடைவதற்காக, உடனே வெந்நீரில் ஸ்நானம் செய்வான். ஸ்நானம் செய்கிறபோதுதான், தேவையான பானம் குடித்துக் கொள்ளுகிறது! ஏனெனில் தண்டால் போடுகிறபோது தான் சாதம் சாப்பிடவேண்டுமே! அவனுக்கு ஸ்நான பானம் ஒருங்கே முடிந்து விட்டால், மூளை அதிர்ச்சி ஏற்படும்.

மூளை சம்பந்தமாக அவன் செய்யும் மூளாப்பியாஸங் கள், நமக்குப் பயன் படாது.

சம்மட்டிகொண்டு தலையில்ஓங்கி யடிக்கிறது. ரத்தம், தலையைவிட்டு பல பாகங்களுக்கும் பரவிவிடவே, மறு படியும் யதாஸ்தானத்திற்கு ரத்தம் வருவதற்கு, தலையைக் கொண்டு சம்மட்டியில் அடிக்கிறது! ஆச்சு இப்படியும் சம்மட்டி உடையாமல் இருந்தால், தலையைச் சுத்தி சம்மட்டியையோ, சம்மட்டியைச் சுத்தி தலையையோ எறிகிறது என்பது அவன் கொள்கை.

சம்மட்டியின் பரிமாணத்திற்குத் தக்கபடிதான் ரத்த வோட்டம் அதிகமாகும். மண்டையின் பரிமாணத்திற் கும் ரத்த வோட்டத்திற்கும் லவலேசமும் சம்பந்தமில்லை என்பது அவன் ஆராய்ச்சி. சம்மட்டியால் மூளை நன்கு தெளிவுபட்டதும் ஒருவரும் இல்லாத அறையில் (ரேடியோ அறையல்ல) பிரசங்கம் செய்வான். பிரசங்கம் எதைப் பற்றி என்று அவனுக்கே தெரியாது. ஆறுமணி நேரம் பிரசங்கம் செய்தால், பிரசங்கத்தைச் சும்மா செய்வானா? பார் விளையாடிக்கொண்டு ஒரு மணியும், லாங்ஜம்ப் செய்தபடியே இரண்டு மணி நேரமும் ஹைஜம்ப் செய்த படி மூன்று மணி நேரமும் பிரசங்கம் நடக்கும்!

இந்தப் பிரசங்கத்தை யாரும் கேட்கக் கூடாது. கேட்டால் கொன்று போடுவான். அப்படியே அவனுக் குத் தெரியாமல் ஒளிந்து கேட்பவர்களை அவன் பிரசங்கம் கொன்று விடும்!

இவனுடைய பிரசங்கத்தை இவனே கேட்டுத்தான் செத்தானோ? இவனுடைய மறைவால் தமிழ்நாடு, சட லாப்பியாஸ வஸ்தாதத்தையும், சுவாஸாப்பியாஸ சங்க நாதத்தையும், சம்மட்டியாப்பியாஸ மூளை பயில்வானையும்,

ஹை-ஜம்ப் லாங்-ஜம்ப் பிரசங்காப்பியாஸியையும் ஒருங்கே இழந்துவிட்டது!

இவனுடைய சிஷ்யர்களில் உடனுக்குடன் காலமானவர்கள் போக, உயிரோடு இருப்பவன் அடியேன்தான். என் காது செவிடு என்பதாக எல்லோரும் அபிநயம் மூலம் சொல்வதை ஒருவாறு யூகிக்கிறேன்.

தயவுசெய்து, யாரும் என் விலாசத்திற்கு......'ராஜு பயில்வானுக்கு நிதி......'அனுப்பவேண்டாம்! மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பிறகு உங்கள் சமர்த்து.

# பரீக்ஷை தேறுமா ?

**ப**ரீக்ஷை, லேசான பரீக்ஷையா ? எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை ஐயா, எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷை. அதற்கு முந்திய நாள் என் அத்தை, " அடே மணி, இங்கே வாடா" என்றாள். நான் போனேன். என்னைப் பார்த்து, " மணி, நீ போய் நம்ம சோசியர் இருக்கிறாருல்ல, அவரைக் கை யோட கூட்டிக்கிட்டு வா. என்ன, தெரிஞ்சுதா ? அவர் தான் மேலத்தெரு பிரகஸ்பதி " என்று கட்டளையிட்டாள். நான் அந்த மத்தியான வெயிலையும் பொருட்படுத்தாது வெளியே புறப்பட்டேன்.

சாயங்காலம் சோதிடப் புலி ஒரு சின்ன மூட்டை யுடன் வீட்டிற்கு வந்தார். அவருடைய மூட்டையை அவிழ்க்கத் தொடங்கியதும் நாலைந்து பாச்சைகள் துள்ளிக் குதித்து ஓடின. (இதனால் அவருடைய தொழிலின் மேன்மை தெரிகிறதல்லவா ?) என்னுடைய அத்தை * மிளகு பெட்டியைத் திறந்துஎன் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.

சோதிடப்புலி என்னுடைய பெயரை அத்தையிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். மறுநாள் எத்தனை மணிக்கு பள்ளிக்கூடம் போகலாமென்று அத்தை கேட் டாள். நாள், நட்சத்திரம், திதி, மாசம், பட்சம், ராகு காலம், வாரசூலை, தியாஜ்யம், கிழமை இவற்றை விரலை விட்டுப் பார்த்து விட்டு மறுநாள் சாயங்காலம் ஆறு மணிக்குப் போகலாமென்று அவர் சொன்னார்.

---

* அஞ்சறைப் பெட்டி

தங்கம் "நீங்க நேரம் பார்த்தது தூங்கத்தானே!" என்று குறுக்கே பேசினாள். பிரகஸ்பதியின் பதிலைக் கேட்டதும் எனக்கு வந்த சிரிப்பை அடக்க முயன்றேன். அப்படி அடக்க முயன்றும் வாயிலிருந்த 'பப்பர்மெண்ட்' உள்ளே போய் விட்டது.

ஜோஸ்யருக்கு, மறுநாள் காலை பத்துமணிக்குள் 'நல்ல வேளை' பார்த்துச் சொல்லும்படி அத்தை சொன்னாள். சோதிடப்புலி சில எண்களைக் கூட்டியும், கழித்தும் வகுத்தும், பெருக்கியும் (எண்களை இதைத்தவிர என்ன செய்யமுடியும்?) ஒன்பது மணிக்குமேல் 9-59-க்குள் போகலாமென்று சொன்னார். பிறகு, ஞாபகமாக இரண்டணா காசுடன் போய்ச் சேர்ந்தார்.

நான் என்னுடைய அறைக்குள் படிக்கப் போய் விட்டேன். தங்கம் வாசலில் தண்ணீர் தெளித்து கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். சன்னல் வழியாக "கோலத்தைப் பாரு கோலத்தை! பெரிய மனுஷியாட்டமா கோலம் போடறது!" என்று வாயைக் கிளற ஆரம்பித்தேன்.

"பாரு! பாரு! உனக்கு அம்மாட்டே சொல்றேன்!" என்று அவள் சொன்னது அத்தையின் காதில் விழுந்து விட்டது. "தங்கம்! இங்கே வா! நான் லட்சந் தரம் அவன் பரீக்ஷை முடியுமட்டும் அவன் கிட்டே பேசாதே, பேசாதே என்று சொன்னேனா, இல்லையா! இனிமேல் பேசாதே!" என்று சொன்னதோடு ஒரு அறையும் அறைந்து விட்டாள். தங்கம் விம்மி விம்மி அழும் சப்தம் கேட்டது. நான் சேஷ்டை செய்ததற்கு அவளுக்கு அடி!

சிறிது நேரத்தில் விளக்கேற்றியதும் தங்கம் சுவாமி கும்பிட்டுவிட்டுத் தன் பாடங்களை இரைந்து வாசித்தாள்.

"ஏனம்மா, நான் சொல்றது காது கேட்கலையா? நீ இப்படிச் சத்தம் போட்டால் அவன் எப்படிப் பாடம் படிப்பான். மெதுவாகப் படி; அல்லது எட்டைக் கட்டி இறப்பில்லை" என்று எனக்காகப் பரிந்து பேசினுள் அத்தை. நானும் பக்கம் பக்கமாகப் புரட்டினேன். மணி 7 அடிப்பதற்குள் தலை குழைந்துவிழ ஆரம்பித்தது. பசை போட்டு ஒட்டியதுபோல் கண்ணிமைகள் ஒட்டிக் கொண்டன. என் சப்தம் கேட்காததால் அத்தை என் அறைக்குள் வந்து, "ஏண்டா மணி! நீ படிக்கிற லக்ஷணமா? நல்லாயிருக்கு. நாளைக்குப் பரீக்ஷை! என்னமாத்தான் படிச்சு பாஸ் பண்ணப் போருயோ! இந்தா, இந்தக் காப்பியைக் குடி" என்று ஒரு கூஜா நிறைய வைத்துவிட்டுப் போனுள். பத்து நிமிஷம் உரக்கப்படித்தேன்.

மீண்டும் அத்தையின் திடும்பிரவேசம்.

"என்னடா அதுக்குள்ளே தூங்கி விழுகிருய் பரீக்ஷையும் நாளுமாய்? மனசு வச்சுப் படிடா! இதோ இதில் தேயிலே இருக்கு!" என்று அத்தை சொல்லவே, திடுக்கிட்டு விழித்தேன். ஆனல் காட்டிக் கொள்ளாமல், "படித்ததை ஞாபகப் படுத்துகிறேன்" என்றேன். காப்பி கூஜாவை—வெறும் கூஜாதான்!—கொடுத்து விட்டுத் தேயிலைக் கூஜாவை வாங்கிக் கொண்டேன். மணி 8–59 ஆகிவிட்டது; அல்லது, ஒன்பது அடிக்க ஒரு நிமிஷம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். மாமா வந்தார். "எலே! என்னடா, உறக்கம்! அதுக்குள்ளவா தூக்கம்? இந்தோ பாருலே, தங்கம் கூட முழித்துக்கொண்டு இருக்காள். படிடா! நாளைக்கு இங்கிலீஷ் பரீக்ஷை. உம். நல்லாப் படித்துப் பாஸ் பண்ணனும். படி, படி" என்று எச்சரிக்கை விடுத்தார்.

"இல்லேப்பா! அத்தானுக்குக் காப்பியாவது தேயிலையாவது கொஞ்சம் குடிக்கணும்; குடிச்சவுடன்

உறங்கவேணும்; உறங்கி முழிச்சதும் ஏதாவது குடிக்கணும்'' என்று பரிகாசம் செய்தாள் தங்கம்.

* * * *

"ஏய்! மணி! என்னடா மணி ஏழு அடித்தும் விளக்கை அணையாமல் படிப்பு? விடிந்தது கூடத் தெரியாமல் படிப்பா?'' என்றதும் விழித்துக்கொண்டு கண்ணை கசக்கினேன். உடனே ஸ்நானம் செய்யப்போனேன். அப்படியும் இப்படியுமாக எப்படியோ மணி 9 அடித்து விட்டது. மாமா சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் புறப்பட்டு விட்டார். நானும் சாப்பிட்டு முடிந்தது.

அதற்குள், அத்தை பேணு மைக்கூடு எடுத்து வைத்தவள் சாந்து உறைத்து வைத்து விட்டு ஏதோ பெட்டியில் தேடிக் கொண்டிருந்ததாள். நாலைந்து பாச்சைகள் பெட்டியிலிருந்து துள்ளிக் குதித்தன. நான் அவை சோதிடப் புலி கொண்டுவந்து விட்டவை என்றேன்; தங்கம் அந்தப் பாச்சைகள் அவள் அம்மா சீதனம் கொண்டு வந்தவை என்ருள். ஒவ்வொருவரும் அவரவர் சொன்னதையே திருப்பிச் சொல்லிச் சச்சரவு இட்டுக் கொண்டிருந்தோம் அத்தை பெட்டியிலிருந்து ஒரு கறுப்புக் கோட்டை வெளியே எடுத்தாள். அந்தக் கோட்டு என் மாமா சிறு பிள்ளையாய் இருக்கும் பொழுது தைத்தது என்று அத்தை சொன்னுள். அந்தக் கோட்டுக்குள் வெகு கஷ்டப் பட்டு நுழைத்துக் கொண்டேன் உடம்பை. ஏதோ சிறிய இருப்புக் கவசத்துக்குள் உடம்பு அகப்பட்டுக் கொண்டதுபோல் உணர்ச்சி ஏற்பட்டது.

பிறகு அத்தை திருநீறு எடுத்து வந்து நெற்றியில் பூசினுள். நான் ஒரு கையைக் கட்டி வலது கையால் வாய் புதைத்தேன். பிறகு சாந்துப்பொட்டுப் போட்டு விட்டு எனது அறையில்ப் போய் இருக்கச் சொல்லிவிட்டு வாசற்

பக்கம் போனாள். அத்தையின் முகத்தில் கோணல்கள், கோரணிகள், கோபதாபங்கள் இவை தெரிந்த சமயம் தொடர்ச்சியாகக் கோணக்கால் குப்பிப் பாட்டி, இரண்டு மூன்று விதவை, ஒரு வாணியச்செட்டியார் இவர்கள் வந்தார்கள். மணியோ ஓடிக் கொண்டிருக்கிறது; நிமிஷத்துக்கு 40 மைல் வேகத்தில் அபசகுனங்கள் தெருவில் வந்து கொண்டிருந்தன.

நான் கோட்டுக்குள் கிடந்து திணறுவதைக் கண்டு தங்கம் சிரித்துக் கொண்டிருந்தாள். அத்தை, "அடே, ஓடியா!" என்று சொல்லி முடிக்குமுன், "போய்த் தண்ணி குடிச்சுட்டு வா" என்றாள். மணி 9–45 ஆகி விட்டது. அத்தை வீட்டுக்குள் வந்து விட்டு மறுபடியும் வெளியே போய் எட்டிப் பார்த்தாள். "அடேடே! சீக்கிரம் வா! நல்ல சகுனம். நிறை குடம் தண்ணி; மங்களமான சகுனம்!" என்று இரைந்தது காதில் விழவில்லை. நான், தங்கம் என்னைக் கேலி பண்ணும்போதோ சிரிக்கும் போதோ அவள் கன்னங்களில் ஏன் குழி விழிகிறது என்று சிந்தித்துக் கொண்டிருக்கவே, என் அத்தை பேனாவையும் மைக்கூடையும் தூக்குப் பையில் போட்டு என்னை வெளியே போகும்படி அவசரப் படுத்தினாள்.

* * * *

நான் அறையை விட்டு வெளியே வந்து தங்கம் நின்ற இடத்தைப் பார்த்தேன். வீட்டுக்குள் காணவில்லை. குறுநகையும் குறும்புச் சிரிப்பும் காணவில்லை. வாசலில் இறங்கியதும், எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நிறைகுடம் தண்ணீர் கொண்டு, மோகனப் புன்னகையோடு கலீர் கலீரென வளையல் ஒலிக்கக் கை வீசி வீசி வந்து கொண்டிருந்தாள் தங்கம். என்னைப் பார்த்து, கன்னங்களில் குழிவிழச் சிரித்தாள். "புதுப் பெண் மாதிரி

சிங்காரிச்சிருக்கு. பள்ளிக்கூடத்திற்கா? மாப்பிள்ளை வீட்டிற்கா?" என்று கேட்டாள்.

"இரு இரு! பரீக்ஷை முடியவிட்டுப் பாரு" என்று சொல்லிவிட்டுத் தலைதெறிக்கப் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடினேன்.

கேள்விப் பேப்பரைக் கையில் வாங்கினேன். எனக்கு அவை வேத மந்திரம் போல் தோன்றின. பேனாவை எடுக்கப் பையில் கையிட்டேன். குண்டூசி குத்தியது போலும், 'குளுகுளு' என்றும் உணர்ச்சிகள் உண்டாயின. "சார், சார்! என் பையில் தேள்!" என்றதும் ஒரு வாத்தியார் வந்தார்; வாத்தியாரைப் பார்த்து இன்னொருவர், அவரைப் பார்த்து மற்றவர், பிறகு இன்ஸ்பெக்டர் எல்லோரும் என்னைச் சுற்றிக் கூடிவிட்டார்கள். நான் என் பையில் தேள் கிடப்பதால் பேனாவை எடுக்க முடியவில்லை என்று சொன்னேன். ஒருவராவது துணிந்து பையில் கைவிடவில்லை.

அப்படி இப்படியாக அரைமணி நேரம் சென்றது. நானே கைவிட்டுப் பேனாவை எடுத்தேன். தேள் மறு ஜன்மம் எடுத்ததோ என்னமோ, சோதிடப்புலி கொண்டுவந்த கரப்பானில் ஒன்றாகமாறி, சூப்ரவைசர் பாடாவதிக் கோட்டுக்குள் சரண் புகுந்தது. இந்தக் கலேபரத்தில் பையன்கள் கொடுக்கல், வாங்கல், பார்த்தெழுதல் முதலானவை செய்துகொண்டார்கள்.

வளர்ப்பானேன்? ஏதோ எழுதினேன். நான் எழுதியிருந்த அவ்வளவும், எனக்குத் தெரிந்திருக்குமென்று எனக்கே தெரியாது. அவ்வளவு எழுதினேன். என் கையிலிருந்ததைப் பிடுங்கியதுபோல் உணரவே, "இந்தா, தங்கம்! பண்டத்தைப் பிடுங்காதே!" என்றேன். கண்ணை விழித்துப் பார்த்தபோது 'கிருதா' மீசையும் தெத்துப்

பற்களும் உடைய ஒரு வாத்தியார் என் பரீக்ஷைப்பேப்பரைப் பிடுங்கிக்கொண்டு போனார்.

எனக்கென்ன பயம்! எனக்கா பாஸ் ஆகாது? தங்கம் நிறைகுடம் கொண்டுவந்தபோது போன எனக்குப் பாஸ் ஆகாவிட்டால் என்னிடம் கேளுங்கள். நான் பிள்ளையார் கோவிலைச் சுற்றி வெற்றிக்காகக் கும்பிடுகிறேன். அப்படிக் கும்பிடாத நேரத்தில் என் பேப்பர் திருத்தும் பிரகிருதிகள் இருக்கும் திக்கு நோக்கிக் கோடானு கோடி நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறேன்.

# " ஓ ஜெகதாம்பிகே! "

எழுத்தாளனுக்குச் சிரிப்பூட்டவும் திகைப்பூட்டவும் ......கண்ணீர்த் துளிகள் வருத்தவும்...இன்னும் சுருங்கச் சொன்னால் நவரஸங்களையும் அள்ளிக் கொடுக்கிறவன் தபால்காரன்தான். இந்த நவரஸப்புலி என்னை ஒரு கடிதத்தால் இன்பவாரிதியில் மிதக்கச் செய்வான்; அடுத்த கடிதத்தால் துன்பத்தோணியில் தூக்கிப் போட்டு விட்டுச் செல்வான்.

சுமார் இரு மாதங்களுக்கு முன் இரு கடிதங்கள், என் கையில் கொடுத்தபோது பயபக்தியுடன் வாங்கிப் படித்தேன். ஒன்றில் 'ஹாஸ்யக் கட்டுரை' எழுதியிருந்தது. மற்றொன்றைப் பிரித்தால்...... "ஓ ஜெகதாம்பிகே!" கடிதம்!

'ஓ ஜெகதாம்பிகே' கடிதம் வராத நபர்கள் யாரேனும் உண்டா? அதற்குப் பதில் எழுதாத ஆத்மாக்களும் இப்பரந்த உலகில் இல்லவேயில்லை! அப்படியே யிருந்தால் பிறக்காத ஜென்மங்களாகத்தான் இருக்க வேண்டும். எனக்கு வந்த கடிதம் :—

" ஓ! ஜெகதாம்பிகே! இந்தக் கடிதத்தை ஒன்பது தரம் எழுதி ஒன்பது நண்பர்களுக்கு அனுப்பவும். இப்படி அனுப்பினால் நீங்கள் நினைத்த காரியம் சித்திக்கும். இவ்வரிய அதிர்ஷ்ட சங்கிலித்தொடர், ஹிமாலய ஞானி

சாது ஹம்சபரமானந்தர் என்பவரால் அவருடைய சிஷ்ய கோடிகளுக்குச் சொல்லப்பட்டு ஷை சிஷ்யகோடிகள் உலக சம்ரக்ஷணத்தின் காரணமாக விலங்கு போன்ற மானிட மக்களுக்கு அறிவிக்கப்பட்டதாகும். இதை நீங்கள் ஒன்பது அத்யந்த நண்பர்களுக்கு அனுப்பி வைக்காவிட்டால், துரதிர்ஷ்டம் உங்கள் வீட்டை எட்டிப் பார்க்கும். ஹிமாலய ஞானியின் அருள்வாக்கை அப்படி அனுஷ்டித்த மிந்திரிக் கொல்லை முனியனுக்கு ரூ 100 கிடைத்தது. கொண்டித்தோப்பு கோமளவல்லிக்கு ஒரே ஒரு ஆண் மகவு பிறந்தது. இதை எழுதாமல் அசட்டை செய்த அண்ணுபுரம் வீரஅண்ணு படையாச்சிக்கு...... சப்த கஷ்டங்களும், நவக்கிரக சேஷ்டைகளும் வந்தன. ஒன்பதுதரம் காப்பி செய்து அனுப்பவும்."

கீழே கையெழுத்தைப் பார்த்தேன். அது இல்லை. எழுத்தும் கள்ளத்தனமான எழுத்துப் போல் கண் சிமிட்டியது. இதுபடியே நானும் கையெழுத்து இல்லாமல், கள்ளத்தனமாக எழுதவேண்டும். இதனுல்தான் வலதுகை செய்கிற தானம் இடது கைக்குத் தெரியக் கூடாது என்கிருர்கள்! சை. முட்டாள்! எனக்கு 9 நண்பர்களா இருக்கிருர்கள். ஆயிரக்கணக்கான பேர்கள், அதிலும் உலக மக்களையே சகோதரர்களாக பாவிக்கும் ஸ்வபாவம் அடியேனிடம் உண்டு.

அத்யந்த நண்பர்கள் எனக்கு 9999 பேர்கள். இதில் 9990 பேரைத் தள்ளிவிட மனசு இடந்தருகிறதா. இல்லையே. அப்படியே அனுப்பினுலும் நமக்கு அதிர்ஷ்டம் வருமென்று என்ன நிச்சயம். நான் நினைக்கிறபடி அதிர்ஷ்டங்கள் வந்து கொண்டிருந்தால் தினசரி 9 கடிதங்களை 9 நண்பர்களுக்கு அனுப்பினுல் போதும். வேறே வேலை, உத்தியோகம், பிழைப்பு வேண்டுமே? அதிர்ஷ்டத்தின் விலை $9 \times \frac{3}{4} = 6\frac{3}{4}$ அணு!

ஒன்பதுதரம் க்காப்பி செய்வதில் சிரமம் இல்லை. ஆனால் கள்ளத்தனமான எழுத்தில் எழுத வேண்டும். வருமானவரி கணக்காக இருந்தாலும், கள்ளத்தனமாக எழுதினால் லாபம் உண்டு. இல்லை 9 கட்டுரைகள் எழுதினால் இதைவிட சுலபம். எல்லாவற்றையும்விட என் நண்பர்கள் 9 பேரிடம் கடன் கேட்டால் கைமேல் பணம் கிடைக்கும்.

நண்பர்களைப் பார்க்கப் போனேன் 'ஓ ஜெகதாம்பிகே!' என் கையில் இருந்தது எந்த விரோதி நமக்கு அனுப்பியிருப்பான். நமக்கு நண்பனாக இருக்கிறவன் புத்திசாலியாக இருப்பானே. யாரோ ஒருவன் (ள்) மூடச் சம்பிரதாயத்தில் பற்றுக் கொண்டவன் (ள்) அனுப்பியிருக்கவேண்டும். பெண் நமக்கு ஏன் அனுப்பவேண்டும், இல்லை ஏன் அனுப்பக்கூடாது. இப்படி என் இதயப் பூங்காவில் பெரும் புயல் அடித்தது. அதாவது என் மனநிலை காதலியால் தள்ளப்பட்ட காதலன் இதயம் போல இருந்தது.

நண்பன் வீடுவந்து அவனும் என்னைப் போல் "ஓ ஜெகதாம்பிகே!" கடிதம் பெற்றவன். "சேலைக்குச் சிற்றப்பன் வீட்டுக்குப்போக ஓலைப்பாயுடன் வந்தானாம்" அந்த கதைபோல் ஒருவகையில் நான் அதிர்ஷ்டசாலி. எனக்காவது, தபால் தலையொட்டி கார்டு வந்தது. அவனுக்கோ கவர்—ஆமாம் தலையே இல்லாத பேரிங் கவர். 2½ அணா! அதிர்ஷ்டத்தின் விபரம் தெரியக்கொடுத்தான். அதிர்ஷ்டம் வருகிற வழியைப் பார்த்தீர்களா? அவன் சினிமா விசிறி ஆகவே ஒன்பது நடிகைகளுக்கு பேரிங்கில் அனுப்பிவிட்டான். வாங்கின விலைக்கே விற்றான்!

எனக்கு ஒன்பது சினிமா நடிகைகளின் விலாசம் தெரியாது. பத்திரிகைக்காரர்களைக் கேட்டால் சொல்லுகிறார்கள். எனக்கு அவ்வளவு தைரியம் போதாது. என்

எழுத்தைக் கண்டு பிடித்து என்னை நடிக்கக் கூப்பிட்டு விட்டால்...சிவசிவ ஆபத்து அதிலும் ஒன்பது நடிகை களும் தங்களுடன் நடிக்க வரவேண்டும் என்று சொன்னால் நான் மாட்டேன் என்பேன். காரணம் தற்கால நடிகர்களிடம் உள்ள இரக்கந்தான்.

ஷை ஹிமாலய ஞானி என் மீதுள்ள இரக்கத்தால்தான் இந்த அதிர்ஷ்ட சங்கிலித்தொடர் கண்டுபிடித்திருக்கலாம். அவர் மகா புத்திசாலி. நமக்கு அதிர்ஷ்டம் வரட்டுமென்று நண்பர்கள் நினைக்க நாம் நண்பர்களுக்கு அதிர்ஷ்டம் வரட்டுமென்று நினைக்கவேண்டும். இது நல்ல சிந்தனை, ஆனால், இந்தப்படி ஆசீர்வாதம் செய்ய ஊடே இருக்கும் தபால் ஆபீஸ் அல்லவா கொள்ளை போடுகிறது. இந்த ஹிமாலய ஞானி தபால் இலாக்காவில் எத்தகைய உத்தியோகத்தை வகிக்கிறாரோ. போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாக இல்லாவிட்டால், நவரஸப்புலி (தபால்காரன்) ஆக இருக்கவேண்டும்.

இந்த " ஓ ஜெகதாம்பிகே" கடிதம் வந்ததிலிருந்து எனக்கு ஊண், உறக்கம் (முக்கியமாக உறக்கம்) பாழானது. இந்த இரண்டும் காதல் கோளாறுகள். ஆகவே எனக்கு யோகம் காதல் மூலமாக வரலாம். உறக்கமோ எனக்கு ஹல்வா மாதிரி. இதுதான் தகப்பனார் பிதுரார்ஜிதம். இப்படிப்பட்ட ஊக்கத்திற்குப் பங்கம் வரவே ஹாஸ்ய கட்டுரை எழுதுவதை மறந்தே விட்டேன். நஷ்டத்தில் லாபம் என்பார்களே அந்த மாதிரி அதிர்ஷ்டம் எனக்காக ரூ 100 எடுத்துக்கொண்டோ, அல்லது ஆண் மகவுடனோ வந்தால் (இரண்டும் கொண்டு வந்தாலும் வரலாம்), நான் அதைப் பார்க்கலாம்—நான் 9 கடிதங்கள் எழுதாததால் அது என்னை ஏமாற்றும். அப்படி ஏமாற்றுகிறதா? இல்லையா? என்பதைத் தூங்காமல் விழித்திருக்கும்போது கவனித்து வரலானேன்.

நாளாரம்பத்தில் "ஓ ஜெகதாம்பிகே" விஷயமாக பலர் பல முறைகள் கையாண்ட விபரங்கள் கிடைத்தன. தொப்பிக்குள்ளிருந்து புதுப்புது விஷயங்களை பொருள்களை ஜாலவித்தைக்காரன் எடுப்பதுபோல் எடுத்து விட்டார்கள்.

என் சகோதர தொழிலாளியை சந்தித்து "ஒன்பது ஜெகதாம்பிகை கடிதம் எழுதலாமா? அல்லது ஒரு ஹாஸ்யக் கட்டுரை எழுதலாமா?" என்றேன்.

"ஓகோ சண்டமாருதத்திற்கு ஹாஸ்யக்கட்டுரை எழுதுகிறாயா? நல்லவேளை முன்னெச்சரிக்கை கொடுத்தாயே!"

"ஏன் என்னடா விஷயம்?"

"நான் தீபாவளி இதழ் வாங்குவதாக இருந்தேன். உன் முன்னெச்சரிக்கைக்கு வந்தனம்" என்றான்.

சரி, இவருக்கு ஒரு ஜெகதாம்பிகே எழுதவேண்டியது தான் என்று மனதிற்குள் திட்டம் போட்டேன். அடுத்தவினாடி அவன் ஜெகதாம்பிகே கடிதங்களை அனுப்பியதைச் சொன்னபோது அலெக்சாந்தரின் வீரமும் நினைவிற்கு வந்தது. தமிழ் நாட்டின் 9 பத்திரிகாசிரியர்களுக்கு அனுப்பினான். படுபாவி பத்திராதிபர் இப்படியா பழி வாங்கவேண்டும்?

எழுத்தாள நண்பர் 9 ஆசிரியர்களைப் பழி வாங்கினார். என் மைத்துனன் செய்தது இன்னும் சுலபமானவழி. 302, 618, 911, 77 இப்படி நம்பர் போட்டு ஒன்பது போலீஸ் காரர்களுக்கு அனுப்பிவிட்டான். நான் புதுமாதிரியாக என்ன செய்யலாம்? முனிசிபல் குமஸ்தாவோ, ஒன்பது கவுன்சிலர்களுக்கு அனுப்பியதைச் சொன்னபோது என்

சிரிப்பால் அவர் விலா எலும்பு சுளுக்கிக்கொண்டது! டாக்டர்களுக்கு அனுப்பலாமென்ருல், என் தோழன் டைப்பாயிடில் பிழைத்தவன் தன்னைப்பார்த்த ஒன்பது டாக்டர்களுக்கும் அனுப்பிவிட்டானே !

நானோ யாருக்கு அனுப்புவது என்ற பிரச்னை தீராமல் இருக்கிறேன். ஹாஸ்யக்கட்டுரை எழுதவேண்டும். ஓ ஜெகதாம்பிகே, 9 நபர்களுக்கும் அனுப்பவேண்டும்.

காலப்பறவை படபடவென இறக்கையடித்ததில் இரு நுண்ணிய சிறகுகள் விழுந்தன. அதாவது இரு மாதங்கள் சென்றன. காலை எட்டு மணி சமயம் கண்ணை விழித்துப்பார்க்கிறேன். வீட்டைச்சுற்றி மயிலினங்கள் ஏழெட்டு மழையை எதிர்பார்ப்பவைபோல் நின்றுகொண்டிருந்தன. கண்களை அகல விரித்துப்பார்த்தேன். வானவில்லின் வர்ணங்கள்போல நின்று கொண்டிருக்கிருர்கள். கனவாக இருக்கலாமென்று கிள்ளிப்பார்த்தேன். (என்னைத்தான்) உடனே அவர்கள் அதிர்ஷ்ட தேவதைகளாக இருக்கலாமென்று நெருங்கிப் பார்த்தேன்.

முல்லை முறுவல்! மோகன வாள்வீச்சு; கிள்ளைமொழி; பவுடரின் சுகந்தம்; கூந்தல் தைலத்தின் நறுமணம்; புஷ்ப பாரங்களின் "ஜம்" என்ற மணம்; எல்லாம் சேர்ந்து என் புத்தியைக் கலக்கின. மனித நிலையிலிருந்து அமரநிலைக்குப் போய்க்கொண்டிருந்த சமயம் "உங்களில் யாரிடமாவது ரூ. 100 இருக்கிறதா?" என்றேன்.

"இல்லையே!" என்ருர்கள்.

"சரி ஆண்மகவு கொண்டு வந்திருக்கிறீர்களா?"

பதில் இல்லை. அவர்கள் சிரிப்பொலி கலகலவென சப்தஸ்வரங்கள்போல ஒலித்தன. அவர்கள் சிரிப்புக்கு

நான் காரணம் என்னவாக இருக்கலாமென்று யோசித்த சமயம் நவரஸப்புலி சுமயசஞ்சீவியாக வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

அது ஒரு "ஓ ஜெகதாம்பிகே!" கடிதம். ஆண்டவனே, ஒரு கடிதத்தையே நான் ஒன்பது நண்பர்களுக்கு அனுப்ப முடியவில்லையே; இன்னும் ஒன்பது நண்பர்களை எப்படி கண்டுபிடிக்கிறது.

அந்தப் பெண்கள் "உங்கள் தம்பியைத்தான் பைத்தியம் என்று நினைத்தோம். ஆளுக்கு ஒருகாதல் கடிதமும் ஓ ஜெகதாம்பிகே கடிதமும் சேர்த்து எழுதியிருக்கிறார்!" என்று என்னிடம் நீட்டினார்கள். தம்பி புத்திசாலிதான்.

என் தலை சுற்ற ஆரம்பித்தது. அப்புறம் என்ன நடந்தது என்பது எனக்கு நினைவில்லை.

* * * *

எனக்கு முதன் முதலாவதாக "ஓ ஜெகதாம்பிகே" கடிதம் அனுப்பியவர் இதைப்படிக்க நேர்ந்தால் அவருக்கு நான் 18 தம்பிடிகளையும் மணியார்டர்மூலம் அனுப்பிவைக்கிறேன். என்மீது அவநம்பிக்கை இருந்தால் ஆசிரியருக்கு எழுதுங்கள். என் சன்மானத்திலிருந்து அனுப்புவார்.

[இந்த ஜெகதாம்பிகே கடிதச் சங்கிலியில் நண்பர்களில் பலர் மாட்டியிருக்கலாம். அதன்படி நடந்துகொண்டுமிருக்கலாம். இம்மாதிரிக் கடிதங்களை நம்பாமல் நம்பி நம்பிக்கையிழந்தவர்களுக்கும், அந்த பாக்கியம் கிடைக்கப் பெறாதவர்களுக்கும் இது படிக்க ரஸமாயிருக்குமல்லவா இந்த ஜெகதாம்பிகே கடிதங்களைக் கண்டுபிடித்து மெனக்கட்டு இவ்வேலையில் முனைந்து உழைத்து வருபவர் ஒருமுறையில் ஒருவித தியாகிகள்தானா? நீங்கள் பதில் சொல்லுங்கள்]

# மயூரத் தொனி மகிஷாம்பாள்

இக்கதை நடப்பதற்குக் காரண பூதராய் இருந்தவர் இஞ்சினியர் இருளப்பன்தான். இவர் எவ்வளவு தூரம் கட்டிடங்கள் பாலங்கள் முதலியன கட்டுவார் என்று எதிர் பார்த்தார்களோ, அதற்கு மாருகத் தமது உடம்பு ஒன்றையே வஞ்சனையில்லாமல் கட்டி வந்தார். இவர் அப்படி ஏதேனும் ஒன்றிரண்டு பாலம் கட்டி, அதன்மேல் நடந்தும் விட்டால், நிச்சயமாகத் திருநெல்வேலி யானை முதல் அமெரிக்கன் லாரி ஈருக சாதாரணமாகப் போகலா மென்பது உலகப் பிரசித்தம்.

முதலியாரைத் தேடி வந்த இஞ்சினியர் இருளப்பன், "என்ன முதலியார்வாள்! பிரமாத யோசனை செய்யறேளே! அரபிக் கடலைக் கடந்து போகப் பாலம் போடவா? அல்லது, வங்காள குடாக்கடலுக்குப் பாலமா?'' என்று கேலி செய்தார்.

"வேறென்றுமில்லை. நம்ம குழந்தை மகிஷாம்பாளுக்கு (நேயர்கள், உண்மைப் பெயர் வேறு இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொள்ளலாம்) என்ன வாத்தியம் சொல்லி வைக்கலாமென்று யோசனை. பகல் பட்டினி பஞ்சாமிர்தம்—அதான் கீழத்தெரு முக்குவீட்டு வக்கீல்—'வீணை சொல்லி வைக்கலாம், பேஷான வாத்தியம்' என்று சொல்கிருர். ஆனல் வீட்டுக்காரி, 'ஆமா, வீணையுமாச்சு கீணையுமாச்சு. அதெல்லாம் வாத்தியத்தோட சேத்தியா?

பிடில்தான் மேல்' என்று சொல்லுகிருள்'' என்று புலம்பிக் கொண்டே போனர்.

"சிவ சிவா! வீணையா, அதுவும் ஒரு வாத்தியமா? ஆயிரம் பேர் படித்தால் ஒருவருக்கு வருவது துர்லபம். அதுவும் குறைந்தது பதினைந்து வருஷம் பிடிக்கும். அப்பாடா! பிடிலோ கேட்கவே வேண்டாம். கதவைத் திறந்து வைத்துக்கொண்டு தைரியமாக அப்பியாசம் செய்ய வேண்டுமென்ருல், ஒரு வியாழ வட்டம் பிடிக்கும். அப்புறம் கோட் வாத்தியம், நாதசுரம், புல்லாங்குழல் இப்படி யெல்லாம் வாத்யம் இருக்கவே யிருக்கிறது. எப்படிப் போனுலும் லகுவாக, சீக்கிரம் வருகிறது ஆர்மோனியந்தான். ஆர்மோனியமென்ருல் ஆர்மோனி யந்தான், ஸார்!'' என்று அலற ஆரம்பித்தார் இஞ்சினியர்.

"இதைத் தான் நானும் சொல்லிக்கொண்டிருக் கிறேன். நம்ம சொன்ன அதெல்லாம் அவா காதில் ஏறுமா?'' என்று பெண் சிம்மத்தின் கர்ஜனை சமையல் கட்டிலிருந்து பிரயாணம் செய்து இருவர் காதிலும் வந்து விழுந்தது.

"அப்படித் தான் யோசனை!" என்ருர் தொந்தி கணபதி.

கணபதி முதலியார் ஆர்மோனியம் வாங்கியதற்கு யார் பொறுப்பாளி, தெரிந்ததா?

ஆர்மோனியம் வாங்கப்பட்டது. அதுவும் புத்த புதுசு. ஆர்மோனியம் சொல்லிவைக்கும் வாத்தியாருக்கா பஞ்சம்! சங்கதிகள், கார்வைகள், கமகங்கள், ஸஞ்சாரங் கள், பிர்க்காக்கள், ரவைகள், குழைவுகள், பிடிகள்...... (பர்ராமல் படித்ததில் பாக்கியுள்ளவை மறந்து விட்டதால், நேயர்கள் பூர்த்திசெய்து கொள்ளவும்.) இவற்ருேடு

விளம்பிதம், மத்திமம், துரிதம் என்ற மூன்று கால தாளங்களையும் விடாமல் எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தார் பாட்டு வாத்தியார்.

அவர் பாடும்பொழுது, ஒரு சமயம், ஸ்வரங்களை 'கிட்டே வந்து விடாதே' என்பது போலிருக்கும். அடுத்த நிமிஷம் தூர நிற்கும் ஸ்வரங்களைக் கையால் அணைத்து, தடவிக் கொடுத்து, சாறு பிழிவதுபோல காணப்படும். பிறகு, அம்மானை விளையாடுவதுபோல் மேலே போட்டுப் பிடிப்பார். அப்புறம் நமது கண் முன்னுல் அவற்றை இயந்திரத்தில் அரைப்பது போன்றும், நெல் குத்துவது போன்றும் காட்டுவார்.

அவர் பேசும்பொழுது, நீங்களும் நானும் பேசுகிற தமிழில் தான் பேசுவார். ஆனுல் பாடும் பொழுது தெலுங்கு, இந்துஸ்தானி, கன்னடம், ஹிந்தி, புஸ்டு, லத்தீன், (தமிழைத் தவிர மற்ற பாஷைகளின்) சொற்சிதைவுகளே காணப்படும். அவர் பாடுவது என்ன பாட்டு அல்லது உச்சரிப்பது என்ன வார்த்தை என்று நம்மாலும் நம்முடைய முப்பாட்டனுலும் கண்டுபிடிக்க முடியாதய்யா, கண்டுபிடிக்க முடியாது. அதன் பின் ரயில் வண்டித் தொடர்போல் புறப்படும் ஸங்கதிகளை நீங்கள் விரல்விட்டு எண்ண ஆரம்பித்தால் குறைந்தபட்சம் நாலைந்து பேர்களுடைய விரல்களை வாடகைக்கு வாங்க நேரிடும்.

மகிஷாம்பாள் பன்னிரண்டாம் வயதிலிருந்து அதற்கு அடுத்த பதிமூன்ரும் வயதிற்குத் தாவிக் குதித்துப் போய்க் கொண்டிருந்தாள். அவள் சங்கீத சாஸ்திரத்தை இன்னும் இரண்டோ மூன்ரே ஆண்டுகளுக்குள் கடந்தாக வேண்டும். ஆதலால் வாத்தியார் தமது காரியத்தைத் துரித காலத்தில் தட்டி விட்டார்.

ஒரு வாரம் சென்றது. முதலியார்வாளுக்குப் பிராண சங்கடமா யிருந்தது. எவ்வளவுக் கெவ்வளவு ஆர்மோனியம் சொல்லி வைக்க ஆசைப்பட்டாரோ அவ்வளவுக் கவ்வளவு அதை 'சமாப்தி' செய்ய விழைந்தார். ஆனால் 'வீட்டுத் தெய்வ'த்தின் அருள் கிட்ட வேண்டாமா? மகிஷாம்பாளும், ஆர்மோனியமும், சங்கீத வாத்தியாரும் பாட ஆரம்பித்து விட்டால் தொந்திக் கணபதி முதலியாருக்குப் பைத்தியம் பிடிப்பது போலிருந்ததில் எள்ளளவு ஆச்சரியமுமில்லை!

ஊரிலுள்ள சிலர், "மகிஷாம்பாளிடம் குற்றமில்லை. நாளைக்கு யாரோ ஒரு பயல்—படுபாவிப் பயல்—வந்து, 'பாடப் படிக்கத் தெரியுமா?' என்று கேட்பானும். அவன் கண்ணில் மண்ணை அள்ளிப்போட இங்கே பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அந்த நாசமாப் போறவன் எப்பொழுது வந்து தொலைவானே?" என்ற சகஸ்ர நாம அர்ச்சனையை அள்ளி வீசிக்கொண்டே இருந்தார்கள்.

மகிஷாம்பாளுக்கு வயது பதினைந்தானதும் சங்கீத வித்வானின் முன் தோன்ற முடியாத நிலைக்கு உள்ளானாள். ஆகவே, வாத்தியாரிடமுள்ள சங்கீத ஞானம், தாள நிர்ணயம், இவை மகிஷாம்பாளிடம் பிரதிபலித்தன. இம்மி அளவு கூட பிசகாதபடி, அதே ஸ்வரம், அதே ராக வேலைப்பாடுகள், அதே கமகம், அதே தாளம், இத்தியாதி, இத்தியாதி!

மகிஷாம்பாளுக்கு, கலியாணமாகாத பிரம்மசாரி மிஸ்டர் வாமவடிவழகன் 'அந்தப் பாவிப் பயலாக' வந்து சேர்ந்தான். இந்தப் பிரகிருதிக்குக் கொஞ்சம் பைத்தியம்—சங்கீதப் பைத்தியந்தான்! அதுவும் ஆர்மோனிய மென்றால் அவனுக்கு உயிர். "பெண்ணுக்கு ஆர்மோனியம் வாசிக்கத் தெரியுமா?"

என்று ஊராரிடம் சந்தேக நிவர்த்தி செய்து கொண் டான். எங்களூர்க்காரர்கள் அபிப்பிராய பேதமின்றி ஒருமுகமாக இருந்தது இந்த விஷயம் ஒன்றில் மட்டுமே! வாமு எந்த நிமிஷம் மகிஷாம்பாள் கழுத்தில் தாலி கட்டினானோ, அதே நிமிஷம் அவன் கழுத்தில் ஆர்மோ னியம் கட்டப்பட்டது.

நல்ல வேளையாக வாமுவுக்குச் சொந்த வீடு இருந்தது. இல்லாவிட்டால், ஊரை விட்டு அடுத்த ஊருக்குப் போக நேர்ந்திருக்கும். அங்கும் வீடு கிடைத் திராது. இப்படியாக உலகத்தில் இடம் கிடைக்காமல் போயிருக்கும்.

வடிவழகனுடைய வீட்டிற்கு அடுத்த வீடு ஒரு நாயுடுவுக்குச் சொந்தம். அவர் பெயர் பயங்கரம் நாயுடு. அவருடைய வீட்டிற்கு ஒருவர் தெரியாத்தனமாகக் குடி யிருக்க வந்தார். மகிஷாம்பாளின் ஆர்மோனிய அலறலைக் கேட்டதும் அவர் மறு நிமிஷமே ஊரை விட்டு ஓடிவிடப் போவதாகச் சொல்லவே, பயங்கர நாயுடுவுக்கு இடி விழுந் ததுபோலயிருந்தது. உடனே மகிஷாம்பாளின் ஆர்மோ னியத்தை இரவலாக வாங்கிக் கொண்டு போனவர், ஒரு வாரம் வைத்திருந்து ஒடித்துக் கொண்டு வந்து கொடுத்தார்.

அந்த ஒரு வாரம் முழுவதும் 'வாய்ப்பாட்டு' எப்படி ஓயும்?

ஒடிந்த ஆர்மோனியத்தைச் சரிப்படுத்தி, மறுபடியும் தன் தொழிலை மகிஷாம்பாள் ஆரம்பித்து விட்டாள். குடி யிருந்தவர் கட்டாயம் வேறு வீட்டுக்குப் போவதாகச் சொன்னார். நாயுடுவின் கோபம் பொங்கி வழிந்தது.

இதே சமயம் மகிஷாம்பாள் தனது ஆர்மோனியம் 'ரிட்டயர்' ஆக வேண்டிய காலம் வந்து விட்டதென்றும்,

அதற்குப் பதிலாகப் புது ஆர்மோனியம் வாங்க வேண்டு மென்றும் ஒற்றைக் காலால் நின்றாள். வாம வடிவழகன் வாங்கித் தொலைத்தான். பழைய ஆர்மோனியம் மூலையில் போடப்பட்டது.

மறுநாட் காலை புதுப் பெட்டியுடன் பாடிக்கொண்டிருந்த மகிஷாம்பாளைக் கண்டதும், பயங்கர நாயுடுவின் கண்ணில் கொலைக் குறி தோன்றிற்று. தம்முடைய வீட்டிற்குப் போய்விட்டு மறுபடியும் மகிஷாம்பாள் வீட்டுப் பக்கம் வந்தார். அவருக்குப் பின்னால் தடித்துக் கொழுத்துப் பருத்த 'டைகர்' கம்பீரமாக வந்துகொண்டிருந்தது.

மேல் ஸ்தாயியில் உச்ச ஸ்வரத்தைப் பிடித்து, ஸங்கதிகளைப் படிப்படியாகப் போட்டுக்கொண்டே மேலே போய், ஐம்பது அறுபது சங்கதிகளை 'பொலு பொலு' வென்று உலுக்கிவிட்டு, 'சடக்' கென்று கீழே யிறங்கும் சுவாரஸ்யமான கட்டத்தில் மகிஷாம்பாள் பாடிக் கொண்டிருந்தாள். வர வர நாயின் ரோமம் சிலிர்த்தது; உடம்பு முறுகியது; தரையைப் பிறாண்டியது; வால் முறுகவில்லை—ஏனென்றால் அதற்கு அது கிடையாது. உடனே ஒரு பாய்ச்சல்!

அவ்வளவு தான். ஹார்மோனியப் பெட்டியின் பிடியை வாயில் கௌவிக் கொண்டு தெருவிற்கு வந்து விட்டது. உயிருள்ள ஒரு எலியை நன்றாகச் சாகும் வரை என்ன பாடுபடுத்துமோ அவ்விதம் செய்தது டைகர்! மகிஷாம்பாள் பழைய பெட்டியையாவது பாது காத்துக் கொள்ள ஓடி அதைப் பார்த்தாள். பழைய பெட்டி! அட நமோ நாராயணா!! அது எங்கே போச்சு!!!

"நேற்று இரவு ஒன்று கிணற்றில் போட்டேன்; இன்றைக்கு ஒரு பெட்டியை 'டைகர்' காலிபண்ணிற்று.

ஹூம்! இனிமேல்......" என்று சொல்லிக் கொண்டே அந்தமாத வாடகை ரூபாய் 25ஐ வாங்க ஓடினார் பயங்கர நாயுடு!

குறிப்பு:—இக் கதையில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனை பெயரன்று. காரணப் பெயரே. மயூரத்தொனி மகிஷாம்பாளின் உண்மைப் பெயரை நீங்கள் ஊகிக்க முடியுமா? ஆமாம், கோகிலத்தொனி குயிலாம்பாள் தான்!

# கடவுள் பிறந்த கதை

அடிக்கடி எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. 'கடவுள் ஏன் பிறந்தார்? அல்லது கடவுளை ஏன் பிறப்பித்தார்கள்?' என்பதுவே. மனிதன் கடவுளை சிருஷ்டித்ததாக ஒரு கட்சி; கடவுள், மனிதனை சிருஷ்டித்ததாக மற்றொரு காட்சி—இது பழமையானது. நானோ மனிதனையே நம்புகிறவன்.

எழுதிக் கொண்டிருக்கும் என் பேனா இயங்கும் சக்தி வாய்ந்தது. அதற்குள்ள அச்சக்தியை நான் இயக்குகிறேன். பேனா இயங்குகிறது. உயிர்ப் பொருளாகிய எனக்கும் சடப் பொருளாகிய என் பேனாவிற்கும் எல்லையில் வேறு பாடு தோன்றினாலும், காண்டல், கருதல் என்னும் அளவைகளால் துருவித் துருவி ஆராயும் போது எந்த ஒரு உயிரும் தனித்து நிற்றல் இயலாது, மற்றவையோடு நேராகவோ, படிமுறையாலோ தொடர்பு பெற்றிருக்கின்றது என்ற உண்மை புலப்படும்.

இப் பேரண்டத்திலுள்ள நுண்ணிய பொருள்கள் அத்தனையும் இயக்கம் கொண்டது; ஓடும் ஆறு, வீசும் காற்று, இறங்கும் அருவி, அலையும் ஆழ்கடல் எல்லாம் ஒரு நியதிக்குள் ஆடிக் கொண்டிருக்கின்றன. எப்படி இயங்கும் தன்மை உண்டாயிற்று? எங்கிருந்து கிடைத்தது?

சாட்டி நிற்கும் அண்டமெல்லாம்
சாட்டை யிலாப் பம்பரம் போல்
ஆட்டி நிற்கும் அண்ணலார்

என்ன ஒருவன் இருந்திருக்கக்கூடாதா? இருக்கிருன் என நினைத்ததில் தவறு இல்லை.

சமயம் கடவுள் என்பதெல்லாம் மன விகாசங்கள், சுட்டிக் காட்டி கண்ணுரக் காணக்கூடியதன்று. அது தர்க்க சாஸ்திரத்திற்கோ அல்லது விஞ்ஞான ஆராய்ச்சிக்குள்ளோ அகப்பட்டு புலனுகிற வஸ்துவல்ல.

ரஸம் பூசப்பட்ட கண்ணுடியில் தான் உருவம் புலனுகும். பக்தி, நம்பிக்கை என்ற ரசத்தைப் பூசிக் கொண்டால், இதயத்தில் கடவுளைக் காணலாம். அதை உணர்ந்த அனுபவித்த ஞானிகள் வழி வழி வம்சமாக சுருக்கமாக விளக்கிப் போயிருக்கிருர்கள். போய்க் கொண்டும் இருக்கிருர்கள்.

## 2

சர்க்கஸுகளில் ஒருவன் பத்துப் பந்துகளை உயரே வீசி, அதை அப்படியே ஒன்றன்பின் ஒன்ருக விளையாட விட்டு வேடிக்கை காட்டுகிருன். அதிலே ஒரு ஆனந்தம் சக்தி பொதிந்திருப்பதை நாம் பார்த்து வியக்கிருேம். பெட்டிக்குள் இருக்கும் பத்துப் பந்தும் நமக்கு வியப்பாக இருக்கிறதா? ஆயிரக்கணக்காக இருந்தாலும் பந்துகளை கண்ணெடுத்தும் பார்க்க மாட்டோம்.

ஆனல் அப் பந்துகளை தன் சத்திக்குள்ளாக்கி, அதை ஒரு நியதிக்குள் சர்க்கஸ்காரன் ஆட்ட ஆரம்பித்து விட்டால், நாம் கண் இமைக்காமல் பார்க்கிருேம். பந்திலே

நம்மை ஆகர்ஷிக்கும் ஒரு சக்தி பொதிந்து கிடக்கிறது என்று கண்டுபிடித்தவன் சர்க்கஸ்காரன். இயற்கை யற்புதத்திலே மனசைப் பறிகொடுத்து ஜட தத்துவமான பொருள்களிலே உயிர்த்தத்துவம் நிறைந்த அற்புதமான ஒரு சக்தி இருக்கிறது. அதை ஆட்டுவிக்கிறவன் ஒருவன் உண்டு என்ற முடிவிற்கு வருகிறவன் கலைஞன்.

கனவு பிறக்கிறது; ஆம், அது சூன்யத்திலே அது பிறக்கிறது.

க்ஷேத்திரக் கணிதத்திலே கொடுக்கப் பட்டுள்ள சில கோடுகளையும் கோணங்களையும் வைத்துக் கொண்டு இல்லாத விளையாட்டுக்கள் விளையாடுகிறார்கள்; நம்மையும் விளையாடவிடுகிறார்கள். இப்படி கற்பனாலோகத்தில் மிதக்க யத்தனித்த கலைஞன், தன்னுடைய அறிவின் ஆழத்திற்கும், கற்பனைப்பரப்பிற்கும் தக்கபடி சமயத்தை வகுத்தான்.

மனித சுபாவத்தை யொட்டி, பழக்க வழக்கங்களை யொட்டி கடவுள் வடிவெடுக்க ஆரம்பித்தார்.

கோரமும், கொலையும் குடிகொண்ட இடத்திலே பிறந்த கலைஞன் பயங்கரமான வடிவத்திலே, சாட்டையிலாப் பம்பரம் போல் ஆட்டுவிக்கும் அண்ணலைக் கனவு கண்டான்.

இதயப் பக்குவம் அடைந்தவன், கொல்லாமை விரதம் பூண்டவன், உயிர்களிடம் அன்பும் கருணையும் கண்டவன், இயற்கையிலேயே இன்பத்தையும் சாந்தத்தையும் கண்டான். கடவுள் அப்படியே கருணாமூர்த்தியாக வடிவெடுக்க ஆரம்பித்தார்.

இயற்கைக்குள் கோரதாண்டவத்தையும் குமிண் சிரிப்பையும் மாறி மாறி மன நிம்மதிக்குட்பட்டபடி

கலைஞர்கள் கண்டார்கள். அப்படிக் காண தத்துவ ஆராய்ச்சியும் சமய வாழ்க்கையும் ஊன்று கோலாக இருந்தன.

கடவுள் அல்ல; கடவுள்கள் அந்தக் கலைஞர்கள் இதயப் பூங்காவிலே உலாவத் தொடங்கினார்கள்.

கற்பனைத் தளத்திலிருந்து சிந்தனா சக்தியால் உருக் கொண்ட தெய்வங்களை மனக்கோவிலை விட்டு எங்காவது பிரதிஷ்டை செய்துவிட வேண்டுமே. தான் பெற்ற இன்பம் பிறரும் பெறட்டுமே எனத் துடித்தான் கலைஞன்.

வடிவம் பிறந்தது; வையத்தில் வாழ்ந்தது; வையத்தை வாழ்விக்கின்றது.

பிறருடைய புகழ்ப் படத்தை எழுத்தோவியத்தை மட்டும் கண்டும் கேட்டும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உருவம் கொடுக்கிறோம். நாம் நினைத்தபடி எதுவும் இருக் காது. இருக்கவுமில்லை என்பதையும் கண்கூடாகக் காண்கிறோம். உண்மைத் தோற்றமும் பொலிவும் நம் கற்பனையைவிட மட்டமாகி விடுகின்றன.

கற்பனையும் சிந்தனா சக்தியும் அற்ற மக்களுக்கு சிந்தனையும் கற்பனையும் தூண்ட சமயக் கலைஞர்கள் முயற் சித்தார்கள்.

வடிவங்கள் பிறந்தன. பலவாகப் பிறந்தாலும் உள் ளான தத்துவம் ஒன்றாகவே இருந்தது.

வார்த்தையிலே தான் கண்ட கடவுளை வர்ணித்தான் இலக்கியக் கலைஞன்.

கல்லிலே செதுக்கிக் காட்டினான் கறுங்கற் சிற்பி.

பொன்னிலேயும் செம்பிலேயும் வார்த்து உருவங் களைக் களை ததும்பத் தந்தான் வார்ப்படக் கலைஞன்.

கல்லிலும் பொன்னிலும் வார்த்தை மெருகிலும் பிறந்த உருவங்கள் சில ஊமையாகவும், சில பேசுந் தெய்வமாகவும் மக்கள் மனத்திலே கோயில் கொண்டன.

சாஸ்திர விற்பன்னர்களும், சமயாச்சாரியர்களும் "இலக்கணம் வகுக்க" ஆரம்பித்தார்களே, அப்போது தான் எண்ணக் கடலுக்குள்ளே கொதிப்பும் கொந் தளிப்பும் பிறந்தன.

பிறந்து விட்ட தெய்வங்கள் பாடு கஷ்டமாகி தவி யாய்த் தவித்தன.

தான் சிருஷ்டித்துள்ள தெய்வத்தை மாற்றான் மறுக் கும்போது ஆகட்டும், தலைகுனிய மறுக்கும்போது ஆகட்டும், தான் தனது என்ற சிருஷ்டியிலே அழுந்தி பக்தி மேலிட்டில் அதுவே நியாயம் என்று சொல்ல ஆரம்பித் தார்கள். கலைஞர்களுக்குள்ளே அபிப்பிராய பேதம்; தர்க்கம்; கருத்து வேறுபாடு. "கடவுள் உண்டு" என்ற சன்மார்க்கத்தைச் சொல்ல, ஒருவரோடு ஒருவர் குஸ்தி போட்டார்கள்.

கடவுளோ மக்களின் அறிவு, தூய்மை, ஆராய்ச்சி, அனுபவம் இவற்றின் பரிபக்குவத்திற்கு உள்ளானர். யாரும் பூர்ணமாக அறியாத வஸ்துவாக இருப்பதால், "இதுதான் கடவுள்" என்று சுட்டிக்காட்ட தைரியம் வரவில்லை; வரவும் முடியாது.

முடிவுள்ள எந்த விஷயமும் அவ்வளவுதூரம் மனசைக் கவரவும் மென்மேலும் வியப்புத் தரவும் முடியாது. முடிவற்றதும் பார்க்கப் பார்க்க புதிய புதிய வடிவங் களும், எண்ணச் சாயல்களும் ஏற்படுத்திக்கொண்டே வருவதால்தான் இன்றும் கடவுள் உயிரோடு இருக்கிறர்.

# 3

சமயம், ஒரு ஆலவிதையைப் பார்த்துக்கொண்டே அது எப்படி எப்படியெல்லாம் வளம்பட கிளைத்தோடும் என்று கற்பனை செய்யப்பட்ட கற்பகத்தரு. பார்க்கிறவன் சிந்தனை ஆத்மபக்தி இதற்குள்ளாகவே காட்சி அளிக்கும்.

ஆனால் அதை ஊன்றி உணர்ந்தால் ஊனிலிருந்து உயிரும், உயிரிலிருந்து உணர்வும் வருகிறது என அறியலாம். அதற்கும் அப்பால் அதில் ஊன்றிவிட்டால் அது கிளைத்தோடிய மரமல்ல, சிறு வித்தே என உணர்வார்கள். இது மேலான நிலை.

குறுக்கே ஒரு சந்தேகம். இந்த வித்து முளைக்காமற் போனால்? மண்ணோடு மண்ணாய் மக்கிப் போகலாந் தானே? அவனே நாஸ்திகன்.

மரத்தின் ஜாதி ஒன்றாக இருந்தாலும் அவை கிளைத் தோடும் விதம் வேறு வேறாக இல்லையா? ஆகவே பலவித வடிவங்கள் பிறந்தன. பசிய உள்ளத்தை வளர்த்துள்ள வித்துக்குள்ளிருந்து வந்துள்ள விருக்ஷம் கொடிய வேர்ப் பிடிப்பிற்குள்ளாக இருக்கிறது. வேர்கள்தான் சமய வாதிகள். இந்த வேர்கள் மரத்திற்கு உபகாரமாக இருக்கலாம். மக்களுக்கு உபயோகமில்லை.

சமயத்துக்குள்ளான வார்த்தைப் பந்தல்கள், எண்ணச்செறிவுகள், பரிபாஷைகள் எல்லாம் பூமிக்கடியில் கிடக்கும் வேர்களைப்போல் ஒன்றும் புலனாகாதவை. மன்னனுக்கு மேலே கண்ணுக்கினிய காட்சியோடு விளங்கும் கற்பகத்தருப்போல கோயில்களிலே விக்ரகங்களாகவும், சிற்பச் சிலைகளாகவும் பார்த்து வியக்கிறோமே, அதைச் செய்து வைத்தவர்கள் சமய ரஸிகர்கள்.

இவர்களால்தான் கடவுள் இன்னும் உயிரோடு இருக்கிறார். எழுந்து வீதியிலே பவனி வரவும் செய்கிறார்.

தண்ணீரின் தன்மை பாத்திர பண்டங்களின் உருவங்களுக்கு ஒப்ப மாறும். அப்படித்தான் கடவுளும். அழகான பாத்திரம்; அழகான கடவுள். கோணலான பாத்திரம்; கோணலான சாயை. நிறமும் ருசியும் சேருகிறப் பொருளைக் கொண்டது தண்ணீர். உறைந்து பனிக் கட்டியாகிக் கரைந்து, நீராவியாகி கண்ணுக்குத் தெரியாத வஸ்துவும், ருசி காற்றோடு கலந்து வானளாவும் பொருளும் ஆகி, இடித்து முழங்கி நம் தலைமீதே விழுந்து விளையாடுகிற பொருள் தண்ணீர்.

சயன்ஸுக்குள்ளான தண்ணீரின் தன்மை எங்கும் ஒன்று என்பதுபோல, தத்துவத்திற்குள்ளான எல்லாக் கடவுளும் ஒருவனே என்பர் அறிஞர்.

ஆனால் நமக்கு நீராவி மேகம், காற்றில் கலந்த நுண்துளி, பனிக்கட்டி, மலையில் விழும் அருவி, ஆறு, கொந்தளிக்கும் கடல் எல்லாம் வேண்டும். நாம் ரஸிகர்கள். ஒவ்வொரு பொருளிலும் புதிய புதிய தோற்றங்களையும் இன்பங்களையும் காண்கிறோம்; வணங்குகிறோம்; வழிபடுகிறோம்.

கடவுள் வழிபாடு நமக்கெல்லாம் ஒரு சாதனமாக மட்டும் இல்லாமல் அது சாத்தியமாகவும் ஆகிவிட்டது. அப்படி சாத்தியமாகும்போது, அழகும், அறிவும் ஆனந்தமும், அன்பும் நமக்குள்ளே பிறக்கின்றது. வற்றாது புதிய புதிய உண்மைகள் பிறந்துகொண்டே இருக்கின்றன.

# சிவகாமியின் விடுதலை

சில நாட்களுக்குமுன் என் பிறந்த வீட்டுக்கு வந்தேன். எனக்கு கலியாணம் நடந்ததும், பட்டணத்திலேயே இருக்கும்படி நேர்ந்துவிட்டது. ஏழு, எட்டு வருஷங்களாக பிறந்த ஊரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் துடிதுடிக்கும். ஊரில் விளையாடிய இடங்களையும் சிநேகிதைகளையும் தோப்புத் துறவுகளையும் எண்ணி எண்ணி ஆவலை அடக்கிக் கொள்ள வேண்டியதாகப் போய்விட்டது.

ஊருக்குள் போனதும் முதன்முதலாக சிவகாமிதான் என் கண்ணில் பட்டாள். அவள் அழகும், தேகக்கட்டும் அந்த ஜாதிப் பெண்களில் நான் எதிர்பார்க்கவில்லை. என்னை "வாருங்கம்மா" என்றாள். நான் அவளை வீட்டுக்கு வாயேன் என்றேன். அவள் என்னுடைய விளையாட்டுத் தோழி. மேலும் வீட்டில் சில்லரை வேலை செய்கிறவள். அதெல்லாம் அந்தக்காலத்தில். இன்று அவள் எப்படியோ? முக்கியமாக யாருடைய மனைவியோ?

சிவகாமியும் நானும் பழைய சம்பவங்களைப்பற்றி பேசிக்கொண்டே இருந்தோம். அவளுடைய வாழ்க்கையில் மகத்தான சம்பவங்கள் நடந்திருக்குமென நான் நினைக்கவில்லை. இந்த மகத்தான சம்பவங்களை, இரண்டு வருஷங்களுக்கு முன்னால், அவள் தெரிவித்திருந்தால் அதை நான் 'கதை' யென நினைப்பேன்.

காங்கிரஸ் அரசாட்சி, சமூகத்திற்கு நன்மை செய்திருக்கலாம்: ஆனால் தனி மனிதர் வாழ்க்கையில் கூட பிரயோஜனப்படுமா? இதை நான் நம்பவேயில்லை. ஆகவே கருப்பத் தேவனிடமே கேட்டேன். கந்தனிடம் கூட கேட்டேன். இருவரும் ஒன்றுபோல சொன்னார்கள். மூவரும் சேர்ந்து, ஒரு கதையா கட்டுவார்கள்? ஊரில் கூட இரண்டு வருஷங்களுக்கு முன் இந்த சம்பவம் நடந்ததாகச் சொல்லுகிறார்கள்.

நான் நம்புகிறதா? ஆமாம்; நம்பிக்கை ஏற்படுகிறது. ஊரில் அந்தக் காலத்தில் கள்ளுக்கடை இருந்த இடம். இப்பொழுது இல்லை. அது ஒன்றே எனக்கு சாக்ஷியாக நிற்கிறது. கள்ளுக்கடை மூண்டத் தேவன்......கதையைச் சொல்லுகிறேன்.

# 1

நட்ட நடு நிசி. சிவகாமி, அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். தெரு நாய்கள் 'வள் வள்' ளென குலைத்துக் கொண்டிருந்தன. கோழிக்கூட்டில், கோழிகள் கொக்கரித்துக் கொண்டிருந்தன. நாய்களையும் கோழிகளையும், கடவுள் படைத்தது தப்பென்று கருப்பத் தேவன் திட்டினான். மெதுவாக, சிவகாமியின் முகத்தில் சுருண்டு நெளிந்த சுருள்களை விலக்கினான். காதில் கிடந்த 'காதோலை' யைக் கழற்றினான். அவன் மனம் பதறியது. ஆனால் எவ்வளவோ காலம் அப்படிச் செய்வதில் பழகிய மனம் தானே!

சிவகாமி, புரண்டு படுத்துக் கொண்டாள். கருப்பத் தேவன் பின்னால் நகர்ந்து 'காதோலை' யை மடியில் வைத்துக் கொண்டான். அவன் மனம் தர்க்க சாஸ்திரம் தெரிந்தது. " அட, பைத்தியமே. ஒரு காதில் நகை போடுவதைப்

பார்த்திருக்கிறுயா ? விகாரமாக இருக்கும்" என்று சொன்னது. வாஸ்தவந்தானே ! மற்றொரு காதோலையான நகையையும் கழற்றி மனதைத் திருப்தி செய்தான்.

கோழி கூவி, பொழுது விடிவதைத் தெரிவித்தது. சிறிது நேரத்திற்கு முன் கோழி படைக்கப்பட்டதின் அர்த்தம் புரியாமல் விழித்த கருப்பத்தேவன் அவன் அர்த்தம் புரிந்து கொண்டான். அதோடு, கடவுளை வணக்கம் செய்யக் கூட எண்ணினுன். கடவுளை—அவனுடைய அகராதிப் படி கள் ஒன்றில் மட்டுமே இருப்பவர்—தரிசிக்க கோழி கூவியதும் புறப்பட்டான். அன்று கள்ளுக்கடையில் அவன் தான் 'ஏரான் !'

கருப்பத்தேவன் ரொம்ப ரொம்ப நல்லவனுக இருந்தான். அதெல்லாம் அவன் குடியானவனுக இருந்த சமயத்தில், மாடு கன்றுடன், பெண்சாதி பிள்ளை குட்டிகளுடன் இருந்த காலத்தில், வம்பு தும்பு செய்யாமல் யோக்கியனுக இருந்தான். அவன் மனைவி இறந்த போது, சிவகாமியை மட்டும் விட்டு விட்டு மற்றப் பிள்ளைகளைக் கூடவே கூட்டிக் கொண்டு, பரலோகம் போய் விட்டாள். குடியானவனுக்கு மனைவியின் அருமையும் பெருமையும் தெரியும். அவள் இல்லாவிட்டால், நடவு, நாற்று, அடிப்பு, அறுப்பு ஒன்றும் நடக்காது ; இந்த விஷயம் குடியானவனுகிய கருப்புத் தேவனுக்குப் புலப்பட்டதும் மனைவியின் பிரிவை மறக்க 'தண்ணி' போட ஆரம்பித்தான். நாளாரம்பத்தில் கவலை நீங்கி—மனைவியின் பிரிவுத் துயரம் நீங்கி—மற்றொரு கவலை பிடித்துக் கொண்டது. தினசரி எப்படி நாலு குடம் குடிக்கிறது ?—இதுதான் அவன் கவலை.

இனிமேல், அவனுல் எவ்விதமாக குடிக்க முடியுமோ? இன்று அவன் சிவகாமியின் 'காதோலை' யைக் கழற்றி விட்டான். அவனுல் இனிமேல் அவளிடமிருந்து திருட

நகை யிருக்கிறதா? அடமானம் வைத்த சொத்துக்கள் திரும்பவும் கிடைக்கப் போகிறதோ?—இதெல்லாம் எட்டி யோசனை செய்ய வேண்டிய தொந்தரவு இல்லாமல் கருப்பத்தேவன் கள்ளுக் கடையில் உருண்டான்.

*　　　*　　　*

சிவகாமி எழுந்தபோது, அவளுடைய கவனம் காதோலை மீது சென்றது. அது, இருக்க வேண்டிய இடத்தில் இல்லாதலால் உணர்ச்சி ஏற்படவே, அவள் தேடினாள். தகப்பன் படுக்கையை ஏறிட்டுப் பார்த்தாள். கலியாண படுக்கை அவளுக்குக் காரணத்தைச் சொன்னது. உடனே அவள் அழவில்லை. ஒருநாள் செத்தால் அழுவார்கள்; தினசரி செத்தால் அழ முடியுமா?

ஒரு வாரமாக தகப்பன் வரவில்லையே என சிவகாமிக்கு கவலை ஏற்பட்டது. ஆனால் தேவனுக்கு இன்னும் பத்து நாள் குடிக்கப் பணம் இருக்கும்போது, வீட்டுக்கு ஏன் வருகிறான்? இல்லை, வந்தாலும், வேறு ஏதாவது அகப்படத்தான் போகிறதா?

## 2

எங்களூர் கிராமாந்தரம். ஊரைச் சுற்றி நெல் வயல்கள். மேற்கே கல்லாம் பறம்பு. பறம்பில், கல்லும் முள்ளும் அதிகம். பறம்பின் சரிவில் ஒரே உடங்காடு. உடங்காட்டில், செடியும் கொடியும் பின்னிப் பிணைந்துள்ள அடர்த்தியான புதர்கள் கூட இருக்குமாம். இலந்தை, காரண்டி யெல்லாம் அங்கு தண்ணீர் பட்ட பாடு. இங்கே ஏழை எளியவர்கள் விறகு பொறுக்கப் போவதுண்டு. சிவகாமி, காலில் பனைமடல் ஜோடு

போட்டுக் கொண்டு காய்ந்த சுள்ளிகள் பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

தூரத்தில், ஆடுகளும் மாடுகளும் மேய்ந்து கொண்டிருந்தன. மாட்டுக்காரப் பயல்கள் தெம்மாங்கு, வில்பாட்டு இவைகளை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தார்கள். கருவேல மரம், உடைமரம், இவைகளின் தழைகளை ஆடுகளுக்காக, ஆட்டுக்காரப் பையன்கள் ஒடித்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கமாக சிவகாமி, சுள்ளி பொறுக்கிக் கொண்டு வந்தாள்.

"ஏ......ஆ...த்தே. சிவ...ா...மி...இந்தா...உன்னைத் தானே. அதோ...அந்த மறியை இந்தாண்டை...பத்து" என்று குரல் கொடுத்தான் ஒரு ஆட்டுக்காரப் பையன். காடுகளில், ஒருவருக் கொருவர் சிறிய உதவிகளை எதிர் பார்ப்பது வழக்கம். அந்த உதவிகளை எதிர் பார்த்தபடி செய்வதும் சகஜம். சிவகாமி, ஆட்டுக் குட்டியை விரட்டினாள். ஈட்டிபோல் கிடந்த உடை முள்ளொன்று காலில் குத்தி விட்டது. ஆட்டுக்காரப் பையன் இதைக் கண்டு அங்கு வந்தான். முள் குத்துவதும், முள் எடுப்பதும் காடுகளில் பெரிய காரியமாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

"என்ன, ஆத்தா! உன்னைக் கண்ணுல காணோம்? முள்ளு முத்திட்டுதா?" என்று நையாண்டி செய்தான்.

"சரி, சரி. உன் முள்ளாங்கி (முள்வாங்கி) யைக் கொடு" என்றாள் சிவகாமி. ஒரு மரத்தடியில் உட்கார்ந்து முள்ளைக் கிளற ஆரம்பித்தாள். ஆட்டுக்காரன் சிவகாமியின் வாயைக் கிளற ஆரம்பித்தான்:

"அட புள்ளே, உன் 'காதோலை' எங்க க்காணம்?"

"இந்தா பாரு, உம்மேலே ஆணை. இந்தப் பேச்சு மட்டும் பேசாதே."

"உங்கிட்ட என்னதாம் பேசறது? நான் சிவாமியிட்ட கேட்கிறேன்." என்றவன் தூரத்தில் சென்ற ஆடுகளை ஒரு குரல் கொடுத்து விட்டு "நான் ஒரு சங்கதி கேப்பேன். உள்ளதைச் சொல்லுவாயா?" என்றான்.

"ஊர்ப்பட்ட வேலை எனக்கு இருக்கு........"

"இருக்காதோ? கலியாணம் வந்தால் நாலு வேலை நடக்கணும்........"

"ஆரம்பிச்சிட்யா? உன் கேலியை. எனக்கு ஒருநாள் தான் கலியாணம்........"

"கலியாணம் இருக்கட்டும். பரிசம் எவ்வளவு சொல்லேன்."

"நீ போட்டது தான்........"

"யாரு நானா? உங்க அய்யா நூறு கேட்டதுக்கு முண்டத் தேவன்—அதான் கள்ளுக்கடை முண்டத் தேவன்—ஆயிரம் ரூவா போடுவேன் என்றானும். ஒன்னிடம் கேட்டா உள்ள ரகஸியம் தெரியுமே........"

"நான் சொன்னா நீ கேக்கமாட்ட! என்ன பேசினாலும் பேசு. அந்த நாசமாப் போற முண்டத்தேவன் பேச்சு மட்டும் எடுத்துடாதே. எங்க சொத்துப் போச்சு. என் நகை நட்டுப் போச்சு, ஊருல முக்காவாசிப் பேரு சொத்து சுகம் அவனிடம் இருக்கு. இப்படிப் போயும், எவனுக்குப் புத்தி இருக்கு? எங்க ஐயாவைப் பாரேன்; அந்த முண்டத்தேவன் புள்ளை குட்டி விளங்குமா?"

"பிள்ளை குட்டி விளங்கத் தானே உன்னை கட்டிக் கொடுக்கப் போறாராம், உங்கய்யா."

"இனிமே, சொன்னே. நம்ப ரொண்டு பேருக்குமே பழி வந்துடும். அதோ பாரு உன் ஆடுக. வயலில் விழுது

.......இந்தா முள்ளாங்கி" என்று விறகுக் கட்டுடன்புறப் பட்டாள்.

"சிவாமி........" என்றான் கந்தன். விளையாட்டும் பரிகாசமும் மாறி அவன் குரலில் அன்பு ததும்பியது.

# 3

காங்கிரஸ் மந்திரிகள், திடீரென்று கள்ளுக்கடைகளை அடைத்து விடும்படி சட்டம் போட்டார்கள். முண்டத் தேவன், கடை அதற்கு விதி விலக்காக நிற்க முடியுமா? அடைத்துப் பூட்டிய கடை முன்னால் பலர் அழுதார்கள். அழுதவர்கள் முகம் மொந்தைக் கலயம் போல மாறின. கருப்பத்தேவன் அடைந்த வருத்தம் சொல்ல முடியாது. பனை மரத்தடியிலிருந்து, அவன் வடித்த கண்ணீர், அம்மரத் திற்கு நாலு வருஷத்திற்குப் போதும். அவன், காங்கிரஸ் சர்க்காரை பழித்ததைச் சொல்லக்கூட மனம் நடுங்குகிறது. கருப்பத்தேவன் "இந்த காங்கிரஸ் மந்திரிகள் யோக்கி யதை தெரிஞ்சுதானே நான் ஓட்டுப் போடலே" என்று தன் வருத்தத்தை சமாதானம் செய்து கொண்டான்.

மதுவிலக்கு வந்தது. சிவகாமியும் கந்தனும் சந்தோ ஷப்பட்டார்கள். சுகமும், சுபிட்சமும் பொழியு மென எதிர்பார்த்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடி அக் கிரா மத்தில் நடக்கத்தான் செய்தது. புத்தி தெளிந்த கருப்பத் தேவன் குடியானவன் ஆனான். உண்டு உடுத்தியது போக மிகுந்த பணம் முண்டத் தேவனிடம் அடமான மாக உள்ள நிலபுலன்களுக்கு வட்டியாகவே கொடுத்து வந்தான். வட்டிதான் பகாசூரன் தம்பி மாதிரி, கொடுக்க கொடுக்க நிறையாத வஸ்துவாயிற்றே!

முண்டத்தேவன் முதல் வேண்டுமென நெருக்கிக் கேட்டான். கருப்பத்தேவன் மூட்டையாக பணத்தை

கட்டிவைத்திருக்கிருனு? சில சமயம் கண்டிப்பாகவும், சில சமயம் நயமாகவும் கேட்டு வந்தான். கருப்பத்தேவன் இப்படி, தத்தளித்து வந்த சமயம் ஆசை வலையில் சிக்க வைத்து விட்டான் மாஜி கள்ளுக்கடை முதலாளி.

வாழ்க்கை முழுதும் சோதனை. பெரிதும் சிறிதுமான சோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படி வந்த ஒரு பெரிய சோதனையில் கருப்பத்தேவன் தவறி விட்டான். கள்ளரக்கனுக்கு, மீண்டும் அடிமையானுன். காசு பணம் கேட்காமல் இப்படி கள் இறக்கி திருட்டுத் தனமாக முண்டத்தேவன் கொடுத்து வருவானேன்?

சிவகாமியின் மனசில், கள்ளுக்கடை மூடப்பட்ட தினத்தன்று, ஏற்பட்ட எண்ணங்கள்—கோபுரங்கள் போல் உயர்ந்து நின்ற கனவுகள்—இடிந்து விழுந்து நாசமாயின.

## 4

கருப்பத் தேவன், பழைய கருப்பன் ஆகிவிட்ட பின்பு ஒருநாள் மாலை கையில் பட்டையுடன், உட்கார்ந்திருந்தான். பக்கத்திலிருந்த முண்டத்தேவன் கள் வார்த்துக் கொண்டிருந்தான். திடீரென பேச்சை ஆரம்பித்தான்.

“உனக்கு ஞாபகம் இருக்கா. நானூறு கொடுக்கணும் சொத்தெல்லாம் போக.”

“எனக்கு அது தெரியாது. கள்ளை ஊத்து. வட்டி கிட்டி போட்டு வாங்கிக்கோயேன்.”

“வட்டி இருக்கட்டும். முதலுக்கு என்ன செய்யப் போறே?” என்று கலயத்தை வைத்தான்.

“நீ சொல்றபடி கேக்கரேன், குறை மொந்தையும் ஊத்து.”

"அப்போம், நாம் முன்னலே பேசினபடி நடந்துக்கணும். சிவகாமியை......எனக்கு சொத்து இல்லையா? என் வயசு ஒரு வயசா? வீடு இருக்கு, வாசல் இருக்கு. பத்து கோட்டை விரப்பாடு, வண்டிமாடு...இறவைக் கிணறு... எல்லாம்."

"என்ன சொல்லுதே, உங் கிணத்தடி பனைக் கள்ளு ரொம்ப நல்லா யிருக்குமே......"

"உன் கடனைக் கேட்கவே மாட்டேன். உன் மக நம்ம வீட்டுக்கு வந்திட்டாப் போதும். சம்மதம் சொல்லு......"

"என் சம்மதம் என்ன? நாலும் பார்த்துச் செய்யணும்......"

"ஆயிரம் ரூபாய் பரிசம் போடுதேன்."

"பதினாயிரத்துக்குப் போட்டாலும் எனக்கு தினசரி படி அளந்திடனும். ஒரு குடமாவது கிடைக்குமோ?"

"அட, இதுதானா பெரிய காரியம்........இஷ்டப்படி செய்துக்கிடுவோம்" என்ற வார்த்தைகள் முடியுமுன், ஏதோ வெளிப் பக்கத்தில் ஓலையின் கலகலப்பு கேட்டது. சந்தேக நிவர்த்தி செய்யவந்த முண்டத் தேவனுக்கு, இருள் கவியும் நேரமாதலால், ஓடிய உருவம் யாரென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. அதை லக்ஷியம் செய்த தாகவும் தெரியவில்லை.

கருப்பத்தேவன் மற்றொரு மொந்தையைக் காலி செய்தான்.

* * *

நக்ஷத்திரங்கள் இரண்டொன்று மின்னிக்கொண்டிருந்தன. இருட்டு எங்கும் பம்மி, கும்பிருட்டாக மாறியது.

மேல்பக்கம் உடங்காட்டிலிருந்து நரியின் ஊளையிடும் சப்தம் காற்றில் மிதந்து வந்தது. கீழ்பக்கத்து வயற் காட்டில் ஆட்டுக்கிடையின் கதறல்கள் கேட்டன. வாய்க் காலடி புளியமரத்து ஆந்தை நிசப்தத்தைக் கலைத்து அலறியது. வெளியுலகம் இப்படியாக இரவில் நடந்த சமயம் சிவகாமியின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது.

கூரை முகட்டில், வலைகட்டி யிருந்த சிலந்திப்பூச்சி ஒன்று தவறி சிவகாமியின்மேல் விழுந்தது. அவள் விழித்து விட்டாள். கதவு தட்டப்படவே, அநேக ஆயிரந்தடவை கருப்பத்தேவனை அப்படி அர்த்தராத்திரியில் வரவேற்ற தால், கதவைத் திறந்தாள். வழக்கத்திற்கு மாருக முண்டத் தேவனைக் கண்டதும் அவள் உடம்பு குலுங்கிவிட்டது. பிரமித்துப் போனாலும் காட்டிக்கொள்ளாமல் "இந்தச் சாமத்தில் எங்கே வந்தே?" என்று அதட்டலாகக் கேட்டாள்.

"சும்மா உன்னைப் பாத்துப் போகத்தான்."

"பார்த்தாச்சா; போயேன்" என கதவைச் சாத்த ஆரம்பம் செய்தாள். உள்ளே முண்டத்தேவன் நுழைந்து விட்டான்.

"நீ வெளியே போ," என்ருள் சிவகாமி.

"ஒரு சமாச்சாரம் சொல்லணும்."

"அதெல்லாம் இப்போவா? போகிருயா என்ன?" என்ருள்.

முண்டத்தேவன் பேச வாயெடுத்தான். கும்பிருட் டையும் பிளந்து, ஒரு கோடியிலிருந்து மற்ெருரு கோடிக்கு மின்னல் படர்ந்து சென்றது. அதன்ஜோதி, அக் குடிசைக்குள் ஒரு கணம் கண்ணைப் பறித்தது. அவ் வெளிச்சத்தில், முண்டத்தேவன் முகத்தையும், அவனையும்

சிவகாமி பார்த்தாள். அவள் உடல் நடுங்கியது. கீழ் வானத்தைக் கிழித்துக்கொண்டு புறப்பட்ட மின்னல் வெளிச்சம், சிவகாமிக்கு முண்டத்தேவன் கையை வெட்டவெளிச்ச மாக்கியது. வேங்கை போல மாறிவிட்டாள்.

"அடபாவி! நீ மீசை முளைத்த ஆம்பிள்ளையா? திருட்டுத் தாலியா? நீ சாதி மறவனா?" என்று குதித்து ஒரு மூலையில் கிடந்த அரிவாளை எடுத்துவிட்டாள். முண்டத் தேவன், நயவஞ்சகப்புலி, "இதோ போயிடுதேன்" என்றதும் அவள் கோபத்தோடு மூலையில் எறிந்தாள். இதை எதிர்பார்த்த முண்டத்தேவன், பாய்ந்து தன் கையில் மின்னிக் கொண்டிருந்த தாலிக்கயிற்றை அவள் கழுத்தில் கட்டிவிட முயற்சி செய்தான். சிவகாமி, அவனுடன் போராடிக் கொண்டிருந்தாள் புலியோடு மான்குட்டி எதிர்த்து நிற்க முடியுமா!

திடீரென யாரோ முழுபலங்கொண்டு தாக்கியதால் 'நான் செத்தேன்' என முண்டத்தேவன் விழுந்தான்; விழுந்தவனை, ஆட்டுக்குட்டி போலத் தூக்கி எட்டி இருந்த ஒருக் கிடங்கில் தூக்கிப் போட்டவனை, சிவகாமி பார்த்தாள்.

சிவகாமி, "கந்தா......நீதான்...என் உயிரையும்...... மானத்தையும் காப்பாத்தியவன்......" என்றாள்.

கந்தன் காதில் விழுந்ததோ? இல்லை. விழுந்தும் கேளாதவன்போல போய் விட்டானோ?

# 5

நியாயம் வழங்கத்தான் நீதிஸ்தலங்கள் ஏற்பட்டன. நீதி செலுத்துவதற்கு பக்க பலமாகத்தான் சேவகம் செய்ய போலீசார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்

படிப்பட்ட நீதி ஸ்தம்பங்களில் இரண்டு, கந்தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தன. விடியக்கூட இல்லை. கந்தன் கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்ததும் போலீஸ்காரர்கள் இருவரைப் பார்த்தான். இதற்கு முன், அவன் போலீசார் முகத்தில் விழித்தது கிடையாது; இதனால் அவனுக்கு அன்றைய பலன் என்னவென்றும் தெரியவில்லை.

போலீஸ்காரர்கள் கண்ணை மூடியபடியே கந்தனோடு நடந்து, அவனுக்கு சொந்தமான பனையடியில் நின்றார்கள். கண்ணைத் திறந்து மேலே ஏறிட்டுப்பார்த்த சமயம் பனையில் கலயங்கள் ஆடிக்கொண்டிருந்தன. வேறு அத் தாட்சி வேண்டுமே! இரண்டு நபர்கள் தாங்கள், கந்தன் கள் இறக்கியதைப் பார்த்ததாகச் சொன்னார்கள்.

சுருங்கச் சொன்னால், கந்தனை இரண்டு மாதம் தங்கள் விருந்தினராக அரசாங்கத்தார் அழைத்துக் கொண்டார் கள். அரசாங்கத்தின் விருந்தாளியாகப் போன கந்தனுக்கு முண்டத்தேவன் கையை விட்டுப்போன 200 ரூபாய்களின் வேலை என்று தெரியாது. இருநூறு அல்ல, இரண்டாயி ரம் வேண்டுமானாலும் முண்டத்தேவன், இந்த விஷயத்தில் செலவழித்திருக்கத் தயாராக இருந்தான்.

இந்த சம்பவம் சிவகாமிக்கு கோபத்தை மூட்டியது. முண்டத்தேவன் பொய்க் கேசு ஜோடித்துவிட்டது நியாய மாக உலகத்திற்குத் தெரியாது. அதைத் தெரிய வைக்க சிவகாமி எண்ணவும் இல்லை. முண்டத்தேவன் வீட்டுக்குள் நுழைந்தாள். அங்கே ஒரு மூலையில், கருப்பத்தேவன் முட்டுக் கட்டிக்கொண்டு தூங்கி விழுந்துகொண் டிருந் தான்.

தகப்பனை குழந்தைபோல இழுத்துக்கொண்டு வந்தாள். வாசற்படியை விட்டு இறங்கியதும் முண்டத் தேவன் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்து, "நீ மறவனா? நீ கள்ளு இறக்கியதும் காணுமல், பொய்க்கேசு போட்டாயோ! இரு இரு; சந்தி சிரிக்கப் பண்ணுறேன்' என்றாள் கோபமாக.

* * *

முண்டத்தேவன் 'பணம்' 'பணம்' மென்று கருப்பத் தேவனை பிடுங்கினுன். சிவகாமி, 'என் குடித்தாய்? உன் ஞல் அநியாயமாக கந்தன் ஜெயிலுக்குப் போயிருக்கான்' என்று இடித்துக் காட்டினாள். இந்த எக்கச் சக்கமான கட்டத்தில் யார்தான் என்ன செய்ய முடியும்? முண்டத் தேவன் பெரிய கண்டிப்பான பேர்வழி. விடிந்து எழுந் ததும் கருப்பத்தேவனிடம் 'பணம் பண' மென நாமாவளி பாடினுன். நம்பர் போட்டு விடுவதாக பயமுறுத்தி விட்டுப் போய் விட்டான்.

திடீரென கருப்பத்தேவன் மனதில் ஒரு யோசனை பிறந்தது. தன் புத்திக் கூர்மையை மெச்சி ஒருதரம் சிரித் தான். பட்டியிலிருந்து ஆடுகளை வெளியே திறந்துவிட்டுக் கொண்டிருந்த சிவகாமி இதைப் பார்த்து விட்டாள். தகப்பன் சிரித்ததும் "எங்கேயாவது திருட்டுக் கள் இறக்கி விட்டாங்களா?" என்று குத்தலாகச் சொன்னாள். கருப்பத்தேவன் முகமே செத்துவிட்டது.

"இல்லே. ஒரு யோசனை......"

"என்ன யோசனை?"

"கடனைத் தீர்த்துப்போட ஒரு வழியிருக்கு. இந்த ஆடுகளை......"

"ஆடுகளை வித்துடவா?......"

"ஆமாம்......"

"என்ன ? நீ குடிக்கணும். எங்கோ ஒருவன் ஜெயி லுக்குப் போகணும். அவன் ஆட்டை வித்து குடிச்ச கடன் கொடுக்கப்போற. மானமில்லே" என்று சீறி விழுந்தாள்.

இந்த வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவில்லை. அவனுடைய இருதயத்தில் சூட்டுக்கோல் போட்டது போல உணர்ந்தான். இந்த சந்தர்ப்பத்தில் மறுபடியும் முண்டத்தேவன் வந்தான். வந்தவன், "என்ன யோசனை முடிஞ்சுதா?" என்ற பல்லவியை ஆரம்பித்தான்.

"இன்னும் பத்து நாள் பொறுத்துக்கோ."

"முடியாது, அது முடியாது. நாளைக்கே கோர்ட்டில் போடப் போறேன்......உன் மக பெரிய மனுசி மாதிரி கொஞ்சமும் மரியாதை இல்லாமல் பேசலாமா?"

"சிறுசுதானே......"

"சிறுசா? பெரிசா? அதெல்லாம் முடியாது. கீழே ரூபாயை வைத்துவிட்டு மறு காரியம் பார்......"

கருப்பத்தேவன் உடல் குன்றிவிட்டது. இதைக் கண்ட சிவகாமி மனம் கலங்கினாள். "சரி; நான் பத்து நாளில் பதில் சொல்லுறேன்" என்றாள். தகப்பன் மேல் அன்பும் அநுதாபமும் ஏற்பட்டு, அப்படிச் சொல் லும்படி நேர்ந்தது.

"என்ன பதில்!" என்றான் விநயமாக.

"பணமா? அல்லது......பதிலுக்கு நானா" அவள் வார்த்தைகள் தத்தளித்தன.

முண்டத்தேவன் சிரித்துக்கொண்டான். அதன் அர்த்தம் "கடவுளே பணம் வேண்டாம். சிவகாமி கிடைக்க வேண்டுமே" என்பதுதான். கருப்பத்தேவன் மனசில்,

முண்டத்தேவன் சிரிப்பு அம்புபோல் பாய்ந்தது. குழந்தை போல விம்மி அழக்கூட ஆரம்பித்தான். அடிக்கடி திரும்பிப் பார்த்தபடியே முண்டத்தேவன் மறைந்தான்.

சிவகாமி ஒருமுறை பெருமூச்சு விட்டாள். அவள் மனசில் அடங்கியிருந்த ஆர்வம் "ஐயா! நான் ஒரு சத்தியம் கேட்பேன். நீ, அதுபடி நடக்கணும்" என்றாள். கருப்பத்தேவன் ஏறிட்டுப் பார்த்தான். கலங்கிய கண்ணுடன் "நீ, என்னைக் கட்டிக்கொடுத்தப்புறம் அந்த முண்டத்தேவன் கள்ளுக்கொடுத்தால் குடிக்கக்கூடாது!" என்ற வார்த்தைகளுக்கு மேல் அவளால் பேச முடியவில்லை. நடுக்கமும், பதற்றமும் ஏற்பட்டு, முகத்தை மறைத்தபடி நின்றான்.

பணத்திற்கும், பாசத்திற்கும், நியாயத்திற்கும், அநியாயத்திற்கும், சட்டத்திற்கும் சமூகத்திற்கும் கொடும் போர் நிகழ்ந்த கருப்புத்தேவன் மனதில், சிவகாமியின் வார்த்தைகள் அமைதி நிலவும்படி செய்தது.

# 6

பணக்கார முண்டத்தேவன் வீட்டிற்கு லக்ஷ்மிகரமாக சிவகாமி போகப் போகிறாள். ஊரெங்கும் இதைப்பற்றி பேச்சு நடந்தது. சிவகாமியே சம்மதித்ததுதான் எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவித்தது. இந்த ரஸமான சந்தர்ப்பத்தில் அரசாங்க விருந்து முடிந்து கந்தன் ஊர் வந்து சேர்ந்தான். கலியாணச் செய்தி ஜெயில் வாசத்தைவிட, பதினயிர மடங்கு அவன் மனதை உறுத்தியது. தன் ஆடுகளை விற்று பணத்தைக் கொடுக்க சம்மதித்தான். இது கேட்ட கருப்பத்தேவன் குதி குதியென்று கூத்தாடினான். தீர்ப்பு சிவகாமியின் நாவில் இருந்தது.

"சிவகாமி" என்றழைத்தான் கந்தன்.

"என்ன?" என்றாள் சிவகாமி.

"ஆடு விற்று நான் பணம் தாரேன்...உனக்கு இஷ்டமிருந்தால். இல்லை உன்னையே......"

"என்னையேதான். அதுதான் என் அப்பன் செய்த பாவத்திற்குத் தண்டனை......"

கருப்பத்தேவன் கண்களில் கண்ணீர் துளித்தது.

"நீ சொல்வதில் அதிக நியாயம் இருக்கா?"

"நான் கேட்டதற்குச் சொல்லு சொத்திருந்தால் அது எனக்குத்தானே?" என்றாள் சிவகாமி.

"ஆமாம்."

"கடன்?" கேள்விக்கு கந்தன் பதில் பேசவில்லை.

"கடன் நல்ல வழியில் வாங்கி யிருந்தால் நீ உன் ஆடுகளை இனாமாகக் கொடுக்கலாம். அது குடித்த கடன்! அவர் செய்த பாவத்தை நான்தான் அனுபவிக்க வேண்டும். உன்னை சிறையில் அடைத்ததற்கு......"

சிவகாமியின் தர்க்கம், கந்தனுக்கு உண்மையாக இருந்தது. அவள் செய்யப்போகும் தியாகம் அவனை உலுக்கியது. அவன் ஆசை நிராசையாகி பெருமூச்சாக வந்தது. அதில் வருங்கால துன்பங்கள், எண்ணங்கள் அடங்கி யிருந்தன. அன்று மத்தியானம் நிச்சயதார்த்தம்! இதை நினைக்க நினைக்க, மலைபோல அவன் மனத்தில் பட்டது.

இதே சமயம், வெற்றிலைபாக்கு சந்தன குங்குமங்களோடு பட்டுப்பட்டாடைகளையும், வாங்க வேண்டியதற்கு கணக்குத் தயாரித்துக்கொண்டிருந்த பின், முண்டத்தேவன் விமரிசையான கலியாணத்தோடு மோட்டார்

ஊர்வலம் நடத்திவிட வேண்டுமென ஒன்றன்மேல் ஒன்ருகக் கட்டியவாறிருந்த ஆகாசக் கோட்டைகள் உயர்ந்துகொண்டு போயின.

வாழ்க்கையில் யாருடைய மனேவிலாசப்படி நடக்கிறது? அப்படியே நாம் நினைக்கிறபடி நடக்கிறதா? இல்லை. குடியினல், நிலபுலன்களை இழந்து மேலும் கடனுக்கு தன் தகப்பன் குடித்த நானூறு ரூபாய்க்காக, எவனை நாயினும் கேவலமாக மதித்தாளோ, எவனை அரிவாளால் வெட்டத் துணிந்தாளோ அவனையே தன் சுகதுக்கத்தை மறந்து வாழ்க்கையை மண்ணுக்கி, இன்பத்தை வெறுத்து தன்னையே தியாகம் செய்ய சிவகாமி முன் வருவாள் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்?

## 7

அந்தக் கிராமாந்தரத்திற்கு, எந்த உலகத்தைப் புரட்டக்கூடிய செய்தியும் எட்டாது. எதிர்பாராத செய்தியைக் கேட்டு விட்டவன்போல கந்தன் தலைதெறிக்க ஓடி வந்தவன், கருப்பத்தேவனை கட்டிக்கொண்டு, "மாமா! நிச்சயதார்த்தம் வேண்டாம். முண்டத்தேவனல் ஒன்றும் செய்ய முடியாது. பணமும் கொடுக்கவேண்டாம். ஒரு இழவும் கொடுக்க வேண்டாம்" என்றதும், அவன் கந்தனுக்கு மூளை கலங்கி யிருக்கவேண்டுமென நினைத்தான்.

"உன் சொத்து சுகம் திரும்பக் கிடைக்கும். வாங்க, நம்ம கிராம முனிசீப் ஐயா வீட்டுக்கு வாங்க. தெளிவா கேட்க" என்று பிடித்திழுத்தான். சிவகாமியும் கி. மு. வீட்டை நோக்கி நடந்தாள்.

அன்றுதான் கடன் நிவாரண மசோதா வெளிவந்தது!

* * *

மழை சிணு சிணுவென தூறிக்கொண்டிருந்தது. வெளியே திண்ணையில் கயிற்றுக் கட்டிலில் கன்னத்தில்

கை ஊன்றியபடி ஏதோ சிந்தனையில் கருப்பத்தேவன் ஆழ்ந்திருந்தான். பட்டியில் ஆடுகள், தாம் இருப்பதை இடை இடையே கத்தி, தெரிவித்தன.

கருப்பத்தேவன் மனதில் சஞ்சலமும், பச்சாத் தாபமும் தோன்றின. "ஐயோ! நான் ஒரு பாவி. இந்த காங்கிரஸ்காரங்க கள்ளை ஒழிப்போம் என்றதினால் நான் ஓட்டுப் போடவில்லை. ஆனால், அவர்கள் என் உயிரை கள்ளிலிருந்து காப்பாற்றினாங்க. அது செய்தும், நான் மறுபடியும் கள் குடித்தேன். அப்புறம் சிவகாமி உயி ரோடு சாகப்போன சமயம் அவளையும் காப்பாற்றி னார்கள். இப்படி இருந்தும், நான் ஓட்டுப் போடாமல் இருந்தேனே......ஓட்டுப் போட்டிருந்தால்......?" இந்த மாதிரி பச்சாதாபப் பட்டுக் கொண்டிருந்தான்.

அதே சமயம், "அட புள்ளே! நான் ஓட்டுப் போடாட்டால் கள்ளுக்கடை ஒழியுமா? கடன் மசோதா வருமா? என்ன பதிலைக் காணோம். வாயில் கொழுக் கட்டையா?" என்று சிவகாமியின் கன்னத்தில் ஒரு தட்டு தட்டினான் கந்தன்.

"அட, எங்கய்யாவுக்கு சொத்து சுகம் கிடைச்சா என்ன? நான் யாருன்னு, கருப்பத்தேவன் மகள் என் பாங்க. இப்போ 'அய்யாவுக்கு மகள்' என்பது போச்சே. அதுக்கு என்ன சொல்லுதே" என்று பதிலுக்கு ஒரு தட்டுத் தட்டினாள்.

இரண்டு வருஷத்திற்கு முன் இப்படியும் நடந்திருக் குமா? அல்லது இது கதைதானோ?

# வழக்குச் சொற்கள்

வழக்குச் சொற்கள் என்பது, வழக்காட உபயோகிக்கும் தாவா, மனு, பிரதிவாதி, வாதி, தாக்கல், படி, இவையல்ல. என்னதான் கர்ணம் அடித்தாலும், அப்பீல் செய்தாலும் இவை வழக்குச் சொற்கள் ஆகா.

வழக்குச் சொற்களை, 'வெளுத்து வாங்கி' 'கொடி கட்டிப் பறக்க விட்டு' முடி சூடா மன்னனுகத் திகழ 'மனப்பால்' குடித்தேன். 'கசகர்ணம்' போட்டும் பலன் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கிறது. நானும் 'திருகத் திருக' விழித்து 'நடுச் சந்தியில்' நிற்கிறேன்.

ஏதோ 'சரிக்கட்ட' 'நுனிப் புல் மேய்ந்து' கதை பண்ணுவோம் என்ருல், அது 'சரடு திரிப்பதா'கப்படுவதோடு, 'உங்களுக்கு நாமம் சாத்தின' தாகும்.

தலை மேற்கொண்டதை, 'விழி பிதுங்க' யோசித்தும் 'காது குத்த' முடியவில்லை. தலை கீழாக நின்ருலும் விஷயத்துக்குத் 'தலை முழுக்குப்' போடமுடியாது. நான் மெதுவாக 'கையைக் கழுவி' விட்டால், பிறகு என் பெயர் 'தலை யெடுக்காது' உதவாக் 'கட்டை' என்று யாராவது 'இளிச்சவாய்ப்' பட்டம் கொடுத்தால், முகத்தில் ஈயாடாமல் உம் கொட்டுவதைத் தவிர வேறு கதியில்லை.

நான் இரண்டு நினைக்காமல் இருந்தும், என் நிலைமை 'இரண்டும் கெட்டானுக' இருக்கிறது.

ஆகவே, கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு மெய் மறந்து வழக்குச் சொற்களை கரைத்துக் குடிக்க நினைத்தேன். ஆரம்பத்தில் 'குரங்குப் பிடி'யாக இருந்த மனசு இடங்கேடாக இழுக்கடித்து என் உத்சாகத்திற்கு 'இடக்கு முடக்கு'க் கொடுத்து மட்டந் தட்டியது.

'ஆற அமர' என் வயிற்றில் 'புளி கரைக்க' ஆரம்பிக்கவே விஷயத்தைக் கொஞ்சம் 'பழுக்கப்போடு'வோம், அப்புறம் 'கண்ணெடுத்துப் பார்க்கும் ;' 'கை கொடுக்கும்;' நாம் 'கரை யேறலாம்.' இல்லையோ நமக்குக் 'கடுக்காய் கொடுத்து' விடுமென நினைத்து 'ஆறப் போடப்' போன சமயம்.

நண்பன் வந்தான். எனக்கு 'மூக்கில் வேர்த்தது.' வரும்போதே, "என்ன நடக்கிறது?" என்றான்.

"வழக்குச் சொல் ஆராய்ச்சி"

"அதென்ன 'பொடி வைத்து' ப்பேசுகிறாய்?"

"இல்லையே. விளக்கிச் சொல்லுகிறேன். 'வாலை அறுத்தல்' மனிதனுக்குச் சொல்லப் படுவது. மிருகத்திற்கு அல்ல. 'நரி குளிப்பாட்டுதல்' என்ற சொல், நரியைக் குளிப்பாட்டுதல் என்றாகாது. அது மனிதனை தன்னுளாக, கைக்குள் போடுவது.

"காக்காய் பிடித்தலுக்குத் தாயாதி; குல்லாய்ப் போடுதலுக்குப் பந்து; குழையடித்தலுக்கு நெருங்கிய சிநேகிதன்"

"இப்படிப் பட்ட சொற்களைத்தான் ஆராய்ச்சி செய்கிறேன். ஒவ்வொரு மொழியிலும் இப்படிப் பட்ட வழக்குச் சொற்கள் உண்டு. இதன் பொருள் பாஷையோடு ஒட்டிப் பழகினால் தான் தெரியும்."

"ஒத்துப் பாடுகிறேன்."

'உதவாக்கட்டை' என்பது ஒரு மரத்தின் கட்டையென அந்நியன்—தமிழின் வழக்குத் தெரியாதவன் நினைப்பான். ஒரு சமயம் நான் ஆங்கிலம் படித்தபோது இந்த மாதிரி பொருள் தெரியாமல் இருந்திருக்கிறேன். கதை முடிவில் 'கிக்கிட் தி பக்கட்' என்று போட்டிருந்தது."

"வாளியை உதைத்தானுக்கும்."

"அதுதான் இல்லை. அந்த ஆள் 'கயா' ஆகிவிட்டான்."

"பரலோக யாத்திரையா? அந்த 'கிக்டு தி பக்கட்' வழக்குச் சொல்லிற்குப் பொருள் தெரியாவிட்டால் அனர்த்தந்தான்.

"தமிழைப் புதிதாகக் கற்றவன் பாடு, வேடிக்கைதான்."

"நாம் 'விளக்கை உயர்த்து' என்று சொல்லுகிறோம்."

"பொருள் தெரியாதவன் தூண்டுவான்! தெரிந்தவன் அணைப்பான்."

"வழக்குச் சொற்களில் மங்கள வழக்கு, குழூஉக்குறி, தகுதி வழக்கு இப்படிப்படும்."

"அப்பா தலை சுற்றுகிறதே"

"பேஷ் நல்லபடியாக தகுதி வழக்கிற்கு இலக்கணம் சொன்னாய். நீ, 'உன் பேச்சு எனக்குப் பிடிக்கவில்லை; நிறுத்து' என்பதை தலை சுற்றுகிறதே என்ற தகுதி வழக்கால் பிரயோகம் செய்தாய்."

"அப்பனே உன்னுடைய டக்கர டக்கலை நிறுத்து."

"இடக்கரடக்கல் என்பது, சொல்லத் தகாத அசங்கியத்தை நாலு பேர் முன் சொல்லுகிறது. வாய் கழுவி என்பது அசங்கியம்."

" அதனால்தான் வாய்ப்பூசி வருகிறேன் என்கிறோமா? நம் பேச்சு குழூஉக்குறியாக இருக்கப் போகிறது."

" குழூஉக்குறி என்பது தொழிலாளர் கையாளும் பரி பாஷை. குணவெள்ளை என்றால் மூன்று ரூபாய்; காளைக் கொம்பு என்றால் இரண்டு ரூபாய்; இது தரகர் பாஷை. சரி, சங்கீதத்துக்குள் நுழைந்தால்"

—என்ன சேட்டோ? ½ ரூபாய் உங்களுக்குப் நாலு அவதாரம் வயிலினுக்கும் 6 கண்டம் மிருதங்கத்திற்கும் இருக்குமா ?

-பல்லவியை அப்படிச் சொன்னீர்கள்—

-மேல் எடுப்பு என்ன ?—

-செலவு போக எனக்கு ½ ரூபாய்க்கு அவதாரம் குறைச்சல்—

வயிலினுக்கு ¾ ரூபாயும் 2 திச்சமும்; மிருதங்கக் காரருக்கு மேளகர்த்தா—

" இதில் என்ன புரிகிறது?

" கண்ணைக் கட்டி காட்டில் விட்டதுபோல் இருக் கிறது."

" ஒரு ரூபாய் நூறு; அவதாரம் பத்து; கண்டம் 5; திச்சம் 3; மேளகர்த்தா 72........கணக்கைப் போட்டுக் கொள்வாய். பாட்டுக்கு 140 ரூ; வயலின் 81 ரூ......"

" சரி, வழக்குச் சொற்களின் அர்த்தபாவம் புரியா தவன் திணற வேண்டியது தானே?"

" அந்த வேடிக்கையும் பாரேன்—"

-தங்கவேல் ஆசாரி சும்மா காது குத்துகிறான்.

-அவர் விலாசம் என்ன ?

-இந்த இடம்தான் உள்ளே போங்கள்—

ஆசாமி உள்ளே போகிறுன்.

-வரணும் வரணும்—என்ன வேணும்?

-நீர் சும்மா காது குத்துவீரா?

-ஐயைய்யோ......அட போமையா போம். அந்த அயோக்கியன் சொன்னதை நம்பி வந்தீரே—

வெளியே வந்த ஆசாமி,

-ஏனய்யா, அவன் காது குத்தவில்லே?

-இந்த ஆசாரியும், குல்லாப் போடும் ஜவுளிக்கடைக் காரனும் சரி—

-இந்த சவுளிக் கடைதானே—

கடை முதலாளியைப் பார்த்தான் ஆசாமி.

-குல்லாய்ப் போடுங்கள்—

குல்லாய் போடறதா? பெரிய தலேப்பா மாறி என்று நினேச்சாயா?—

-தலேப்பாகை, குல்லாய் இரண்டும் என்னிடம் இல்லே—

கூழைக்கும்பிடு போடாதையா. நட வெளியில்—

"எப்படிக் கதை?"

"பேஷ்! பேஷ்!"

"பார். வழக்குச் சொல், பாஷைக்கு எவ்வளவு வசமாக இருக்கிறது என்று. என் நண்பர் ராமசாமி ஐயர் தூண்டில் போட்டார்; பலன் இல்லே. பிறகு வலே வீசினுர்."

"அய்யர், தூண்டிலாவது வலேயாவது, வீசுகிற தாவது."

"வரன் பிடிக்க தூண்டில்ப் போட்டார்; வலை வீசினர். கொழுத்த மீன் அகப்பட்டது. அது பசியாமல் சாப்பிடும் இடம்."

"பசியாமல் சாப்பிடுகிறது கெடுதல் ஆயிற்றே!"

"இல்லையடா......பசியாமல் சாப்பிடுகிறது என்றால் பணக்கார இடம். உடனே உச்சி குளிர்ந்தது."

"ஜன்னி பிடிக்க வில்லையே!"

"ஆனால் பெண்வீட்டார், உமக்கோ சிங்கியடிக்கும் பிழைப்பு. ஆகவே, உம் பாச்சா பலிக்காது. அந்தப் பருப்பு இங்கே வேகாது என்றார்கள்."

"ராமசாமி ஐயர் ஏழையாக்கும்."

"ஆம், இப்படிப் பெண் வீட்டார், எதிர் பாராமல் நட்டாற்றில் கைவிடவே, நடுத்தெருவில் வந்து என் நண்பர் நின்றார். கொஞ்சநாளாக, பெரிய இடம் பார்க்கப் போவதாக கங்கணம் கட்டிக்கொண்டு, எடுப்பார் கைப் பிள்ளையாகத் தயாராக இருக்கிறார்!"

"கதை இருக்கட்டும். வழக்குச் சொல்..."

"வழக்குச் சொற்கள் பாஷையின் சொல்ச் செட்டும், கம்பீரமும் ஹாஸ்ய ரசமும் சேர்ந்த ரத்னங்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கலங்கரை விளக்கம். பாஷைக்கு ஊனும் உயிரும்போல இருக்கிறது. அதன் ஜீவனை, பாஷா ஞானம் உள்ளவர்கள் உபயோகித்தால் இந்திர மந்திர மகேந்திர ஜாலங்கள் செய்யும்."

"தவறாக உபயோகித்தால்?"

"பாஷையையும் உபயோகித்தவனையும் பொங்கல் செய்துவிடும்."

"பேச்சில் கொஞ்சம் புளிப்புத் தட்டுகிறது. நமஸ்காரம்."

நான் வெளுத்து வாங்கலாம் என நினைத்தது போக விஷய ஆராய்ச்சி கல்லில் நார் உரிக்கிற கதையாக முடிந்ததே. நண்பர்கள் சிரிப்பாய்ச் சிரிக்குமுன் நான் மூட்டை கட்டுகிறேன்.

# கற்பகத்தரு

புத்த பகவான் என்று ஒருவர் அவதரித்தாராம். (நான், அவர் சுகபோகமாக வாழ்ந்த விதம், கலியாணத்தின் காதல் விளக்கம், குழந்தையை இரண்டுதரம் முத்தமிட்டுவிட்டு அவர் காட்டுக்குப் போன பரிதாப கட்டம், இவைகளைச் சொல்லப் போவதில்லை.) புத்தருக்கு போதி மரத்தடியில் உட்கார்ந்ததும் ஞானோதயம் உண்டானதாம். இப்படிக் கதறுகிறது சாகப்பெருமாள் நாயுடுவின் சரித்திரப் புஸ் தகம். புத்தர் கதை எப்படி யானாலும் போதி மரத்தடியில் ஞானோதயம் உண்டாயிருக்க வேண்டுமென்று சமீபத்தில் அடியேனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. தயவுசெய்து நான் உட்கார்ந்த மரத்தடியைக் கேட்காதீர்கள். அது ஆலமரத்தடி! நிற்க,

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு, யாரோ ஒரு மகான் எங்களூர் பனைமரத்தடியில், வெயிலின் கொடுமை தாங்காது சிறிது நேரம் உட்கார்ந்தார். பாருங்கள், 'ஞானம்' அந்த மகானின் பின்னால் ஒளிந்துகொண்டு வந் திருக்கிறது. அந்த மகானின் பிடரியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டுவந்த ஸ்ரீமான் விதியார் அவரை அந்த மரத்தடியில் உட்கார வைத்தார். அதோடு நில்லாது, வாயு பகவானைக் கெஞ்சிக் கூத்தாடி 'குல்லாய் போட்டு' காற் றடிக்கும்படியும் செய்துவிட்டார். அவ்வளவு தான். பனை மரத்தடியில் காய்ந்து உலர்ந்திருந்த ஒரு மில்லிமீட்டர்

நீளமுள்ள ஒரு துரும்பு மகான்மேல் பட்டது. மகான் ஏறிட்டுப் பார்த்தார். பனைமரம்!

அவருடைய முகத்திலிருந்த உதட்டில், புன்னகை அரும்பியது. எங்களூர் ஜனங்களின் அஞ்ஞானம், அறியாமை இவைகளை எண்ணியபோது அவருடைய மனம், கள்ளில் விழுந்த சிற்றெறும்புபோல் துடிதுடித்தது. பனைமரத்தை மூன்று வளையம் சுற்றி வந்து, கன்னத்திற் போட்டு, சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அடிமரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். தன்வயம் இழந்தார். (ஞானோதயம் ஆரம்பித்து விட்டதல்லவா?) "ஆஹா! என்ன மூட ஜனங்கள்! இவ்வூர் ஜனங்களை நாம் கரையேற்றுவோம். ஞான இருளை இவர்களுக்குக் காட்டுவோம்" என எண்ணினார். நினைப்பில் என்ன இருக்கிறது? செய்கை, செய்கை, செய்கை என்று சொல்லியதோடு, உண்மையாகச் செய்கையும் ஆரம்பித்துவிட்டார்.

பக்கத்தில் நாலைந்து ஓட்டைக் கலயங்களைப் பொறுக்கி வந்தார் மகான். அந்தப் பனை—தப்பு—அந்தக் கற்பக மரத்தின் சொந்தக் காரனைத் தேடினார். பசிநோக்காது கண்துஞ்சாது, கருமமே கண்ணானார். சொந்தக்காரரிடம், "அப்பா! குழந்தாய்! இந்த ஊர் சுத்தப் பட்டிக்காடு. அப்பா! உனக்கு இந்தப் பனையின் உபயோகமே தெரியவில்லை. நீ ஒன்றும் அறியாத பாலகன். உன்னைப் போன்ற சாதுக்களைக் காத்து உய்விக்கச் செய்ய வேண்டுமென்று அடியேன் திருவுள்ளம் ஆசை கொள்ளுகிறது. அந்தப் பனைமரத்தை நான் உபயோகிக்கப் போகிறேன். மரத்தை வெட்டமாட்டேன். 5 வருஷம் கழித்து மரத்தை உன்னிடமே ஒப்படைத்து விடுகிறேன். உனக்கு மாதம் கால் ரூபாயும் வாடகை தருகிறேன்" என்றார். "சுவாமி! பெரியவாள் சித்தம், என் பாக்கியம்" என்றான் அஞ்ஞானியான சொந்தக்காரன். கலயங்களைப் பனைமரத்தின்

உச்சியில் 'தாலி' கட்டுவதே போல் சுபவேளையில் கட்டினர் அந்த மகான். எங்கள் ஜில்லாவின் பெயரே பனைமர ஜில்லா.

ஊரிலுள்ள மற்ற அஞ்ஞானிகள் (பனைகளுக்குச் சொந்தக் காரர்கள்) தங்கள் அஞ்ஞானத்தை ஒப்புக் கொண்டு சுவாமிகளுக்குத் தங்கள் மரங்களை தானமும் பண்ணினர்கள். சுவாமிகள், மரங்களைப் பெற்றுக் கொண்டதற்குப் பிரதி பிரயோஜனமாகச் சில வெள்ளிக் காசுகளைத் தருவதாக வாக்களித்தார். மகானின் முக மண்டலம் பெரிதாக மலரத் தொடங்கியது. நாள் தோறும் பனை ஏறிப் பாளையைச் சீவி, விருத்தி செய்தார். அவர் தங்கியிருந்த சின்னஞ் சிறு ஓலைக்குடிசை, நாளா வட்டத்தில் பெரிதாகி 400, 500 பக்தர்களுக்கு இடம் கொடுத்தது. கோவணாண்டியாக வந்த மகான், கோடீசுவரனாக மாறிக் கொண்டிருந்தார். பட்டி தொட்டியிலுள்ள, சுற்றுப் புறக் கிராமவாசிகள், சுவாமிகளின் மகிமையைக் கேட்டுக் 'காவடி' எடுத்து வந்தார்கள்! பனை மரங்களோடு ஈச்ச மரங்களையும் ஸ்வாமிஜி ஸ்வீகரித்துக் கொண்டார். ஈச்ச மரத்தடியில் ஏராளமான கலயங்கள் கொலுவீற்றிருக்கும்.

ஜில்லாவில் பெரிய முண்டாசணிந்த பிரமுகர் ஒருவர், சுவாமிகளைக் கண்டு அவரைத் தாலுகா போர்டு மெம்பராக மாற்றித் தாலுகா வாசிகளுக்கு அவருடைய 'சேவை' அவசியமெனச் செய்தார். சுவாமிகளுக்கும் பரோபகாரம், விசாலபுத்தி தாராள மனப் பான்மை இவைகள் உண்டு. அதனால் ஆங்காங்கு தமது ஞானரஸ நிலையத்துக்கு கிளை ஸ்தாபனங்கள் போட்டு, தமது பக்தர்களை அதிகரித்துக் கொண்டு ஞானப்பால் வார்த்துக் கொண்டே வந்தார்.

ஊரிலுள்ள அஞ்ஞானிகள் எல்லோரும் குடிக்கப் பழகினர்கள். சில அஞ்ஞானிகள் அஞ்ஞானிகளாகவே

இருந்து விட்டார்கள். எல்லா ஊரிலுமுள்ள அஞ்ஞானிகள் ஞானிகளாக (குடியர்களாக) மாறியதும் தரித்திர நாராயணன் பிரசன்னமாகித் தாண்டவம் புரியத் தொடங்கினன். ஞானம் முற்றவே, திருட்டு, பொய், சூது, கொலை, எது செய்தாலும் பாவம் ஒட்டிக்காது என்று எண்ணினர்கள்.

சுவாமிகள் 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே, அல்லாமல் வேறென்றும் அறியேன் பனை மரமே, என்று சத்தியம் செய்திருந்ததால், பக்தர்களுக்குப் பண நெருக்கடி ஏற்பட்ட காலத்தில் திருட்டுச் சொத்து விலைக்கு வாங்குதல், அடகு பிடித்தல், முதலிய நற்கருமங்களைச் செய்து வருவாராயினர். தோன்ருத் துணைவனுய் ஆபத்பாந்தவனுய் அனுதை ரக்ஷகனுய், அவனுய், இவனுய்த் தோன்றி உதவி செய்தார் அந்த மகான். அரசாங்கத்துத் தெய்வங்களுக்கு அவ்வப்போது தமது சலுகை சன்னது இவைகளை வெள்ளையப்பர் மூலமாக அனுப்பிவிடுவார் என்றும் ஊரார் பேசிக்கொண்டனர்.

ஆனல், காங்கிரஸ் கவர்ன்மெண்டார் என்ற சில பைத்தியக்காரர்கள் மந்திரிகளாக வர நேரவே, சுவாமிகள் தமது ஞானப்பால் பக்தர்களை இரக்ஷிக்க முடியாமற் போய்விட்டது. இந்த விபத்தை எதிர்பார்த்தே ஸ்வாமிகள் 1925-ம் வருஷத்திலிருந்து வட்டி, கடுவட்டி முதலிய முறைகளைக் கையாண்டு தமது பணி ஊரைக் கடன் செய்வதே என்று கங்கணம் கட்டிக்கொண்டார்.

திடீரென்று அதே கவர்ன்மெண்டார் 'கடன் நிவாரண மசோதா' என்றதைக் கொண்டு வரவே மகான் பாடு ஆபத்தாக முடிந்தது. அவரால் இவ்வளவு வருஷ காலமாக அல்லும் பகலும் அனவரதமும் ஆற்றிவந்த கடன் தொண்டைச் செய்ய முடியாமற் போய்விட்டது பற்றிப் பெரிதும் வருந்தினர். ஞானிகளாய்த் திரிந்த அவ்வளவு

பேரும் அஞ்ஞானிகளாய் மாறிப் பழைய நிலைமை அடைந்தார்கள். சொத்து, சுகம் அஞ்ஞானிகளுக்குத் திரும்பக் கிடைத்தன.

மகான் என்ன செய்தார்? மறுபடியும் ஏதாவது நல்ல மார்க்கமாக ஜனங்களை ஞானிகளாக்க எண்ணவில்லை? பின் என்ன செய்தார்! நேராகப் பனைமரத்திற்கு—ஆதியில் ஞானோதயம் உண்டானதே அந்தப் பனைமரத்தருகே ஓடினார். "பனைமரமே பனைமரமே! ஆண்டவனின் திருவிளையாடல்தான் என்ன? நீ தான் கற்பகத்தரு. எனக்கு இனி என்ன உபதேசம் செய்யப் போகிறாய்" என்று கேட்டார்.

வாயு பகவான் வீசினார். மரத்திலிருந்து ஒரு சின்னத் துணி விழுந்தது. அந்த மரத்தில் ஒளித்து வைத்திருந்த அந்தப் பழைய கோவணத்தை எடுத்து வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்ட சாமியார் எங்கோ மறைந்தார்.

ஒரு வேளை நரகத்தில் நடக்கப் போகும் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கப் போயிருக்கலாம்!

# நற்சாட்சிப் பத்திரங்கள்

"தலையை வெளியே நீட்ட முடியவில்லை. அவமானம் அவமானம் அவமானம்!" என்று சொல்லியபடி ஜட்ஜி மனைவி வந்தாள்.

"ஏன்? முன்பு தான் சவரி வைத்துப் பின்னி யிருந்தாய். இப்போது கூந்தல் அலை அலையாக நெளிகிறதே. வண்டு மொய்க்கும் கூந்தலாலே—உனைக் கண்டு மயங்கினேனே......"

"கெட்ட கேட்டுக்கு பாட்டு வேறயா? அக்கம் பக்கம் வீடு இருக்கு. கிளப்லே எல்லாரும் சிரிப்பா சிரிக்கிறாங்க."

"உன்னோட நகைச் சுவையைக் கண்டா?"

"நான் நகையைச் சுவைக்கவில்லை. உங்களோட நற்சாட்சிப் பத்திரத்தைப் பார்த்து சிரிக்கிறாங்க. இதோ பாருங்கள் பேப்பரில்."

கை நீட்டி பத்திரிகையை வாங்கிப் பார்த்தார்.

**ரிட்டயர் ஜட்ஜி பாராட்டு!**
**15 வருஷ பாலைவனம்!!**
**ஒரு புட்டி கருமணல் தைலம்!!!**

என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி கீழே கடிதமும் பிரசுரமாகி யிருந்தது.

ஐயா,

எனது மனைவியின் தலையில் மருந்துக்குக்கூட ரோமம் இன்றி உதிர்ந்தும் வழுக்கை விழுந்தும் சரிவர வளர்ச்சி யின்றி 15 வருஷ காலமாக பாலைவனம் போல் இருந்து வந்தது. போன மாதம் தங்கள் கருமணல் கூந்தல் தைலம் உபயோகித்ததும் ஆடிப் பட்சத்துச் சம்பாப் பயிர் போல கருகருவென வளர்ந்து வருகிறதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனது விலாசத்திற்கு அறுபது புட்டி கருமணல் தைலம் அனுப்பக் கோரு கிறேன்.

தங்கள் விசுவாசமுள்ள
ரிட்டயர் ஜட்ஜ் விசுவவேதம்.

இப்படி விசுவாசமுள்ள நபர் எழுதப் போக அந்தக் கடிதத்தை நற்சாட்சியாக 'கருமணல் தைலக் கம்பெனி யார்' செய்துவிட்டார்கள். மனைவியின் கோபத்திற்கு ஆளான ஜட்ஜு ஆடு திருடிய கள்ளன், கைதிக் கூண்டில் அகப்பட்ட போது முழிப்பானே, அப்படி முழித்தார். நிற்க; இன்னொரு வகை நற்சாட்சி பத்திரத்தைப் பாருங்கள் :

ஐயா,

தங்கள் தாயத்தின் மகிமையை என்னென்று புகழ்வது ? இன்னும் 999 நாக்கு இருந்தால் ஒரு வேளை சரி வர நானும் ஆதிசேஷனைப் போல தங்களைப் புகழலாம். தங்கள் தாயத்தை நான் கட்டின நிமிஷம் முதற்கொண்டு என் மனைவி பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்கிருள். ஒவ்வொரு நேரமும் என்னென்ன சமையல் செய்ய

வேண்டும்; நேர் வகுடு எடுக்கிறதா, கோண வகுடு எடுக்கிறதா என்று கேட்பதிலிருந்து சகலமும் என் சொற்படியே நடக்கிறது. என்னை ஒரு வீரப் புருஷனுக்கியது தங்கள் தாயத்தே. அக்கம் பக்கத்தார் விசேஷ மரியாதை செய்கிறார்கள். கடன் கேட்டால் மூச்சுப் பேச்சின்றி 'டக்' கென்று கொடுக்கிறார்கள். கொடுத்த கடனை, திருப்பிக் கேட்பது மில்லை.

இம்மட்டுமா? ஆபீஸில் மேல் உத்தியோகஸ்தன் என்னைப் பார்த்துப் புன்முறுவல், இளநகை அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறான். முதுகைத் தட்டிக் கொடுக்கிறான். எனக்குள்ள ஜலதோஷம் தேவலையா? நான் கொண்டு வந்திருக்கும் டிபன் என்ன? என்றெல்லாம் பரிவாக உபசரிக்கிறான். என்னிடம் விளையாடும் ப்யூன்கள் இப்போது கை கட்டி பயபக்தியோடு நடக்கிறார்கள். நமஸ்காரம் போடுகிறார்கள். வேலையைச் சொல்லாமலேயே செய்கிறார்கள். என் மேல் உத்தியோகஸ்தன், என்னை வேலை செய்ய விடாதபடி தன்னறையில் வந்திருந்து அரட்டை யடிக்கச் சொல்லுகிறான். 50 ரூபாய் சம்பளத்திலிருந்த எனக்கு நேற்று 150 ரூபாய் உத்தியோகம் கொடுத்தான். இருக்கிற இருப்பைப் பார்த்தால், எங்கள் ஆபீஸ் பெரிய உத்தியோகஸ்தன், எனக்கு அவன் இடத்தைக் கொடுத்துவிட்டு, என்னிடம் ப்யூனாக வந்து கை கட்டினாலும் கட்டுவான் போல இருக்கிறது!

தங்கள் தாயத்தின் மகிமையே மகிமை! இன்னும் இரு மந்திர தாயத்துக்கள் அனுப்பி வையுங்கள். ஒரு காலத்தில் 50 ரூபாய் கிளர்க்காயிருந்து தற்சமயம் 150 ரூபாயில் பாக்கியசாலியாக விளங்கும் தங்கள் ஊழியனும் நன்றி யறிதலும் உள்ளவனை,

ஆரோக்கியசாமி.

மேற்சொன்ன நற்சாட்சிப் பத்திரங்களே அதிகமாக நம் கண்ணில் படும். நாம் அன்றிடம் பற்பொடியி லிருந்து பனாரஸ் பட்டுவரை, அதிசய தாயத்திலிருந்து ஆரணங்கின் அதிசயப் போட்டோக்கள் வரை, நற்சாட்சி பத்திரங்களோடு விளம்பரம் செய்யப்படுவதைப் பார்க்கி றோம். வியாபாரத் துறையிலும் உத்தியோக வாழ்விலும் இப்படிப்பட்ட நற்சாட்சிப் பத்திரங்கள் அனந்த கோடி.

இலக்கியத்துக்குள், மதிப்புரையின் முக்கிய வரிகளை மட்டும் எடுத்துக்கொண்டு நற்சாட்சிப் பத்திரமாகக் காட்டி விடுவார்கள். இதன் ரகசியம் என்னவென்றால் "தம்பி, இவ்வளவு பிரமுகர்கள், விமர்சகர்கள் புகழ்ந்து விட்டார்கள். நீ ஓடிப்போய் புஸ்தகம் வாங்கு" என்பதே இவர்கள் நோக்கம். துருவி எடுக்கப்பட்ட வரிகளுக்கு முன்னும் பின்னும் பார்த்தால், அது துர்ச் சாட்சிப் பத்திரமாகவே இருக்கும்.

நற்சாட்சிப் பத்திரங்கள் இவைகளல்ல. அவை வேறு ரகம் என்பதை நீங்கள் சொல்லுவீர்கள். அது இப்படித் தான் பொதுவாக இருக்கும்.

"இதைக் கொண்டு வருகிற தங்கவேல், ஆறுவது பாரம் பாஸ் செய்தவன். விளையாட்டுக்களில் சாமபியன். ரொம்ப நல்ல பையன். நடத்தை, நன் நடத்தை. கையெழுத்து சுமாராக இருக்கும். வாழ்க்கையில் இவ னுக்கு வெற்றி யேற்படும் என எதிர்பார்க்கிறேன்.

ஹெட்மாஸ்டர்
இங்கிதம் பிள்ளை.

இதைத்தான் நூற்றுக்கு நூறு சரியான நற்சாட்சிப் பத்திரம் எனச் சொல்லுவார்கள். பள்ளிக்கூடத்தை

விட்டு வெளியேறுகிற ஒவ்வொரு பையனிடமும் இப்படி ஒரு கச்சாத்து இருக்கும். டிரில்மாஸ்டர் சித்திர ஆசிரியர் இவர்களிடம் கூட நான் நற்சாட்சிப் பத்திரம் வாங்கி யிருக்கிறேன். இதெல்லாம் மனுதாருக்குப் போதாது என்பது வேலைக்கு அலைகிறபோது தெரியும். சில பிரமுகர் களுக்கும் மனுதாரருக்குமுள்ள தொடர்பை விளக்கி, ஒரு சில நற்சாட்சிப் பத்திரங்கள் வேண்டும். தங்கவேலைப் பின் தொடர்ந்தால், கவுன்சிலர் வீட்டில் பார்க்கிறோம்.

"உங்களைப் பார்க்கலாமென்று வந்தேன்."

"என்னப்பா, நாலஞ்சு நாளா என்வீட்டு வாசற்படி வரைக்கும் வருகிறது பிறகு ஓடிவிடுகிறது. என்ன கண்ணுமூச்சு ஆடுகிறாயா? நீ யார்?"

"நான் மேலத் தெருவில் குடி யிருக்கிறேன்."

"மேலத் தெருவில் குடியிருந்தால் கவுன்சிலர் வீட் டிற்கு வந்து கண்ணுமூச்சி ஆட வேண்டுமா?"

"தைரியமாக வருவேன். உங்களைப் பார்த்ததும் ஓடி விடுவேன்."

"வந்த காரியம் என்ன? கவுன்சிலர் மீட்டிங்குக்குப் போகணும்."

"ஒரு வேலையாக..."

"முனிசிபால்டிக்கு வரி கொடுக்கவில்லை யாக்கும். சமன் சார்வு ஆயிருக்கா?"

"இல்லே பாங்கியிலே ஒரு வேலை காலியிருக்கு."

"நான் பாங்கி டைரக்டர் இல்லை. முனிசிபல் கவுன் சிலர். முனிசிப்பல் ஆபீஸில் வேலையில்லையே."

"ஒரு டெஸ்டி மோனியல்..."

"இவ்வளவு தானா. உன் பேரென்ன?"

" தங்கவேல், எஸ்."

பெயரைக் கேட்டவுடன் மருந்து எழுதும் டாக்டர்கள் சிலர் உண்டு. அது மாதிரி உடனே அவனுக்குக் கிடைத்த நற்சாட்சிப் பத்திரம் இதுவே.

"ஸ்ரீ தங்கவேலுவுடைய சாமர்த்தியம் போற்றத் தகுந்தது. சுத்தமான பையன். நாணயமான பிள்ளை. யோக்கியமான குடும்பத்தில் வந்துதித்தவன். அவனிடம் ஒப்படைக்கப்படும் காரியங்களைத் துரிதமாகவும் நன்றாகவும் முடிக்கிற சுபாவம் உண்டு. நற்குணங்களும் பெரியோரிடம் மதிப்பும் உள்ள இந்தப் பிள்ளையாண்டான், வேலை எதுவாக இருந்தாலும் பார்ப்பதில் பின்வாங்க மாட்டான். இவனுடைய வாழ்க்கை ரதம் சீரும் சிறப்புமாக இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமே கிடையாது.

12. ஏ. சர்க்கிள்
கவுன்சிலர் பசுங்கிளிக்கவுண்டர்.

இந்தப்படி நற்சாட்சிப் பத்திரங்கள் வாங்குவது சுலபம். ஆனல், அதிலே ஒரு குட்டு இருக்கிறது. மனுப் போய்ச் சேருகிற உத்தியோகஸ்தனுக்கும், அல்லது மனுவைப் பெற்றுக் கொள்ளும் இலாக்காவிற்கும் பரிச்சயமுள்ள நபரிடம் நற்சாட்சிப் பத்திரம் பெறுவது கடினம். சுருங்கச் சொன்னல் வேலை கொடுக்கிறவனுக்கும், நற்சாட்சிப் பத்திரம் கொடுக்கிறவனுக்கும் சொந்தம் இருக்க வேண்டும். இந்த ரகஸியம் தெரிந்து மனுதார் அப்படியே வந்தால், மெதுவாகத் தள்ளிவிடப் பார்ப்பார்கள். விடாப் பிடியாகக் கவ்விக்கொண்டால், கொடுக்கிற நற்சாட்சிப் பத்திரத்தால் வில்லங்கமான பாஷையை உபயோகிப்பதைப் பார்க்கலாம்.

வில்லங்கமான நற்சாட்சிப் பத்திரம் பெறுமுன் சில கிரியை நாம் நடத்த வேண்டும். அது என்ன?

" சார், சார், நீங்கள் பாங்கு டைரக்டராம். இது இது .........''

" ஏன் என்ன வேண்டும்? ஓ, ரகமத் ராவ்பகதூர் கொடுத்ததா? உனக்கு ராவ்பகதூர் ராயரைத் தெரியுமா?''

" அவரைத் தெரியாது. எங்கப்பாவுக்கு வேண்டிய சேர்மன் கிட்டப் போய் ஒரு கடிதம் வாங்கி அதைக் கொண்டு போய் திவான் பகதூர் ரகமத்துல்லாவிடம் கொடுத்து, அவர் கொடுத்த சிபார்சுக் கடிதம் கொண்டு போய் ராவ் பகதூர் ராயரிடம் கொடுத்தேன். அவர் உங்களுக்கு இந்த லெட்டர் கொடுத்தார்.''

" ஓகோ வேலையா? ஒன்றும் இல்லையே.''

" நீங்களாக ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தால், பாங்கி உத்யோகம் நிச்சயம்.''

" நற்சாட்சிப் பத்திரமா? எத்தனை வேண்டும் உனக்கு?'' என்று கேட்டவர் எழுதிக் கொடுத்த பத்திரம் இதுதான்.

ஸ்ரீமான் தங்கவேல் மிகவும் கெட்டிக்காரப் பிள்ளையென்று என் நண்பர்கள் பலரும் புகழ்ந்து பேசுவதை அடிக்கடி கேட்டிருக்கிறேன். இலக்கியம், சங்கீதம் இதில் நல்ல பரிச்சயமும் ஞானமும் உண்டு. நடனத்தில் எப்படியோ? இந்தப் பையனை, சில காலமாக நான் அறிந்த வரைக்கும் வேலைக்கு மிகவும் லாயக்குள்ளவன் என்றும் வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டியவன் என்றும் தெரிகிறது. அப்படி முன்னேறுவதை நண்பர்களோடு நானும் எதிர் பார்க்கிறேன்.

திவால் பாங்கி டைரக்டர்
பட்டினி ரங்கம்

இதைக் கொண்டு போய் மனுக் கொடுப்பதற்கு முன்னல், டெலிபோன் மணி பாங்கியில் அடிக்கிறது. "ஹலோ நான்தான் ; ஒரு நற்சாட்சிப் பத்திரம் கொண்டு வருகிற பையனுக்கு வேலையில்லை. பையனை ஒரு மாதம் கழித்து வரும்படி சொல்லுங்கள்" என்கிருர். அயலூராக இருந்தால், நற்சாட்சிப் பத்திரம் கொடுத்த மை உலரு முன் இன்னெரு கடிதத்தில், "வேலை கொடுக்காதே" என எழுதி அன்றைய போஸ்டில் சேர்த்து விடுவார்கள். தங்க வேலு பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிய போது 'சுமாரான கையெழுத்து' நன்னடத்தை இரண்டோடு வந்தவன். இப்போது எவ்வளவோ, கலைகளையும் தத்து வங்களையும் புரிந்த மேதாவியாகி விட்டான். இதெல்லாம் உண்மையா?

என்னிடம் கேட்டால் அத்தனையும் அபத்தம் என் கிறேன். சரியான நற்சாட்சிப் பத்திரங்கள், உண்மை யான நபர்களால் மனச் சாட்சிக்கு விரோதமின்றி கொடுக்கப் படவேண்டும். ஆனல் தற்காலத்தில் அந் தஸ்தும், அறிமுகமும் ஏணி வைத்தாலும் எட்டாத நபர் களுக்குள் தான் நற்சாட்சிப் பத்திரக் கொடுக்கல் வாங்கல் நடக்கின்றன. முகராசியே தெரியாதவர்கள் அன்பையும் ஆசியையும், சொட்டச் சொட்டத் தோய்த்து எழுதி விடு கிருர்கள். இவை யெல்லாம் நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகா. நியாயமானவையும் அல்ல.

ஒரு மனிதனின் திறமையை அவனேடு நெருங்கிப் பழகியவர்களே சொல்ல முடியும். அவர்கள் கொடுத்தால், உண்மையும், நியாயமும் தொனிக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் ஆகும். நம்முடைய வாழ்க்கையை நன்கு கவனித்து நம்மோடு ஒட்டி விட்ட நபர்களே அதைக் கொடுக்க அருகதை யுள்ளவர்கள். ஸ்ரீ தங்கவேலுக்கு அப்படி யேற்பட்டால்?

இந்த நற்சாட்சிப் பத்திரம் எவங்க படிக்கிறங்களோ, அவங்களுக்கு.

ஶ்ரீ தங்கவேலு, ஆக்சுபோர்ட்டு கிராப்பு, சுருட்டை முடி, அரும்பிய சார்லி மீசை, காதிலே புளியங்கொட்டைக் கடுக்கன் உள்ளவர். எங்கிட்டே வாடிக்கையாக முடி வெட்டுகிறவர். முதமுத்லே எங்கடைக்கு இவர் வந்த போது:—

"ஏனப்பா இந்த நாக்குட்டி இங்கே இருக்குது?" என்று கேட்டார்.

"அதுவா, எதனைச்சும் தப்பி தவறி கத்திரி பட்டு காது நுனி கினி தவறி விழுந்தா திங்கும். அதுக்காக உக்காந்திருக்குன்னேன்."

இவரு பின் தாங்கணுமே. இல்லே. எப்பவும் தலே கொடுத்தா பின் வாங்கமாட்டார். நிதானம் உண்டு; நாசுக்காக இருப்பாரு. ஜவான் மாதிரி உருவம். புத்தி சாலித்தனமும் சுருட்டை முடியும் இருக்கு. இவர் முகம் மழமழன்னு வெண்ணே போல இருக்கும். முகவெட்டு அபாரம். இவருக்கு இருக்கிற முகவெட்டைக் கண்டு நானே மயிர்க்குச்செறிகிறதுண்டு. கைமேலே காசு கொடுப்பாரு, இவரு. இவர் முயர்ச்சிக்கிற காரியங்க தலே ரோமம் போல கிர்ன்று வளருமின்னு திண்ணமாகச் சொல்லுவேன்.

சிகை அலங்காரக் கூடம்
பண்டித காசிலிங்கம்.

இந்த நற்சாட்சிப் பத்திரத்தாலே காசிலிங்கம், ஸ்ரீ தங்கவேலே எப்படி நெருங்கி ஒட்டி குளோசாகப் பார்த்துப் பழகியிருக்கிறன் என்பது தெரியவில்லேயா?

ஐயா மாருக்கு,

நாந்தான் கறிகாயி காத்தாயி சொல்லறேன். இந்த புள்ளையாண்டானுக்கு நல்ல ருசி தெரியும். காகறி வாங்க வந்திட்டா சாமர்த்தியமாய்ப் பேசுவாரு. பேச்சு வெண்டைக்காய் மாதிரி இருக்காது: வெட்டு ஒண்ணு துண்டு ரண்டுதான். இவருக்கு பாவக்காயிலிருந்து உருளக்கிளங்கு வரை எது வேணுமின்னாலும் பிடிக்கும். கை, கருணக் கிளங்கு இல்லே; தாராளமான மனசு; நியாயமான விலை கொடுக்கும். நிறுத்துப் போடறதிலும், எண்ணிப் போடறதிலும் இவரை ஏமாத்த யாரும் முடியாதுங்க. கரிகாயைத் தொட்டுப் பார்க்காமல் இளசு, முத்தல் சொல்லுவாரு. இந்தப் பிள்ளை நீடூழி இளம் வெள்ளரிப் பிஞ்சு போல வாழணும்.

கரிகாய் காத்தாயி.

இது தான் போகட்டும். நம்முடைய குண குணங்களை வெளுத்து வாங்கும் நபர்கள் இன்னும் இல்லையா ?

தங்கவேலய்யா, அத்தனையும் தங்கம். வெள்ளை கொண்டுபோக, ரெண்டு நாளு அதிக மாயிட்டா, ஆனை முழுக்கப் புழிஞ்சு விடுவாங்க ஆன வெளுத்திட்டா நல்ல வெளுக்கணும். அதைக் கண்ட அவுங்களுக்கு உயிர்; அதே போல மனசும் சுத்தமாயிருக்கும். சட்டை, கோட்டு இதெல்லாம் ரொம்ப நாகரிகம். ரெண்டு துணி மணி தொலைச்சிட்டா கோபம் வரும். ஆனா மன்னிச்சிடுவாங்க. மன்னிக்குறதுன்னா, அது சாமானியமான குணமா? பெருந்தன்மையானது. அது தான் உலகத்திலே சிறந்த குணம். சிறு புள்ளை மொத நான் கவனிச்சதிலே வெள்ளை மனசு; நல்ல சுபாவம் இவரு. இவங்க

முயற்சிக்கிற காரியங்க, விசிறி மடிப்புப் போல் கை கூடணும். இடைஞ்சலுக துன்பம் இது வெல்லாம், அழுக்குப்போல ஓடி என்னோட சலவைபோல இவங்க பிரகாசிக்கணும்.

வண்ணான் குருசாமி
சலவை மண்டபம்.

இப்படியே அன்றாட வாழ்க்கையில் நம்மோடு ஒட்டிப் பழகும் நபர்கள் கொடுக்க வேண்டும். நம் சுபாவத்தை எடை போட்டு துல்லியமாக நிறுத்து விடுகிற மளிகைக் கடைக்காரர், நம் நாகரிகத்தை யளந்து விடுகிற தையற்காரன், நம் நாக்கின் ருசியை தெரிந்துகொள்ளும் பால்க்காரன், நம்முடைய மனோவலிமையைப் புரிந்து கொண்ட பில் கலெக்டர், நமது பொய் புளுகுகளைக் கணக்குச்செய்த கடன்காரன், நம் நெஞ்சுத் துணிச்சலைத் தகர்த்தெறிந்த இன்ஷூரன்ஸ் ஏஜெண்டு இன்னோரன்னவர்களிடம் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றால் நியாயமும் உண்மையும் உள்ளவை ஆகும்.

ஆனால், இது ஏனோ நடக்க வில்லை. ஒருக்கால் நம்மோடு நெருங்கிப் பழகிய நபர்கள் கொடுத்தாலும் கொடுப்பார்கள், மனைவிமார்கள் கொடுப்பார்களா? கொடுத்தால் தங்கவேலுக்கு எப்படிப்பட்ட பத்திரம் கிடைக்கும்?

"என் கணவருக்கு இது நற்சாட்சிப் பத்திரம்":-

நான் வாழ்க்கையில் முதன் முதலில் செய்த தப்பிதம் இவரை மணந்தது.

இவரை மணந்தும் இவர் மேல் அன்புடன் இருப்பது இரண்டாவது தப்பு.

இவருடைய குண குணங்களைப் பெண்கள் அறிந்திருந்தால் இவருக்கு மணமே ஆகி இருக்காது. அப்படி அறியாமற் போனது மூன்ருவது தப்பு.

நற்சாட்சிப் பத்திரம் எழுதும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டதை நாலாவது தப்பிதம் என ஒப்புக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புமிக்க
மனைவி, **மாங்கல்யம்மாள்.**

இப்படிப் பட்ட உண்மையான நற்சாட்சிப் பத்திரங்களை எடுத்துக்கொண்டு எவன்தான் வேலைக்குப்போவான்? இதனுல் தான் நெருங்கிப் பழகியவர்களிடம் வாங்காமல், முன்பின் முகாலோபனம் அல்லாதவர்களிடம் நற்சாட்சிப் பத்திரங்கள் வாங்கப்படுகின்றனவா? ரொம்ப சரி.

# மோஹினி

காலம் வஸந்த காலம்; நேரம், அந்தி நேரம்: இடம், பொருனை ஆற்றங்கரை. மோஹன் படித்துறையில் இறங்கி வந்து கொண்டிருந்தான். எதிரே, பெண்கள் வர்ண விஸ்தாரமான ஈரப்புடவைகள் சந்தனக் குழம்பு போல் பொன் மேனியில் அப்பிக்கொள்ள, மயில் போல் ஒயிலாக நடந்து, குயிலாகப் பேசி, சம்மேளமான ராகங்கள் ஸ்வரவரிசை போலக் கூடமேந்திச் செல்லுகிறார்கள். வெண் மணற் பரப்பிலே பாலகர்களின் சடுகுடு ஆட்டம்: தெளிந் தோடும் பளிங்கு நீரில், சாதம் உண்ணும் குழந்தைகளின் கும்மாளமும், ஊட்டும் பெரியவர்களின் உற்சாகமும் ஒரே கோலாகலம்!

இக்காட்சிகள் மோஹன் மனசைக் கவரவேயில்லை. தனிமையாக இருந்தவன் இயற்கை யின்பத்தில் நெஞ்சு செலுத்தி, மேற்கே வரிசை வரிசையாக நிமிர்ந்தெழுந்த மேகப் படலங்களுக்குள் ஐக்கியமானான். சந்தியா சூரியன் தன் ஒளிக்கிரணங்களுடன் மலைச்சரிவில் ஒளிந்து கொள்ளும் சோக நாடகத்தில் தன் முழு இருதயத்தையும் லயிக்க விட்டுவிட்டான்.

சூரியன் மறைந்தான். மறைந்தும் இருள் சூழவில்லை. வானக் கடலில் வெடித் தெழுந்த வைரங்கள் பூத்துச் சொரிந்தன. அதாவது நக்ஷத்திரங்கள் தோன்றின.

ஆற்றங்கரைப் பூந்தோட்டத்திலிருந்து, பட்டு ரோஜாவின் மணத்தைப் பிள்ளைத் தென்றல் ஏந்தி வந்தது. மோஹன் பெரு மூச்சுவிட்டு, ஆகாயத்தை நோக்கினான். அப்போதுதான் வெண் மேகக் கூட்டங்களின் இடையே விரித்திருந்த நீலப் பட்டாடையிலே, திடீரென்று ஒரு சுடர் தோன்றிற்று.

இதற்குள் மந்த மாருதம் மெல்லென ஆடி வந்தது. எங்கோ வகுளமரக் கிளைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, பூக்களைச் சொரிந்தன. பசிய வேப்ப மரத்தின் கிளைகள் ஊடாக, நிலா உதயமாயிற்று. குளுகுளு நிலாவும், அசைந்து வரும் ஆனந்தத் தென்றலும் அவன் உணர்ச்சியையும் மனதையும் கவர வேண்டுமல்லவா! இயற்கைத் தேவியே வெகு சிரமப்பட்டு, நிலாவையும் நீல வானத்தையும், நெடுஞ்சரையில் நீரோட்டத்தையும், வெண் மணற் பரப்பையும் ஒன்றுபட அமைத்தும் மோஹனின் மனம் நிம்மதி அடையவில்லை.

ஆம், அவன் மனதிற்குள் நாம் புகுந்து பார்க்கலாம். பார்த்தால், அவன் யாரோ ஒருவர்—ஆமாம் ஒரு ஆடவரின்—வரவிற்காக ஏங்கி இருக்கிறான் என்று உணர்வோம்! ஆற்றங்கரைப் பக்கமாக தன்னிரு கருவிழிகளைச் செலுத்தி, தன் கண்ணையே நம்பிக் கொண்டிருந்தான்.

இயற்கை, எப்போதும் ஒன்றுபோல் இருப்பதில்லை; அது இயற்கை! அடிக்கடி மாறுந் தன்மை கொண்டது. கூந்தலை முடிக்கிற டேப் நிறம் போல அல்லது மாந்தர் மனம் போல, இரவைப் பகலாக எரித்த வெண்ணிலவின் சோபையை, கரிய மேகங்கள் மறைத்தன. மாங்குயிலின் குஞ்சொன்று காகத்தின் மூகந் தெரியாது கூவிற்று. (குயிலின் குஞ்சு காகத்தின் கூட்டில் வளரும் எனச் சொல்ல வேண்டியதில்லை.) மோஹனின் பார்வை வர வர

மங்கியது, நிலாவைப்போல் திடீரென, அவன் கண்களைப் பத்து விரல்கள் பொத்தின.

" ஆ, யாரது ? என் மோஹினி எங்கே ?"

"மோஹன், சப்தம் போடாதே மோஹினி வரவில்லை. நான்தான் வந்தேன்."

"மோஹினி ஏன் வரவில்லை ? சங்கரா, உன்னையா நம்பி இருந்தேன் ?"

மோஹன் இதய கமலத்திலிருந்து புறப்பட்ட உஷ்ணம் அப்படியே சங்கரனைத் தகிப்பது போலிருந்தது.

" நான் நம்பிக்கைத் துரோகியல்ல "

பொத்திய கைகளை வாங்கிய சங்கரன், ஏதோ காதோடு சொன்னான். கடோப நிஷத்தைக்கேட்ட சாண்டில்ய முனிவரைப்போல் மோஹன் முகம் ஜாஜ்வல்யமாகத் திகழ்ந்தது.

மோஹனும் சங்கரனும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். வானக் கடலிலே நிலா ஓடம் விட்டுக்கொண்டிருந்தான். ஆற்றிலே தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. காகத்தின் முகத்தைக் கண்ட மாங்குயிற் குஞ்சு கத்திற்று.

இவ்வளவு நல்ல சந்தர்ப்பம் இருக்கும் போது முதல் அத்தியாயம் முடிக்கலாமல்லவா ?

## சங்கரன் சங்கடம்

கதையின் முற்போக்கைவிட பிற்போக்குத்தான் முக்கியம். எழுத்தாளர்கள் 2—ம் அத்தியாயத்தை, பூர்வோத்திர விளக்கத்திற்கு ஒதுக்கி வைத்துள்ளார்கள்.

அச் சம்பிரதாயப்படி கதா பாத்திரங்களின் பூர்வோத்திரங்களைக் காணலாம்.

நம்முடைய மர்மம் செறிந்த கதைக்கு மோஹினி முக்கிய பாத்திரமல்ல; இரண்டாம் பக்ஷந்தான். மோஹன் வீட்டிற்கும் சங்கரன் வீட்டிற்கும் ஊடாக உள்ள குட்டிச் சுவர்தான் கதையின் இதயஸ்தானம். இக்குட்டிச் சுவரை நம்பியே இரு வக்கீல்கள் பெரிய பணக்காரர்கள் ஆனார்கள். அந்தக் குட்டிச்சுவர் ஒன்றும் தப்பிதம் செய்யவில்லை. அது இருந்த இடத்திற்கு ஊடாக மோஹன் குடும்பத்தாரும், சங்கரன் குடும்பத்தாரும் குடி வந்தது தான் தப்பு.

குட்டிச்சுவர் யாருக்கென விவாதம் எழுந்தது. விடாப் பிடியாக வக்கீல்கள் குட்டிச் சுவரை அண்டினார்கள். முடிவில் இரு திறத்தாருக்கும் அது பொது என்று தீர்ப்பு ஆயிற்று. உடனே இருதிறத்தாரும் ஒவ்வொரு அடிச் சுவராக எழுப்பினார்கள். அந்த வீட்டுக் காற்று இந்த வீட்டுக்குள் வராது. இந்த வீட்டுத் தாளித்த வாஸனை அந்த வீட்டுக்குள் போகாது. இப்படி இருக்கிற போது, மனிதர்களைப் பற்றி பேசுவானேன்?

ஆனால், மோஹனின் தகப்பனார் அந்த வீட்டை விற்று விட்டு அடுத்த ஊரில் குடியேறிவிட்டார். சங்கரன் குடும்பம் அங்கேயிருந்தது.

நமது கதை நடக்கும் நேரத்தில், மோஹனும் சங்கரனும் பரம்பரை குடும்ப விரோதிகளுடைய சந்ததிகள். பள்ளித் தோழர்கள் ஆனபடியால், பெற்றோருக்குத் தெரியாது சிநேகமாக இருந்தனர். மோஹினிக்காக, மூன்று மைல் தூரம் நடந்து ஆற்றங்கரைக்கு வந்திருந்தும், சங்கரனோடு மோஹினி—வராமல் ஏமாந்ததும் போன அத்தியாயத்தில் அறிந்த விஷயம்.

இனியுள்ள கதை. சங்கரன், மோஹனிடம் விடை பெற்று வீட்டுக்குள் நுழைந்தான். அவனுடைய தந்தை "ஏண்டா, சங்கரா எங்கே போயிருந்தாய் ?" என்றார். சங்கரன் திகைத்துப் போனான். அவன் மனம் ஆடிக் காற்றில் அலை படும் சருகு ஆயிற்று. நெற்றியில் அரும்பிய முத்துக்களைத் துடைத்தான். கண்கள் பதறின. இருதயம் துடிதுடித்து மிலிட்டரி லாரி போல வேகமாக ஓடிற்று.

"ஏன் தம்பி பதறுகிறாய் ? என்ன விஷயம் ?"

"அப்பா, தாங்கள் மன்னிப்பீர்களா ? நான் பெரிய தவறு செய்துவிட்டேன்" என்று இதய விம்மலுடன் ஏங்கினான். அவன் கண்களில் முத்து முத்தாக நீர்த் துளிகள் உதிரவும் வேண்டுமா !

"தம்பி விஷயம் என்ன ? ஏன் வீணாக அழுது துடிக்கிறாய் ?" என்று பச்சாத்தாபத்துடன் கேட்டார்.

"அப்பா" என்றான். சங்கரனுக்கு அதற்கு மேல் பேசமுடியவில்லை. தன் தந்தையின் பூப்போன்ற இளகிய மனம் பாராங் கல்லாக மாறும் என்பதை அறிவான். 'கடமையை மறந்து விடலாமா !' என்று உட்குரல் கேட்டது. உண்மைக்கும் மனச்சாக்ஷிக்கும் உயர்வு கொடுக்க உயிரையும் கொடுக்கச் சித்தமானான்.

"அப்பா மோஹினியை மோஹனுக்குத் தருவதாக வாக்களித்து விட்டேன்" என்று சொன்னான். அக்காட்சி போரஸ், மகா வீரன் அலெக்ஸ்ஸாந்தர் முன்னால் பேசிய சரித்திரக் காட்சி போல் இருந்தது.

"எந்த மோஹன் ?" என்று சாவகாசமாகக் கேட்டார்.

"அவன்தான், நம்முடைய குடும்ப விரோதி விவகாரம்பிள்ளையின் மகன். வி. மோஹன்" இதைச் சொல்லுமுன் தடா லென்ற சப்தம் கேட்டது. சங்கரன் ஒருதரம் கண்விழித்துப் பார்த்தான். மறுமுறை கூர்மையாகப் பார்த்தான். மூன்றும் முறையாகப் பார்த்தபோது தன் தந்தை வெட்டுண்ட வாழையென விழுந்து கிடப்பதைக் கண்டான்.

இச்சந்தடி கேட்டு தாயார் ஓடிவந்தாள். தன் புருஷன் தரையில் மூர்ச்சையாக விழுந்து கிடப்பதையும், பையன் அடியற்ற மரம்போல் அசைவற்று நிற்பதைக் கண்டதும், "என்னடாப்பா, சங்கரா. என்ன சங்கதி?" என்று வினவினாள்.

சங்கரன், "அம்மா, மோகனுக்கு நம்முடைய மோஹினியைத் தருவதாக வாக்களித்துவிட்டேன்" என்று சொல்லி முடிப்பதும், அந்த அம்மாள் அடிபட்ட மயில்போல் மூர்ச்சையாகி விழுவதும் ஒன்றாக இருந்தது.

தாயும் தந்தையும் மூர்ச்சையடையும் படியான இந்தக் காரியத்தை சங்கரன் செய்யலாமா? இது தர்மமா? நியாயமா? ஆம் ராமன் செய்யவில்லையோ? ராமன் கானகம் சென்ற மன உத்சாகத்தைவிட, அதிகப்படியான உத்சாகத்துடன் கடமையை நிறைவேற்ற, டெலிபோன் பக்கம் சென்றான்.

## மூர்ச்சைப் படலம்

டெலிபோன் மணி கண கணவென அடித்தது. டாக்டருக்கு கோபம் பொத்துக்கொண்டு வரவே "யாரது?" என்று சள்ளென விழுந்தார். அவருக்கு நல்ல மண்டை

யிடி. ஆகவே கோபப்பட்டதில் ஆச்சர்யம் இல்லை. சங்கரன், தெளிவான குரலில் தன் வீட்டிற்கு உடனே வரும்படி கேட்டுக்கொண்டான்.

"விஷயம் என்னவோ?"

"அப்பாவும் அம்மாவும் மூர்ச்சையாகி இருக்கிறார்கள்."

"ஏன்! இருவருக்கும் சண்டை சச்சரவு ஏதாவது?"

"இல்லை, நான்தான் காரணம்."

"பரிக்ஷையில் பாஸ்செய்து விட்டாயோ?"

"சீக்கிரம் காரில் வாருங்கள்"

"வியாதியின் தன்மை தெரிந்தால் மருந்து கொண்டு வரலாம்."

"அதாவது மோஹன்—இவன் எங்கள் குலவிரோதியின் மகன் இவனுக்கு மோஹினியைக் கொடுப்பதாக வாக்குத் தத்தம் செய்துவிட்டேன். இதைச் சொல்லவே அப்பாவும் அம்மாவும் மூர்ச்சையாகி விட்டார்கள். டாக்டர், சீக்கிரம் வாருங்கள்" என்று சொல்லி ரிசீவரைக் கீழே வைத்தான்.

சங்கரன், மனம் நிம்மதியாக இருந்தது. அப்போது அவன் அறைக்குள் தந்தை வருவதைக் கண்டான்.

"டேய் பழிகாரா. நம்முடைய குடும்ப விரோதத்தை மறந்து இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டார்.

சங்கரன் பயப்படவில்லை. "அப்பா தாங்கள் சிந்தனை செய்யுங்கள். உலகத்தில் விரோதம், போட்டி, பொறுமை

இருந்தால் சுபிட்சம் நிலவுமா? நம்முடைய வீட்டில் மோஹினி இருப்பதால் யாருக்கு என்ன லாபம்?......'' என்று முடிக்குமுன்பே, "டேய் லாபமோ, நஷ்டமோ என் மனோரதத்திற்கு நீ முட்டுக்கட்டை போடாதே. என் மனப் போக்கிற்கு குறுக்கே நில்லாதே. மோஹனுக்கு-நம்முடைய குடும்ப விரோதியின் குலக் கொழுந்திற்கா இருந்திருந்து மோஹினியைக் கொடுப்பேன்?...'' என்று கண்கள் சிவக்க, கோபம் ஜொலிக்கச் சொன்னார்.

சங்கரன், தான் வாக்களித்து விட்டதை நினைப்பூட்டினான்.

மூர்ச்சை தெளிந்த தாயார் மெல்ல மெல்ல அந்த அறைக்குள் வந்தாள். புருஷன் கடிந்து சொல்வதையும் பிள்ளை நிமிர்ந்து நிற்பதையும் கண்டு தாயுள்ளத்திற்கும் சதியுள்ளத்திற்குமாக மாறி மாறி துடித்துக்கொண்டிருந்தாள்.

"நீ மோஹினியைக் கொடு. பிறகு இந்த வீட்டில் உனக்கு செல்லாத தம்படி கூடச் சொந்தமில்லை. எல்லாம் ஆற்றங்கரைப் பிள்ளையாருக்குத்தான். ஜாக்கிரதை'' என்றார்.

இப்படி எதிர்பாராமல் ஆற்றங்கரைப் பிள்ளையார் தன் வாழ்வுக்குக் குறுக்கே வந்து விடவே, சங்கரன் அப்படியே பேச்சு மூச்சின்றிப் பிரக்ஞை இழந்தான்.

தாயார் 'ஐயோ மகனே' என்றலறினாள். தகப்பனார் டெலிபோன் பக்கம் ஓடி டாக்டரைக் கூப்பிட்டுக் கொண்டிருந்த சமயம், காலடி ஓசை கேட்டது. அங்கே டாக்டர் வந்து கொண்டிருந்தார். தம் சொந்தக் காதால், "பையன் சங்கரன் மூர்சையாகி விட்டான் உடனே வரவும்'' என்று கூப்பிடுகிறதைக் கண்டு டாக்டருக்கு

ஒன்றும் புலப்பட வில்லை. தாயும் தகப்பனையும் மூர்ச்சை தெளிவிக்கக் கூப்பிட்ட சங்கரன் மூர்ச்சையாகக் கிடந்தது. விந்தையாக இருக்கவே,அவர் ஆச்சர்ய வேதனை தாங்க முடியாமல் மூர்ச்சை யுற்றார்!

## இருளும் பொருளும்

நாட்கள் கழிந்தன; வருஷங்கள் ஆக வில்லை. 24ல் ஒரு பங்கு வருஷம் மட்டுமே கழிந்தது. அதாவது பதினைந்து நாட்கள் சென்றன. பௌர்ணமி வந்த நேரே பதினைந்தாம் நாள் அமாவாசை தினம். எங்கும் கரிய இருட்டு. கிள்ளி விட்டுக் கிட்டே நின்றாலும் தெரியாத கன்னங் கரிய இருள்.

சங்கரன் தோட்டத்தில் நின்று எட்டி எட்டிப் பார்த்தான். ஒரு வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மோஹன் இறங்கினான். அவன் மனம் இன்ப வெள்ளத்தில் மூங்கி மூழ்கி ஆழ்ந்து அமிழ்ந்து கரை காணாது தத்தளித்துக் கொண்டிருந்தது. மோஹினிக்காக ஏங்கி அங்கு வந்திருக்கிறான். வாகை மரம் அசைந்தது; வாழையும், பக்கத்து மருத மரமும் அசைந்தது. மெதுவாக வேப்ப மரம் அசைவுற்றது. மெல்லெனக் காற்று வீசி மோஹனின் மனதை இன்ப லோகத்திற்கு இழுத்துச் சென்றது.

இருட்டிலே, காலடிச் சப்தம் கேட்டது. வந்தது யாரென மோஹனுக்குத் தெரிய வில்லை. காலடி யோசை அவன் இதயத் துடிப்புக்குத் தாளம் போடுவது போல இருந்தது.

'மோஹன்' என்று குரல் கொடுத்தான் சங்கரன்.

'மோஹினி எங்கே?' எனக் கேட்டான் தயக்கத் தோடு மோஹன்.

"உஷ், சப்தம் போடாதே." என்று எச்சரிக்கை செய்து விட்டு, தோட்டத்துள் போய் விட்டான்.

ஒரு நிமிஷம் ஒரு யுகமாக கழிந்தது. ஐந்து யுகம் நிமிஷங்கள் சென்றன. சங்கரன் தழுதழுத்த குரலில் "உனக்கு கால் கட்டாக இருக்கும்" என்ருன்.

மோஹினியோடு, வண்டிக்குள் மோஹன் ஏறினன். "அப்பா, நீ தியாகி, நம் குல விரோதத்தை மறந்து எனக்கு மோஹினியைக் கொடுத்தாய்; மோஹினி கிடைத் தது பெரும் பாக்கியம். உன் தன்னலமற்ற காரியத்தை ........மறவேன்—" என்ருன்.

சங்கரன் "மோஹினியை!" என்ருன்.

"மறக்கத்தான் முடியுமா?" என்று சொல்லும் போதே வண்டி நகர்ந்தது.

சங்கரன் பெரு மூச்சு விட்ட படியே, தோட்டத்தின் வழியாக வீட்டுக்குள் நடந்தான். மோஹினியைப் பிரிந்த துயரம் ஒரு பக்கம்; ஆனலும் தன் தியாக உணர்ச் சியை வியந்த படியே வீட்டுக்குள் நடந்தான்.

வண்டி இருளைப் பிளந்து போய்க் கொண்டிருந்தது.

## மோஹினி யார்?

விண்ணில் கார் ஓடிற்று; தழைத்த மரங்களின் புன்னகையையும், பூ நகையையும் முத்தமிட்டு வந்தது

வஸந்த காலத் தென்றல். அறையில், மோஹன் நுழைந்தான். திடீரென 'கால் கட்டாக இருக்கும்' என்ற சங்கரன் வார்த்தைகள் நினைவிற்கு வரவே, சிரித்தான்.

மோஹினியின் பார்வை கெஞ்சுதலாக இருக்கவே, எடுத்து மார்போடு தழுவிக் கொண்டான்.

மோஹினி கீழே குதித்துத் தன் வாலையாட்டிற்று!

# மாணவன் கஷ்டம்!

பள்ளிக்கூடத்திலே என்னை எப்படி யெல்லாமோ ஆக்க முயற்சித்தார்கள். முயற்சியுடையார் புஸ்தகத்தில் இகழ்ச்சியடையார்கள்; ஆனால் என் அனுபவத்தில் இகழ்ச்சியடைந்தார்கள். என்னை மேதாவியாக்க, வாங்கச் சொல்லிய நோட் புஸ்தகங்களை உயரமாக அடுக்கினால் ஹிமாலயம் உயரத்திற்கு வரும்; ஒன்றன்பின் ஒன்றாக வைத்தால் பூமிக்கு ஒரு ஒட்டியாணம் ஆகலாம். நோட் புத்தகங்களிலே வாத்தியாரின் வாத்தியார் வழி வழி வம்சமாக கக்கிய பாடங்களைக் குறிப்பெடுத்து கொள்ளச் சொன்னார்கள்.

சயன்சு வாத்தியார்கள் என்னை விஞ்ஞான நிபுணனாக்க முயற்சி செய்தார்கள். இலக்கியப் பண்டிதர்கள் என்னை இலக்கியப் புலி—என் இரண்டாம் ரவீந்திரர் என்று கூட ஆக்கிவிட பாவலாப் போட்டார்கள். தத்துவாசிரியர், என்னை இன்னொரு ராதாகிருஷ்ணன் போல் கொண்டு வர முயன்றார். டிரில் மாஸ்டர் விட்டாரா? அடடா! என்னைக் காமா பயில்வானோடு பஞ்சாக் கொடுத்து குஸ்திக்கு நிற்க, உடம்பைத் தயார் செய்தார். சித்திர வாத்தியார் நான் "மாலி"யை விட சிறந்த கார்க்கச்சர் போட தலை கீழாக நின்றார்! இவர்கள் எல்லோரும் சேர்ந்து என்னைப் படுத்திய பாடு கொஞ்ச நஞ்சமல்ல!

நான் எழுதிய நோட் புஸ்தகங்கள், படித்த பள்ளிக்கூடப் புத்தகங்கள், இவைகளினால் எனக்கு ஒருவித லாப

மும் இல்லை. கடைக்காரன் லாபம் அடைந்ததோடு சரி. அந்த நோட் புத்தகங்கள்; அதிலுள்ள விஷயங்கள் ஒரு காசு பெருது.

நான் கேள்விச்சாலை, பரிக்ஷை மண்டபம் இவைகளிட மிருந்து விடுதலை பெற்றுவிட்டேன். முட்டாள்தனமாக எந்தப் பரிக்ஷைகளும் இனி என்னைக் கேட்கமுடியாது. எனக்கு வினைமுற்று, உவமையணி, வட்டிக்கு வட்டி, கிளை வின்பிறப்பு, வளர்ப்பு, காற்றின் அழுத்தும் சக்தி, பிளாஸி யுத்தம் நடந்த வருஷம், இலங்கைமேல் படையெடுத்த இந்திய அரசனின் காலாட் படை...... இன்னோரன்ன அபத்தங்களைக் கேட்டு, நான் சொல்லும் அபத்வாணங்களை, என் சகோதர மாணவர்களுக்குக் காட்டி...... மாணவர் களோடு, தானுமாய்ச் சிரிக்க எந்த ஆசிரியனாலும் முடியாது. பகுதியும் விகுதியும் எனக்குப் பாராக் கொடுக்குமா; என்னுடைய அறியாமைகள் எல்லாம், கோடைக்காளான்கள்போல் கேள்வித்தாளாகமாறி என் கண்முன் வந்துநிற்குமா; அறியாமையை விளம்பரப் படுத்தி அப்படியே விலைக்குவாங்க எந்தப்பள்ளிக்கூடமும் மார்தட்ட இனி முன் வருமா, என்ன?

சிவாஜிக்கும் எலிக்குமுள்ள தொந்தமும் மலையெலி என்ருல் என்னவென்றும் திப்பு ஹைதர் படைத்திறமை யும், மழைக்காலத்தில் கடிகார பெண்டுலத்தின் திருகு ஆணியை மேலே தள்ளுவதா, கீழே தள்ளுவதா என் றெல்லாம் சொல்லி என் காதுகளை கொப்பளம் செய்ய முடியாது. எனக்கு இஷ்டமான கதைகளையும் கட்டுரை யையும், நெஞ்சையள்ளும் காவியங்களையும் படிக்கலாம்; அவை பரிக்ஷைப் பேப்பராக மாறி என் அறியாமைத் தீவட்டிகளாக சுடர்விடப் போவதில்லை. படித்ததை, படிக்கும்போதே வரிக்குவரி வார்த்தைக்கு வார்த்தை

மறக்க உரிமையுண்டு. பெரிய பெரிய கதாசிரியர்களின் கதையைப் படிக்காமல் இருக்கும் சுதந்தரம் இப்போது இருக்கிறது; விழுந்து விழுந்து படிக்கவும் செய்வேன். தற்காலச் சிறு கதைகளைப் படிக்கவும் படிக்காமலும் இருக்கும் திறமை என்னைச் சார்ந்தது. இறந்துபோன சம்பவங்களை, சரித்திரங்களை என் மூளையில் திணிக்க முடியாது.

ஆகா! வானொலிப் பெட்டியில் மிதந்துவரும் ராகம், ஜன்ய ராகமோ ஜன்னியல்லாத ராகமோ, விரும்பினால் ரஸிக்கலாம். வசந்த ராகத்தோடு, வாசத்தென்றலும், மலர்மணத்தோடு உராய்ந்து வந்தால், மனதைக் கவர் கிறதே! மாங்குயிலின் இன்னோசை உள்ளங்கவர் கவிதை யொலியைப் புரண்டோடுகிறது. தீஞ்சுவை நிறைந்த குழந்தையின் தேமதுர மழலைமொழி என் செவியில் பாய் கிறது. இதையெல்லாம் எட்டாம் ஹென்றியின் மனைவி களைப் பற்றிக் கேட்பதைவிட, பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலிருந்து செங்கல் எறிந்த விஞ்ஞானியைவிட இனிமையானது, சுவாராஸ்யமானது; அவஸ்யமானது!

நான் இப்போது கிறுக்கிறதெல்லாம் எந்த வாத்தி யாரும் கக்கியதல்ல. இப்போது கிறுக்குகிறவை, சொந்த அபத்தங்கள். பள்ளிக்கூடத்தில் படித்தவை அல்ல, ஐயா. என்னைப் பார்த்து புறப்பொருள் வெண்பா மாலையிலுள்ள தலைவன், ஐங்குறு நூற்றிலுள்ள ஒரு தலைவியை மணந்தால், அவர்களுக்குத் தோழி பெரும் பாணாற்றுப் பாடையில் இருக்கலாமா, நெடு நெல் வாடையிலா, அல்லது ஒரு கத்திரிக்காயில் இருக்கலாமா என்று கேள்வி கேட் டார்களே அவர்கள் இப்போது என் எழுத்துக்களைப் போற்ற வேண்டும்; அல்லது இப்போது தூற்ற வேண்டும்.

ஓவியன், வஸ்தாத்து, ஆங்கிலப் புலவன், விஞ்ஞானி தத்துவஞானி முதலானவர்களில், யாரேனும் ஒருவனாகக் கூட என்னை ஆக்கமுடியவில்லை. முயற்சியுடையார்கள், பலரும் இகழ்ச்சியடைந்தார்கள்.

எழுத்தாளன் ஆகிவிட்டேனே, இதை யார் சொல்லிக் கொடுத்தார்கள்? சொல்லிக்கொடுக்கும் வித்தையல்ல, தானாகமலர்வது, புஷ்பம்போல்!

# சீசன் கதை

[சென்ற வருஷம் எனது நண்பன் உ. பிரகஸ்பதி (உபகாரநாதம் பிள்ளை திருக்குமாரன்) குற்றாலம் சீசனை தான் அனுபவித்ததை அவ்வப்போது கடிதங்களில் எழுதினான். அக்கடிதக் குறிப்புகளை அவன் அனுமதியுடன் இவ்விடம் வெளியிடுகிறேன்.]

நண்பன் சுகிக்கு,

நேற்றுப் பார், அருவிக்குள் குளித்துக்கொண்டிருந்தபோது, ஏதோ முள்ளம்பன்றி உராய்ந்த மாதிரி இருந்தது. வெளியே வந்து பார்த்தால், நம்ம சோணாசலம் என்று அறிந்தேன். இவனைப் பார்த்து—மதுரையா? ஓகோ காசியா?—ஒரு மாதம், இரண்டுமாதம், இல்லை மூன்று வருஷம் ஆகிறது. நாங்கள் காதலர்கள் பாஷை மௌன பாஷை—பேசிக் கொண்டோம். ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்டால் அல்லவா, மனிதப் பாஷையில் பேசுவதற்கு?

அந்தச் சமயம், வானரங்கள் கனி கொடுத்து மந்தியுடன் கொஞ்சுவதையும், மந்தி சிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சுவதையும், தேனருவி திரையெழும்பி வானின்று இழிவதையும் பார்த்துக் கொண்டிருந்தேன். அருவிக்குள் ஜனக்கடல் கொந்தளித்து என்னை மூச்சு முட்ட வைத்து விட்டது. திணறிக் கீழே விழ இருந்தவனை நம்கூடப் படித்தானே தெத்துப் பல், பெயர் ராமனா,?

ராமாமிர்தமா?—அவன் தாங்கிக் கொண்டான். பல்லினுல் தாங்கியதாக நினைத்தான். ஆனல் தாக்கி விட்டான்! மண்டையிலிருந்து சிவப்பருவி பெருக்கெடுத்து புரண்டோடிய ஜலத்தையெல்லாம், செவ் வெள்ளமாக்கியது.

கண்ணிமைக்காமல் நான் சிவந்த நீரோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது போல, மனிதர்களும் குரங்குகளும் ஆயிரக்கணக்காக என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்புறம் என்ன நடந்தது எனத் தெரியாது. மூர்ச்சையடைந்ததாக ஞாபகம்.

உனதன்பன்

உ. பிரகஸ்பதி

குறிப்பு: நாலைந்து ராத்தல் விண்டுத் துணி அனுப்பிவை.

குற்றுலம்

அருவி பங்களா.

சுகிக்கு,

...ஒருமட்டும் இன்று சந்தனுதித் தைலம் ஒரு பாட்டில் தலையில் அபிஷேகம் செய்து கொண்டு,—அப்படித்தான் அருவிக்கு வருகிற ஆணும் பெண்ணும் செய்கிறுர்கள்— அருவிக்குப் போனேன். ஓடுகிற தண்ணீர்—அது பூராவும் எண்ணெய்க் குழம்பு—தண்ணீராகத் தெரியவில்லை. அருவியிலிருந்து ஓடுகிற தண்ணீரை, டின்களில் அடைத்து வியாபாரம் செய்தால் என்ன? நம்ம ஊர் எண்ணெய்க்கு, ஒரு படி அளவல்ல நயத்தைக் குறிப்பிடுகிறேன்.—உயர்வாகத் தானிருக்கும். இந்த யுக்தி எனக்கு முன்னுல் இவ்வூர்ச் சந்தனுதித் தைலக் கடைக்காரர்களுக்குப் பட்டு விட்டதே! போனுல் போகிறது.

நேற்று இரத்த வெள்ளமாகப் பாய்ந்த அருவித் தண்ணீர்—இன்று எண்ணெய்ப் பிசுக்காகத் தோன்று கிறது. என் தலையில் காயம் இருக்கும்போது நான் ஒரு பாட்டில் தைலாபிஷேகம் செய்யலாமாவென நீ ஆதங்கப் படுகிருய். நேற்று ரத்தப் பிரவாகம் முழுவதும் என் தலையிலிருந்து வந்ததாக நினைத்தே னல்லவா? அது தவறு. நம் நண்பன் தெத்துப் பல்—பெயர் ராமனு? ராமாமிர்தமா? ஓஹோ வெங்கிட்டு அல் லவா? அவனுடைய பல் பதினுறு நொறுங்கி, அதிலிருந்து வந்த ரத்தம்தான் எனத் தெரிகிறது. பாவம் இருக்கிற பதினுறு (116) பல்லோடு இந்த சீசனை முடித்துக் கொண்டு அவன் போக வேண்டும்!

இங்கே யார் யாரை யெல்லாமோ நான் சந்திக் கிறேன். முந்தாநாள் என் சேப்டி ரேஸரைத் தூக்கிக் கொண்டு ஒரு வானரம் ஓடிவிட்டது. எவ்வளவோ கெஞ்சினேன். குரங்கைப் போய் மருந்து கேட்டாலே, மரத்தில் தொத்துமாமே, ரேஸர் கேட்டால் கொடுக் குமோ? வானரத்திடம், கனிகள் கேட்டால், கொடுக்கும் போலும். திரிகூடராசப்பக் கவிராயர் இதைப் பார்த்தால், 'வானரங்கள் ரேஸருக்காக கோரஸாய்க் கொஞ்சும்...' என்று பாடி இருப்பார்!

ரேஸர் போச்சு தாடி வந்தது.

உனதன்புள்ள

உ. பிரபகஸ்பதி

ஏய் சுகி,

குரங்குகள் எவ்வளவு அழகு வாய்ந்தவை என்பதைக் குற்ருலத்தில் பார்க்கிறேன். அதைப் பார்க்கப் பார்க்க உன்னையும் பார்க்க என் நெஞ்சம் துடிக்கிறது. கிட்டத்

தட்ட, வயது வந்த குரங்குகள் அத்தனையும் ஒழுங்காக 'ஷேவ்' முககக்ஷவரம் செய்து கொண்டிருக்கின்றன. பெண் குரங்குகள் தான் இதில் அதிகம். எல்லாம் என் ரேஸரினுல்!

நான் 5 ராத்தல் லிண்டு பஞ்சு கேட்டதற்கு நீ 5 திண்டுக்கு பஞ்சு (இலவம் பஞ்சை, இரவல் பஞ்சாக) அனுப்பி யிருக்கிருய். அருவியில் அதிகமாகத் தண்ணீர் விழுந்ததால், வேகத்தைக் குறைத்துக் கொள்ள திண்டு களைத் தலையில் கட்டிக்கொண்டு நடக்க ஆரம்பித்தேன். ஆனுல், கட்டின திண்டுக்கடியில், தைலம் தேய்க்கிறது எப்படி? ஆகவே, தைலத்தைத் துளும்பத் தேய்த்த பின்பு ஒரு திண்டைத் தலைக்குக் கட்டிக்கொண்டு அருவிக்குப் புறப்பட்டேன். நான் திண்டு கட்டிப் புறப்பட்ட பின்பு தான் 'தெத்துப் பல்' தைரியமாக நடமாட வந்தான். போன 16 பல் போக மிச்சமுள்ள 116 பல்லோடும் அருவியில் கும்மாளம் அடிக்க வந்துவிட்டான்.

சிவபெருமான், ஆகாய கங்கையைத் தாங்குவது போல நான் அருவியைத் திண்டில் தாங்கி நின்றபோது மறுபடியும், முள்ளம்பன்றி உராய வந்து விட்டது. என் மேல் கால் எல்லாம் புண்ணுகிவிட்டது. நாளை முதல், ஐந்து திண்டுகளையும் உடம்பில் கட்டிக் கொண்டு அருவிக்கு வருகிறது என்று தீர்மானித்தேன். நமஸ்காரம்.

உன் அன்பன்

உ. பிரகஸ்பதி

குற்றலம்

ஐந்தருவி ரோடு

.........நல்ல நிலா. ஓங்கி உயர்ந்து கவலையற்றுக் கிடக்கும் யானை போலப் படுத்திருந்த பொதிகை மலைகள் மேலே,

நிலாக் கதிர்கள் விளையாடிக் கொண்டிருந்தன. என் நிழலும் ஒளியும் என் பின்னுய் விளையாடிய சமயம். கிரீச்சென்ற சப்தம் வந்தது. மேலே ஏறிட்டுப் பார்த்தால் முகக்ஷவரம் செய்திருந்த பெண் குரங்கொன்று அதன் அருகில் மாமரக் கிளையில் அழகின் ராணி போல ஒரு யுவதி இருந்தாள். அவ்வளவு பயங்கரமான சப்தத்தைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல் எப்படி இருக்கிருள்? குரங்கிட மிருந்து குணவதியைக் காப்பாற்ற எழும்பிக் குதித்தேன். அவள் "ஐயோ விக்ரமாதித்தன்—மகன் மூஞ்சுறு நலங் கிள்ளி" யென அலறி—எனக்குப் பயந்து பயங்காட்டிய குரங்கைக் கட்டப் போனுள். பயங்கரமாக அலறிக் கொண்டு மறு கிளையில் தாவிவிட்டது வானரம். இவ்வள வையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு ஊதா வர்ண நிலா பவனி போய்க் கொண்டிருந்தது.

அவள் கலகல வெனச் சிரித்தது முத்துக்கள் உருள் வன போல் ஒலித்தது. நான் "அம்மா அமானுஷமான, ஐந்தருவி ரோட்டில் மேலே நிலவின் குளுமைக் கதிர்கள் ஸ்பரிசம் செய்ய கீழே அருவியின் ஓடை ஜலம் கிளு கிளுக்க, ...இப்படித் தன்னந் தனியாக அமர்ந்திருக் கிருயே?" என்றேன்.

"வாரும் பிள்ளையாய் விக்கிரம ராஜனின் வேதாள புத்திரரே! மூஞ்சுறு நலங்கிள்ளி!"

அப்படியே வெல வெலத்துப் போனேன். அவள் சிரிப்பும் பேச்சும், ஓம்வென அடிக்க ஆரம்பித்த தேக்கு மரக் காற்றும், காட்டுப் பூக்களின் கொடிய வாசனையும் சேர்ந்து "மோகினி"யின் நினைவை யூட்டியது. அப்படியே வியர்த்து விறுவிறுத்து பாலொத்த நிலவிலே பதுமை போன்று நின்றேன்.

"யமதர்ம ராஜனுடைய எருமைக் கடா அதோ பார்?" என்ருள். கண்ணைச் சிப்பென மூடிக் கொண்டேன். அவள் மோகினியா? சித்தப் பிரமை பிடித்த இவ் வுலக நவயுவதியா? இந்தப் பிரச்னை தீருமுன் எங்கிருந்தோ ஒரு பெண் புலியின் கூப்பாடு கேட்டது. நடுநிசியில், நிலவொளியில், இப்படி நான் சிக்கிக் கொண்டது போல் வேறு யாரும்—அந்த மோகினி தவிர—சிக்கியிருந்தால் இருதயமே நின்று போய் ஓட்டம் பிடித்திருப்பார்கள்.

பெண் புலி என்றேனல்லவா, அது உண்மையில் ஒரு பெண் தான். அவள் வந்து, என்னருகில் இருப்பவளுக்கு சித்தப் பிரமை யென்றும், சரித்திரப் பைத்தியம் உண்டென்றும், அருவி ஸ்நானம் இதற்கு மாற்றென்றும் சொல்லி அந்தப் பேரழகியை, காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனுள்.

குற்ருலத்திற்கு, அநேக வித பைத்தியங்கள் அருவி ஸ்நானத்திற்காக வருகின்றன என்ற விபரம் போகப் போகத் தெரிந்தது. அருவிக்கு வருகிறவர்களையெல்லாம் சந்தேகப்பட ஆரம்பித்தேன். 'தெத்துப்பல்' என் மண்டையில் பதம் பார்த்தானே. அவனுக்கும் பைத்தியந் தானே?

ஃ! ஃ!! இனிமேல் இந்த ஊரில் மனுஷன், எந்த பைத்தியந்தான் இருப்பான்? சற்று நிலவிலே, சந்தித்த அப்பெண்ணை மீண்டும் பார்க்க வேண்டும் போல், ஒரு ஆசைக் கொடி நெஞ்சில் படர்கிறது...இது தப்போ தவருே?

உன் அன்பன்
உ. பிரகஸ்பதி

அப்பா சுகி,

நீ நீடூழி வாழ வேண்டும். மூந்தா நாள்—சித்தப் பிரமை பிடித்தவள் தகப்பனார் என்னை சந்தித்தார். தன் பெண்ணிற்கு முக்கால் வாசி பைத்தியம் தெளிந்து விட்ட தாகவும்—குரங்குக்கும்—மனிதனுக்கும் வித்யாசம் கண்டு கொள்ளுகிறாளாம்—சொன்னார். என்னைப் பார்த்து 'ரமா ரமா' என்று அழைக்கவே நான் என் பெயர் பிரகஸ்பதி என்றேன். என்னுடைய தங்கை கலியாண மாய் பம்பாயில் இருப்பவளைத்தான் சந்தித்திருப்பதாகச் சொல்லி வீட்டிற்கு அழைத்துப் போய் காபீ கீபீ கொடுத்தார். காபி குடித்த பின்பு, எனக்குத் தங்கையே இல்லை யென்றேன். அவர் ஞாபகப் படுத்திக்கொண்டு என்னைப் பத்து வருஷத்திற்கு முன்னால் மைசூரிலோ மானாமதுரையிலோ சந்தித்ததாகச் சொன்னார். பத்து வருஷத்துக்கு முன்னேகூட மேற்படி ஊர்களுக்குப் போனதில்லை யென்னவே, ரயிலில் சந்தித்திருக்கலாம் என்றார். முதலில் என் காதில் 'ஜெயிலில்' என்று விழவே திக்கெனத் தூக்கி வாரிப் போட்டது. மறுபடியும் தூக்கிவாரிப் போடும்படியாக நடந்த காரியம் "ஹே வேதாள நலங்கிள்ளி எப்போ வந்தாய்?" என்று அழகு ராணி என்னை நோக்கி வந்தாள்.

எழுந்து ஓட முயன்றேன். வாசற் பக்கமாக "அப்பா இவன் தான் என் பல் பதினாறையும் பேர்த்த வன்!" என்றான் தெத்துப்பல்! மூன்றும் முறையும் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?

நான் அப்படியே மூர்ச்சையாக விழுந்தேன். என் காலைப் பெரியவரும் தெத்துப் பல் தலைப் பக்கமும் பிடித் தார்கள். பயல், மறுபடியும் பல்லைக்கொண்டு பதம் பார்த்து விடுவானோ என்று பயம்.

'தெத்துப்பல்' —பெயர் வெங்கிட்டுவா ? மோஹன ரங்கனு ?—இவன் தங்கையாக அந்த சித்தப் பிரமை இருக்கவா வேண்டும் ? என்னைத் தனி அறையில் விட்டு வெளியே போனார்கள்.

நான் ஜன்னல் வழியாகக் குதித்து, மேலே தேனருவியைப் பார்க்க ஓடினேன். என் பின்னால் "என்னருமை வேதாள மகனே நில் நில் என்ற மெல்லியளாளின் மதுர மொழி துரத்தி வந்தது.

ஒரு சுனையின் பக்கம் போய் உட்கார்ந்தேன். தாடியும் மீசையுமுள்ள ஒரு சாமியார் காட்சியளித்தார்: 'சுவாமி தண்ணீருக்கடியில் என்ன ஜலயோகம் செய்கிறீர்கள் ? என்று பேச ஆரம்பித்த போது அதை என் நிழல் என அறிந்தேன்.

இரண்டொரு குரங்குகள் ஷேவ் செய்திருந்தவை தண்ணீர் குடிக்க வந்தவை,...என் நிழலைப் பார்த்து விட்டு கிரீச் கிரீச் சென ஓலமிட்டன. கிரீச்சொலி மலையிலே எதிரொலித்தது.

"வேதாளத்தின் மகனே, நலங்கிள்ளி!" என்ற பயங்கர ஒலி பண்ணிசைத்து வரவே, 'அரோகர மகா தேவா' என்று சுனைக்குள் அப்படியே மூழ்கி விட்டேன்.

இரண்டு குரங்குகள் பரிதாபமாக அலறின. அது விரகத்தின் தாப ஒலியா ? இல்லை என் வேதனையின் ஒலிச் சித்திரமா ?

உனதன்புள்ள
உ. பிரகஸ்பதி

நண்பா,

எனக்காக ஒரு குரல் அழுதிருப்பாய். நான் செத்தே போய் விட்டேன் என்றே, சித்தப் பிரமை பிடித்துப்

பைத்தியமாக அலேகின்றேன் என்றே நினைத்திருக்கலாம். சென்றகடிதத்தில் என்னைத் 'தெத்துப்பல்' ஒரு பக்கம், அவன் தகப்பன் ஒரு பக்கம் பிடித்து தூக்கினார்களே: அறைக்குள் கொண்டு வந்து வைத்தார்களே அதுவரை உண்மை. அதற்கு மேலாக, நான் சுனைக்குப் போனது; சுனையில் அரோகரப் போட்டது எல்லாம் என் சொப்பனம் என்று அறிகிறேன். சொப்பனத்திலே தான் உனக்குக் கடிதமும் எழுதியிருக்கிறேன். இதைவிட ஸ்வாரஸ்யம் என்னவென்றால், இப்பொழுது நான் வெகு நாட்களாக தூக்கமில்லாமல் அவஸ்தைப் படுவதாக ஒரேயடியாக ஸ்வப்பனம் கண்டு கொண்டிருக்கிறேன்!

குற்றாலத்தை ஒரு ஸ்வப்பன உலகம் என்றே சொல்ல வேண்டும்: எது உண்மை, எது பொய் என்ற பாகுபாடு காண முடிகிறதா? நான் அடைபட்டுள்ள இந்த அறைக்குள் சற்று முன் மோகினி வந்தவள் தனக்கு உண்மையில் பைத்யம் பிடிக்க வில்லையென்றும் தனக்குப் பிடித்துள்ளது நான் தானென்றும் சொல்லி என் பச்சாத்தாபத்தைக் கவர்ந்து கொள்ளவே அப்படி நடித்ததாகவும் சொன்னாள். நான் நம்பவில்லை. தன் சோதரன் 'தெத்துப் பல்'லைக் கூப்பிட்டாள். பயல் வந்து பல்லைக் காட்டினான். உடனே 116 பல்லையும் கழட்டிக் கீழே வைத்து விட்டான்! பொய் பற்களைப் பார்த்த பின்பு எல்லாம் வேஷம் நடிப்பு என்று நம்பியாக வேண்டியது தானே!

என் மீது காதல் கொண்ட அச் சொப்பன சுந்தரியின் மாயா நாடகத்தை நான் வியந்தேன். உணர்ச்சிப் பொறிகள் என் சிந்தனைச் சக்கரத்தைப் பின்னுக்குத் தள்ளின. "ஆ...ஹீ...நான் தான் விக்ரமாதித்த ராசாவின் கனகக் குட்டி" என்று ஆர்ப்பாட்டம் செய்தேன். பலரும் பயந்து போனார்கள். சிங்கத்தை அதன் குகை

யிலே தாக்க வேண்டு மென்பது போல அந்த அறையிலே தெத்துப் பல்லையும் மோஹினியையும் பயங்கரமாகச் சிரித்து பயமுறுத்தினேன். எடுத்தார்கள் ஓட்டம்.

எனக்குச் சித்தப் பிரமை—இது அவர்கள் நினைப்பு—நான் நடிக்கிறேன் என்பதை அறியவில்லை. எனக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு, அருவி ஸ்நானம் இதெல்லாம் பன்முறை பய பக்தியோடு நடத்துகிறார்கள். பைத்தியங்கள்! குளிக்கப் போக ரொம்பவும் வசதி—பைத்தியத்தைக் கண்டால் பத்தடி விலகு என்பதாக பயந்தாங் கொள்ளிச் சித்தர் வாக்காம்.

குற்றாலத்திலே வாய்க்கு ருசியாகச் சாப்பாடும், முள்ளம் பன்றிகள் மேலே உராய்ந்து விடாதபடி நாலு பேர் கண் காணிப்பில் மனம் போனபடி ஆறு ஏழு தடவை அருவியில் குளிப்பது மென்றால், அதைவிட வேறு சுகம் என்ன வேண்டும்?

"நான் தான் பட்டி மவராஜனின் மருமகன் வேதாளத்தின் சுவீகார புத்திரன்" என்று உளறுவது என்ன கஷ்டமான காரியமா?

சீசன் முடியுமட்டும் இந்தக் காரியப் பைத்தியத்தைக் கைக் கொள்ளப் போகிறேன்.

வேணும்

உ. பிரகஸ்பதி

[இவ்வருஷம் சீசனுக்கும் உ. பிரகஸ்பதி இதே கதை காலக்ஷேபமாகச் செய்து சுகபோகத்தில் இருக்கிறதாகக் கேள்வி.]

# நிலவும் செலவும்

அப்பொழுதுதான் மழை வெறித்து வானம் வெளிர ஆரம்பித்தது. மேல் பக்கம் மஞ்சணத்தி மரத்திலிருந்து மெல்லிய பூங்காற்று மாடியில் தவழ்ந்தது. சாய்வு நாற்காலியை மொட்டை மாடியில் இழுத்துப் போட்டு சாய்ந்தேன். கீழ்வானம் பாற்கடலாக மாறியது. வெண்ணிலா செம்பொற் குடம் போல் மிதந்தது. திக்குத் திகந்த மெல்லாம் நிலவொளி படர்ந்தது வஸந்த கால வேப்பமரத்தின் பசிய இலைகளையும் சரஞ் சரமாக தொங்கும் பூங் குலைகளையும் ஊடுருவி கிரணங்கள் வந்தன. மழை பெய்திருந்ததால் நீர்த்துளிகள் இலை நுனிகளிலும் குலுங்கி நிற்கும் பூக்களிலும் குண்டலம் போல ஆடிய காட்சி அற்புதமாக இருந்தது, சில நீர்த்துளிகள் தம்முள் சந்திரனை அடக்கி, சந்திரபிம்பமாக பிரகாசித்தன.

இத்தாவள்ளிய நிலவொளியில் மதியிழுந்து ரஸித்துக் கொண்டிருந்தேன். என் மனசு "பாலாழி மீது படர்ந்த வெண்ணெய்—ஒரு பந்தா யுருண்டு திரண்டதுவோ" என்ற அடிகளைச் சொல்லிக்கொண்டிருந்தன. சிரித்த ஒலி கேட்கவே திரும்பினேன். தங்கம், புன் முறுவல் தவழ்ந்த முகத்துடன் அங்கே நின்ருள். பாலைப் பொழியும் நிலவில், என் கோலக்கிளி மொழியும் இருந்து விட்டால்... என் உள்ளக் கிளர்ச்சிக்கு எல்லையுண்டோ?

அவளை ஏறிட்டுப் பார்த்தேன். மலர்ந்து விரியும் மலரைப்போல அம் மாயக்காரி தோன்றினுள். "பலே!

பட்டு ரவிக்கைதான் மல்லிகைப் பூதான். அடிச்சான் தப்பல்! எங்க வந்தாப்போல?" என்று ஆரம்பித்தேன்.

"ஓஹோ, இங்கு வரப்படாதோ?" என்ற பேச்சில் என்ன நளினம்!

"நான் கூடாதென்று சொன்னேன்?" என்றேன். இந்த மாதிரி நேரங்களில் உப்பு சப்பு இல்லாமல் பேசினாலும் அதில் நயம் பொதிந்து கிடப்பதாக எண்ணுகிறோம்.

"நிலவா அடிக்கு?"

"இதுக்குத்தான் நிலவு என்பாங்களோ? ஆமா கையிலே என்னவாம் கொண்டா, பா(ர்)ப்போம்."

ஒண்ணும் பா(ர்)க்க வேண்டாம் சும்மா இருந்தால் போதும் கையை விடுங்க......"

"அடேயப்பா, என்ன கோவம்? முகத்தைக் கொண்டா என்று கொஞ்சுதலாக சொன்னேன்.

"என்னத்துக்காம்........."

"சொல்லணுமோ?........."

"......ஷ்......வரவர ரொம்ப பொல்லாதவங்களாக இருக்கேளே...—ஆமா......"

"ஆமாவா? பொரிமாவா!"

"போதும் போதும் ஆம்பிள்ளைக்கு மானம் வெக்கம் வேண்டாமோ? விடுங்க......" என்று விடுவிக்க முயன்ருள். சிறிது நேரம் சென்றதும் "உங்களுக்கு அந்த ராசாத்தி......"

"அவ(ள்)யாரு ராசாத்தி? சொல்லு"

"நம்ம கல்யாணத்திலே உங்களை வாள நாராலே கட்டலே..."

"ஓகோ...அதுவா சிகப்பா, சுண்டுனு ரெத்தம் வந்திருமே......கிளிபோல் இருக்குமே.........குதிரைக்குட்டி மாதிரி.........உனக்கு சித்திபிள்ளே என்ன தங்கம்? அப்படித்தானே.........என்ன பதிலேக்காணம்?"

சிணுங்கிய பாவனையில் "என்னைத் தவிர எல்லாரும் சிகப் பாத்தான் உங்களுக்குத் தோணுவா......"

"அட புள்ளே! இதுக்கா இவ்வளவு கோவம்...... அடி என் தங்கமில்லே......சும்மா அடையாளம் சொன்ன இப்படிக் கோவிக்கலாமா? கோவத்தைப் பாரு கோவத்தை" என்று கன்னத்தில் லேசாக சுண்டினேன். ஆகா! குழிவிழுந்த அழகைப் பார்த்துக் கொண்டிருக்க முடிகிறதா? மேலும் தொடர்ந்து "சரியம்மா ஆமா ராசாத்திக்கு என்ன? அவ(ள்) வந்திருக்காளா!" என்றேன்.

"ரொம்ப பேசாதீங்க. திருநெல்வேலியான் காதில் விழுந்தால் திருப்பூசை கிடைக்கும்"

"வேண்டாம் உன்னிடமே அடிபட்டுக் கொள்றேன் அவனுரு திருநெவேலியான்?"

"அதுதான் ராசாத்தி மாப்பிள்ளை"

"அப்படிச் சொல்லு, கிளியேன்னுராம் கலியாணம் எப்பம்? அதுக்குத்தான் இப்படி உடுத்தி, அதுக்கு ஒரு நடையும் நடந்து வந்திருக்காயோ? பேஷப்பா, பேஷா! கலியாணத்துக்கும் போற வழிதானே?"

"உம்......உம்......நீங்க சொல்லுவதைப் பா(ர்)த்தா நீங்க வரமாட்டேளோ?"

"கோவிச்சுக்காதே, காலம் கிடக்கிற கிடையிலே, லீவு எடுத்தா அப்புறம் லீவுதான்."

"ஆமா லீவு கிடைக்குமோ கிடைக்காது உங்க அக்கா தங்கச்சி கல்யாணத்துக்கு கிடைக்கும் வீசின கையும் வெறுங் கையுமாகப் போறதுக்கு உங்கதானுதி எதுக்காம்?"

"வேண்டாம் கேளாமல் போயேன்"

"அங்கே போனால் நாலுபேர் திட்ட வேண்டாமோ?"

"ஏன் திட்ட வேண்டும்?"

"ஓகோ! 'ஏன் திட்டவேண்டும்?' எதற்குத் திட்ட மாட்டார்கள்? அன்றைக்கு வாங்கவில்லையா?" என்று நிருத்திக்கொண்டார்.

"எண்ணைக்கு (என்றைக்கு) என்ன வாங்கினாய்?"

"இதுகூட புளிப்போட்டு விளக்கணமா?"

"விளக்கேன் நல்ல விளக்கிச் சொல்லேன்?"

"உப்புப் போட்டு சாப்பிடலே. சித்தப்பா பத்துப் பவுனில் எனக்கு சங்கிலி போட்டாரே? அது ஞாபக மிருக்கோ?" என்று குரல் கோபம் தொனிக்கச் சொன்னாள்.

"இருக்கலாம் அதுக்கு இப்போ என்ன?"

"என்ன அது—க்—கு—இப்போ—என்னவா?"

என்று எழுந்து, மெதுவாக நகர்ந்தாள். கையை எட்டிப் பிடிக்க முயன்றேன். மான் போல் துள்ளி மருண்டு பார்த்தாள்.

சிந்தனையின்றி கீழ்பக்கம் பார்த்தேன் பால் போல் நிலவு எறிந்தது, உள்ளத்தில் வெறி பொங்கவே நாற்காலியை விட்டு நடக்க முடியாதவன் போல நடந்தேன்.

"அண்டிவாராய் நீ யெனினும் வெண்ணிலாவே—இன்னும்

அகன்றெங்கும் போய்விடாதே வெண்ணிலாவே."
இதைப் பாடிக்கொண்டே மாடிக்குள் நுழைந்தேன்.

தங்கம், தங்கமானவள். அவளைக் குற்றம் சொல்ல முடியாது. நேற்று அந்த நிலவின் மோஹனலாகிரியில், என் மனம் தத்தளித்துக் கொண்டிருக்கா விட்டால், தங்கத்தின் மாயப் பேச்சில் மயங்கியிருக்கமாட்டேன். யாரைக் குற்றம் சொல்லுகிறது? தங்கத்தின் மேல் குற்றமில்லை எல்லாம் அந்த நிலவின் விளைவால், பத்துப் பவுன் சங்கிலி வாங்க ஒத்துக்கொண்டேன். இப்படியாக எண்ணங்கொண்டு ஆபீஸ் அடைந்தேன்.

ஆபீஸில் யார் என்க்குப் பத்து ரூபாய் கைமாற்றுக் கொடுப்பார்கள்? அதிலும் இருநூறு...லக்ஷணம் வந்த மாதிரிதான் கேட்காதவனிட மெல்லாம் கேட்டுப் பார்த்தால், அவ்வளவு பயலும் என்னிடம் கடன் கேட்க நினைத்திருந்தான்களாம்? எப்படி யிருக்கிறது, உலகத்தின் போக்கு.

எப்படியாவது சங்கிலி கொடுக்க வேண்டுமே? என்ன செய்வது? செய்கிறதுஎப்படி?...வழிகள்...வழி...

## 3

வழக்கத்தின் பிரகாரம் மாடியில் சாய்ந்து வானத்தைப் பார்த்தபடியே இருந்தேன். தாரகைகள் ஜாஜ்வல்

லியமாய் பிரகாசித்தன. மேல் பக்கத்தில் கூனல் பிறை சென்று கொண்டிருந்தது. சென்ற பௌர்ணமியில் தங்கத்தோடு சரஸசல்லாபமாகப் பேசியது ஞாபகம் வந்தது. பாலிய வயதில் மனதில் எழும் கேளிக்கைகள் வெளியே சொல்ல முடியுமா?

கதம்பத்தின் வாஸனை 'கம்' மென்று அடித்தது. முல்லைக்கு முந்தி மல்லிகையின் மணம் ஓடிவந்தது. சரிதான் தங்கம் வந்துவிட்டாள்! உற்சாகத்தோடு, எதிர் கொண்டு அழைக்க எழுந்தேன். தென்றல் காற்றில் மிதந்து வரும் அல்லித் தண்டுபோல, கொண்டையில் பூக் குலுங்க கன்னங்களில் களிவெறி ததும்ப, பட்டுடுத்தி ஜமாவாக வந்தாள்.

"வாங்கம்மா! வாங்க......ராசாத்திக்கு குழந்தை பொறந்து ஜன்ம நக்ஷத்திரம் கழிஞ்ச பின் வராமல் ஏது வந்துட்டே...ஷ்...நாலு நாளில் வாரவளா?......"

"வரவர......சின்னப்புள்ளையா? வட்டியும் முதலுமா சேத்தா? விடுங்க......விடுங்க......" என்று விடுவித்த போது என் கையில் அவளுடைய சங்கிலி பட்டது. "ஏது புதுசாயிருக்கே?" என்றேன்.

"நீங்க கொடுத்தது பத்துப்பவுன்........என் சங்கிலி ஒம்பது பவுன்......அதுனால், அதை ராசாத்திப் போட்டுட்டு,...புதுசை நான் போட்டுக் கொண்டேன்......அட எழவே என் இப்படி இரண்டாட்டில் ஒரு ஆடு மாதிரி..."

குழறியபடியே......"இது......எருமைல்"

* * *

மனிதன் எவ்வளவு பலவீனம் உள்ளவன் என்று தெரிந்தேன். ஏன்? அன்றைய நிலவும், மல்லிகைப் பூவின் வாஸனையும் என் உடம்பை அப்படி குலுக்கியிருவிட்டால் நான் நிஜச் சங்கிலி வாங்கித் தருவதாக வாக்களித்திருக்க மாட்டேனல்லவா?

# எமனுக்கும் எமன்

## 1

நைமிசாரண்யத்தின் மௌனத்தைக் கலைத்தது, திரி ஜடாவல்லபரின் ஆச்ரமத்திலிருந்து எழுந்த ஒரு பெண் குரல். ரிஷி பத்னிகள் எவ்வளவு தூரம் எதிர்த்து உரத்த குரலில் பேசுவார்களோ அதே சுதியில் ரிஷி பத்னி ஹேமவதி "மார்க்கண்டேயனும் மார்க்கண்டேயன்! அந்த மிருகண்டு முனிவரின் தபோ வலிமையை விட, நம்முடைய தபோவன்மை தாழ்வானதா? நம்முடைய ஆச்ரமத்தில் ஆறு புலிக்குட்டிகள் காராம் பசுவில் பால் அருந்தவில்லையா? நாலு சர்ப்பங்கள் வாழ்வதும் அறுபது புல்வாய் எண்ணூறு மான்கள் இவை இரண்டு புலிக் குட்டிகளுடன் விளையாடுவதும், கண்ணில் பட வில்லையா? மிருகண்டு முனிவரை விட நாம் எதில் தாழ்ந்தவர்கள். சொல்லுங்கள் என்றாள்."

திரிஜடாவல்லபர் கண் திறந்து பார்த்தார்.

இக்குரலின் இனிமை கேட்டு தாமரைத் தடாகத்தில் தண்ணீர் அருந்திய புலியும் பசுவும் ஏறிட்டுப் பார்த்தன. கருநாகத்திற்கு, தண்ணீர் எடுத்துச் சென்ற தேரை அப் படியே தயங்கித் திரும்பியது. பசுவின் பால் குடித்த புலிக்குட்டிகள், குடித்த படியே திகைத்து நின்றன. தபோசிரேஷ்டரும் முனிபுங்கவருமான திரிஜடாவல்லபர் தண்டத்தில் சாய்ந்த வண்ணம் தாடியை உருவிக் கொண் டிருந்தவர் திடுக்கிட்டார்.

நைமிசாரண்யத்தின் ஜீவராசிகள் எல்லாம் ஹேமவதியின் குரலோசையில் கட்டுண்டன. திரிஜடா வல்லப முனிவர் 'பிரிய பத்னி நீ சொன்ன படி நான் 108 வண்டி ஆகிற் கட்டையும் 1008 வண்டி சமித்களும் 10008 தோன்னை ஆவின் நெய்யும் ஆகுதி செய்கிறேன். ஆயினும் நம் புத்ரன் நாளை உயிர் துறப்பது உண்மை அதை மாற்ற முடியாது' என்றார்.

அசைவற்ற அசோகுபோல் நின்ற அவர்கள் அருமந்த புத்ரன் 'பெற்றோர்களே! உலகம் மாயை உபநிஷத்துக்களும் வேத வேதாகமங்களும் தன் மனசிற்குப் பிடித்த பொருளை கடவுளுக்கு ஆகுதி செய்யச் சொல்லுகிறது. நான் தான் தங்கள் செல்வம். என்னை நைவேத்யம் செய்யுங்கள்' என உள்ளம் கனியச் சொல்லி அடியற்ற மரம் போல் விழுந்து நமஸ்காரம் செய்தான்.

ஹேமவதி 'பெற்றமனம் பித்து; பிள்ளைமனம் கல்லு. நாளை நீ இறப்பதை நான் சகிக்க மாட்டேன். உன் தந்தையின் தபோ வல்லமையால் உன் உயிரை மீட்க வேண்டும். ஆ! ப்ராண நாதரே செவி சாயுங்கள்' எனவே, திரிஜடாவல்லபர் இரு காதுகளையும் பொத்திக் கொண்டார்.

'அம்மா முற்றும் கற்ற கலா வல்லவரும், நைமிசாரண்யத்தின் தபோசிரேஷ்டரும் தீர்க்க தரிசியுமான என் தந்தை என் உயிரை மீட்கமாட்டார். மேலும் வாழ்க்கை ஒரு புஷ்பம். அது வாடித்தான் போகும். நான் நாளை இறப்பேன்' ஹேமவதி துடி துடித்தாள். திரிஜடா வல்லபரின் தாடி நிறைந்த அம் முகத்தில் புன்னகை தவழ்ந்தது, மேகத்திடை நிலவிய சந்திரனை நினைவூட்டியது.

"பெற்றோர்களே! என் ஆயுள் நாளை முடிவுறுகிறது. நான் எமனையே தேடி அவனிடம் என் ஆயுளை ஒப்படைத்

துவிட்டு வருகிறேன்" என்றவன் இருவரையும் நமஸ்காரம் செய்து கம்பீரமாக நடக்க ஆரம்பித்தான்.

திரிஜடாவல்லபர், வாய் திறந்து "புத்ர, நீ வீரவாழ்வு நிறைந்தவன். அதுதான் முனி புதல்வன் கடமை" என்று மலர்ந்ததும்...ஹேமவதியின் அலறல் அலைகள் புறப்பட்டதும் சரியாயிற்று.

"ஹா ஆச்ரம மான்களே! சண்பகக் காடுகளே! அசோகு மரங்களே, காராம் பசுக்களே, தாதுகு சோலைகளே, என் புத்ர சோகத்தைக் கண்டும்......"

"பிரிய பத்னியே சோகமடையாதே வாழ்வு சகடம் போன்றது."

இரண்டு நாழிகைக்குப் பின் நைமிசாரண்யத்தில் அமைதி நிலவிற்று. ஆச்ரம மான்கள், புலியில் பால் குடித்தன. பாம்புக்குத் தேரை தாலாட்டியது. முனி பத்னிகள் சமித்து சேகரிக்கலாயினர்.

## 2

நைமிசாரண்யத்திலிருந்து புறப்பட்ட முனி புதல்வன் நீலகண்டன், வனம் வனாந்தரம் தாண்டி, சம்யமனி என்னும் யமலோகப் பட்டணத்தின் வாசல் வழியாக வந்து கொண்டிருக்குங் காலை, விலாசம் தெரியாது ஒரு வீட்டைத் தட்டினான்.

காலனும் அவன் மனைவியும் அப்போதுதான், அபிப்ராயபேதமாக இருக்கிறார்கள்.

காலன் சோர்வாக "என்ன வேலை.....நம்ம வேலை உனக்கு என்ன தெரியுது?" என்றான்.

கிண்டலாக "என்ன வேலை?" என்றாள் மனைவி.

காலன் "எனக்கு வேலை ஆளைக் கொல்லறது. நீ பேச மாட்டாயா? வேலை பார்த்துப் பார்த்து சாகிறாப் போல வருது. உன் சொற்படி கேட்க முடியாது" என்று சொன்னான்.

விஷயம் என்னவென்றால், தூதனை நாட்டியம் பார்க்க அழைத்தாள். வேலை பார்த்த அலுப்பால் அவன் மறுத் தான்.

"காலனை வேலைக்கு அனுப்புகிறதுதானே. உங்களுக்கு வேலை அட்டவணை யார் தயாரிக்கிறது?"

"அந்த சித்ரபுத்ரன்தான். எனக்கு அதிகமாகப் போடுகிறான். தூதனும் ஏழு நாள் ஓய்வு எடுத்திருக்கிறான்."

நீலகண்டன் கதவைத் தட்டினான். காலனுக்கு கை கால் நடுங்கிற்று. எமனிட மிருந்து என்ன உத்தரவை ஔதும்பரன் கொண்டு வந்திருக்கிறானோ!

காலன் மெதுவாக எட்டிப் பார்த்தான். அவன் யாரோ என்ற தைரியத்தால், "டேய் உனக்கு என்ன வேண்டும்?" என்றான்.

நீலகண்டன் "எமன் வேண்டும்?" என்றான்.

"இங்கே யில்லை. அதோ ஒரு யோசனை தூரத்திற்கு அப்பால் தெரிகிற பளிங்கு மாளிகை எமனுடையது, போய்வா" என்று காலன் சார்பாக மனைவி சொன்னாள்.

நீலகண்டன் எமனைப் பார்க்க உற்சாகமாக நடந் தான். அவன் நடையின் அழகை காலனோ, அவன் மனைவியோ பார்க்காமல் மறுபடியும் தர்க்கம் செய் தார்கள்.

"உங்களுக்கு வேலை...வேலை! வேலையைக் கட்டிக் கொள்கிறதுதானே. என்னைக் கட்டிக் கொண்டீர்களா? எமன் வேலையைக் கட்டிக் கொண்டீர்களா?"

இந்தக் கேள்விக்கு காலன் பதிலை யோசித்துக்கொண்டிருந்தான். தெருக்கதவு தட்டப் பட்டது.

"மகராஜ்!" என்ற அக்குரல் கேட்டதும், காலனுக்கு கை கால் உதறல் எடுத்தது. ஔதும்பரன் உள்ளே வந்தான்.

"மகாராஜ்! தங்களை சித்ரகுப்தர் கையோடு அழைத்து வரச் சொன்னார். ரொம்ப அவசரம்."

"அவர் வரமுடியாது என்று போய்ச் சொல். இதோ இந்த ஏட்டைக் கொண்டுபோ. இதில் ஒரு கையெழுத்துப் போடுங்கள்" என்று எழுத்தாணியை நீட்டினாள்.

காலன் அதில் எழுதியிருந்ததைப் படிக்க முயன்றான் தேவி ஒரு முறைப்பு முறைக்கவே, படிக்காமலே அதில் கையெழுத்திட்டார்.

இரண்டு நாள் ஓய்வு கேட்டு எழுதப்பட்ட ஓலையை எடுத்துக்கொண்டு ஔதும்பரன் ஓடினான். காலன் முகத்தில் பயத்தின் சாயை விலகி பரிதாபத்தின் நிழல் படர்ந்தது.

"எமன் என்னைக் கோபித்துக் கொண்டால்?"

"உயிர் என்ன வெல்லமா? வாருங்கள். இன்று மன்மதன் மேற்பார்வையில் சித்ரலேகையின் நடனமாம். எங்கே தெரியுமோ?"

"எங்கே?" என்றான் உத்சாகமாக காலன்.

"இந்திர சபையில்!" என்று சொன்னவள், அலங்கரிக்கப் போய்விட்டாள்.

"நான் நைமிசாரண்யம் வரை போய் வந்துவிடுகிறேன். அதற்குள் நீ அலங்காரம் செய்து முடி......"

"ஓகோ. அதுதான் முடியாது. இந்த இடத்தை விட்டு இங்கே அங்கே அசைய முடியாது. கூடவும்

கூடாது தெரிந்ததோ." என்றவள், தன்னறைக்குள் நுழைந்தாள்.

காலன், இன்னும் மூன்று நாழிகை நேரம் அவளைப் பார்க்க முடியாது. ஆகவே, சந்தோஷம் தாங்காமல், முந்திய நடனத்தில் கேட்ட ஒரு மெட்டை விசில் அடித்துக்கொண்டிருந்தார்!

# 3

யமபட்டணத்தில் அந்த ஒரு யோசனை தூரம் நடந்து, நீலகண்டன் பளிங்கு வாசல்முன் வந்து நிற்கவும், சாமளை தேவி பூக்காரன் வரவை எதிர் பார்த்து எட்டிப் பார்க்கவும், ஒன்று யிருந்தது.

"யாரப்பா நீ......"

"எமன் மாளிகை......உங்களைப் பார்த்தால், எமன் வீட்டு வேலைக்காரிபோல்......"

"அடேய் பதரே. நான்தான் அவருக்கு எமன்!"

"ஓகோ பத்னியா. உங்களைப் பார்த்தா பசி தீரும்."

"பிச்சைக்காரப் பயலே!......"

"இல்லையம்மா. நான் நைமிசாரண்யத்தின் சிறந்த தபோ சிரேஷ்டரும் முனிபுங்கவரும் உபநிஷத்துக்களின் உரையாசிரியரும்......"

"டேய் வாயை மூடு"

"பல பாஷ்யங்களின் உரையாசிரியருமான"

"போதும், போதும்."

"ஹேமவதி என்னும் மாது சிரோன்மணி என்பாளுடன் இல்லறம் நடாத்தி அறவோர்க்கு அளித்து, இரப்போர்க்கு ஈந்து, புகுந்தோர்க்கு......"

"டேய் உன் புராணத்தை நிறுத்து. நீ சும்மா பிச்சை கேளாதே. பின் பக்கத்து மரகதக் கொட்டலில் நிற்கும் எருமைக் கடாவைக் கொண்டுபோய் குளிப்பாட்டி விட்டு வா. சாதம் போடுகிறேன்."

நீலகண்டன் மூளையில் மின்னல் போல ஒரு யோசனை பிறந்தது. அந்த எருமைக் கடாவை ஆற்றுக்கு கொண்டு போய்விட்டால் எப்படித் தன் உயிரை வாங்க முடியும்! ஆனாலும் அவனுக்கு ஆச்ரம பிராணிகளை தவிர மற்றவை மேல் நம்பிக்கை கிடையாது.

"மாடு முட்டுமோ, அம்மா?"

"சாது. பசுபோல இருக்கும்"

"எருமை என்கிறீர்களே அம்மா."

"ஆமாம்."

"இப்போ பசு என்கிறீர்கள்! எதைக் குளிப்பாட்டு கிறது? எருமையையா? இல்லை பசுவையா?"

"அடே முனிபுதல்வா. அந்த எருமைக்கடா பசுப் போல இருக்கும். சுருங்கச்சொன்னல் ஒரு சாது போன்றது. போய் வா" என்ருள்.

நீலகண்டன் மரகதக் கொட்டிலுக்குள் நுழைந் தான். பவளங்கள் பதித்திருந்த தரையில் முத்து வடத் தால் கட்டப்பட்டிருந்த கடாவை அவிழ்க்க, அது ஓட்டிக் கொண்டு சென்றது! (மாடுமேல் அவன் இருக்கவே ஓட்டிச் சென்றதென்றேன்.)

சாமளாதேவி, பூக்காரனை எதிர்பார்க்க, வேலைக்கார ஔதும்பரன் வந்தான், நமஸ்காரம் செய்துகொண்டே.

"எமராஜா வருகிருரா, இல்லையா?"

"இல்லை."

"இல்லை யென்று சொல்லச் சொன்னாரோ?"

"இல்லை."

"இல்லை, இல்லை, நீ உடனே போய் என்ன சொல்ல வேண்டும் தெரியுமா? இன்று அப்சரஸ் சித்ரலேகை நடனமாம். உடனே போக வேண்டுமென சொல்."

"இதோ போகச் சொல்லுகிறேன்."

எள் என்பதற்குள் எண்ணெயாக நிற்கும் எமவேலைக் காரன் அல்லவோ. நகர்ந்துவிட்டான். சாமளை ஒரு அதட்டல் போட்டு "டேய் ஔதும்பரா நீ மடையன். அவரைத் தனியாக போகச் சொல்லாதே. போகவேண்டு மெனச் சொல்லி, இங்கே வரச்சொல்" என்று கட்டளை யிட ஔதும்பரன் மறைந்தான்.

## 4

இப்பொழுது கந்தமாதான மலைச்சாரலில் உள்ள சம்பு நதியின் கரைக்குச் செல்வோம்.

மாலை இளவெயில், தங்கம் மூசைத் தங்கம்போல் உருகி ஓடுகிறதோ என்று ஐயரும்படியான அந்த நதியின் தண்ணென்ற அலையில், எருமைக்கடா ஆழ்ந்து கிடக்கிறது. நீலகண்டன், நதிக்கரையின் லாவண்யத்தை அள்ளி அள்ளிப் பருகி பிரகிருதியின் லீலைகளை வியக்கிற சமயம், பெண்ணுருவம் வருவதை கனவென நம்பி இருந்தான். அவளுடைய வார்த்தைதான் அவனுக்கு அது நதிப் பிர தேசம், தான் நீலகண்டன் என்பதை நினைவுறுத்திற்று.

அவ் வார்த்தை "ஹே திருடா!" என்பதுதான்.

நீலகண்டன் ஆச்ரமவாசி ஆகையால், தொனி பேதங் களையும், சிறப்பியல்புகளையும் அறிவதில் சமர்த்தன்.

"ஆஹா! குயில்கூட வெட்கித் தலைகுனிய வேண்டியது தான். அம்மணி" என்று தயங்கினான்.

"தங்களைப் பார்த்தால் பரம சாதுவாகத் தோன்று கிறது. பெரிய......பக்காத் திருடனாக இருக்கிறீர்களே."

அவள் அருகில் வந்து நீலகண்டனை பாதாதிகேசம் வரை, ஒரு முறையும் கேசாதிபாதம் வரை இரு முறை யும் பார்த்தாள். இதையே நீலகண்டனும் செய்ய, இரு வர் கண்ணும் சந்திக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது.

"பெண்ணே உன் முகமானது 17 சந்திரனுடைய சோபை நிறைந்தது. கரிய, நெடும், சுருள், அகிற் கூந்தல், மேகங்களைவிட கருப்பாகவும் கண் கடலைவிட ஆழ மாகவும்."

"இல்லை அகலமாகவும்."

"அகலமாகவும், வில், வாள்......"என்று திக்கினான்.

"கயல் மான் இது போன்று இருக்கிறதாக்கும். அதுசரி அந்த எருமையை ஏன் திருடினீர்கள்?"

"என்ன அருமையான குரல்! போன ஜன்மத்தில் எந்தக் கோயிலுக்கு தேனபிஷேகம் செய்தாய்! நீ ஒரு பெண்ணோ? இல்லை கற்பகத்தின் பூங்கொம்போ, பவளக் கொடியோ? ஓடாத இளமானோ? வாடாத பூவோ. காயாத கனியோ?"

"உம் கண்களை வைத்தியரிடம் காட்டும். என்னைப் பார்த்தால் பூப்போலவா இருக்கிறது?"

"மான் மட்டுமல்ல. மயிலின் ஜாஜ்வல்லியப் பிர காசமும்."

வாயை அடக்கிப் பேசுங்கள்"

“உன் வார்த்தைகள் என் மனசைப் புண்படுத்தி விட்டன.” அவன் குரல் தழதழத்தது. முகம் சுருங்கிற்று. கண்ணில் கண்ணீர்த் துளிகள் ததும்பின.

கலங்கிய கண்களை, அவள் பார்த்தாள். இரக்கம் தோன்றவே, “ஐயோ என் எண்ணம் அதுவல்ல. கேலியாகச் சொன்னேன். அழாதீர்கள். கண்ணின் நீரோட்டத்தை அப்புறப் படுத்துங்கள்” என்று கெஞ்சினாள்.

“தாங்கள் துக்கப்படுவதைக் கண்டு தங்கள் கன்னத்திலுள்ள உவர்க் கோடுகளைப் பார்த்து என் நெஞ்சு என்னமோ செய்கிறது. கொஞ்சம் சிரிக்க மாட்டீர்களா?” என்ற அவள் குரல், அவன் இதய வீணையை நிரடுவதுபோல இருந்தது.

வீணையை மீட்டினால் நாதம் வரும். அதுபோலத்தான் வந்தது. ஆனால், இன்ப ஸ்வரங்களுக்குப் பதிலாக துன்ப ஸ்வர வரிசைகள்!

“சாகப் போகிறவன் சிரிப்பானா?”

“புதிர் ஏன்? யார் சாகப் போகிறது.”

“நான்தான். அதோ பார் அந்த அஸ்தமன சூரிய சோக நாடகம். அதைப்போல் இன்று என் வாழ்வு முடியும். நான் எப்படிச் சிரிக்க?”

“நீங்களா? சாவதா? ஒருக்காலும் இல்லை. நம்முடைய காதலை.”

நீலகண்டன் உடம்பில் ஏதோ தாக்குவதுபோல் உணர்ந்தான். (மின்சார சக்தி எனலாம். அது அந்தக் காலத்தில் கண்டுபிடிக்க வில்லையே!) ஏதோ உணர்ச்சி முகத்தில் அசட்டை அப்பியது. குரலை, நாவைத் தளர வைத்தது.

"ஆ காதல்! காதல் என்றதும் மைத்ரேயின் நினைப்பே வருகிறது."

"யார் அவள் மைத்ரேயி? நம் காதலை யார் வந்தாலும் பிரிக்க முடியாது."

"எமன் வந்தால் கூடவா?"

"எமன் என்றால் பெரிய மம்மாவோ?"

"நம் காதலை (திகைத்து) அவள் பெயர் என்ன?"

"யார் பெயர்?"

"காதல் என்றதும் நினைப்பு வந்ததே."

"நைமிசாரண்யத்தின் தபோவனங்களில் ஒன்றாகிய வடபாரிசத்தில் உள்ள......மைத்ரேயி என்பாள்."

"ஆனைப்பட்ட மைத்ரேயி வந்தாலும் நம் காதலை—ப்—பி-ரி-க்-க-முடியாது!"

"மைத்ரேயி, இங்கு ஏன் வர வேண்டும்?"

"தங்கள் அருகில் நான் இருக்கும் வரை வர மாட்டாள்."

நீலகண்டன் சிரித்தான். அவனுக்கு அந்த ஒலிகளே அமிர்தமாக இருந்தன.

"வரமாட்டாள் என்று சொல்வதற்கு நீ யார்?"

"நான்...நான்தானே தங்கள் காதலி!"

"காதலியா. உன்னை திரஸ்கரிக்கிறேன்."

அப் பெண் மான் போல மிரண்டாள். அவள் முகத்தில், ஒரு ஆச்சரியக் குறியும், கேள்விக் குறியும் போரிட்டன.

"நமஸ்கரிக்கிறேன் என்று சொன்னீர்கள். அது பாவம். என்னையா நமஸ்கரிக்கிறீர்கள்."

" இல்லை. திரஸ்கரிக்கிறேன்."

" அப்படி என்றால் என்ன அர்த்தம் ? "

" உன்னை வெறுக்கிறேன். அதாவது திரஸ்கரிக்கிறேன்."

" ஏனும் ? "

" சாவுக்கு முன்னால் ஊசலாடும் எந்த மடையனும் ஒரு பெண்ணின் காதலை ஏற்கலாமா ? "

" கூடாது ? "

" நான் மடையனா ? "

" பதில் இல்லை. நீலகண்டன் மீண்டும் சொன்னான் நான் மடையனா ? " என்று. அவள் சிலையானாள்.

" சாகப் போகிறவன், ஆகவே மீண்டும் திரஸ்கரிக்கிறேன்."

" என்ன வார்த்தை? 17 சந்திரனுடைய சோபை நிறைந்த முகத்தைக்கூடவா வெறுக்கிறீர்கள்."

" ஆமாம்."

" மேகங்கள்...போன்றதும் இன்னம் அகில் வண்டு போன்றதுமான கூந்தலைக்கூட வெறுக்கிறீர்களா ? "

" ஆமாம்."

" காதல் பிரழ்கின்ற இக் கண்கள் கடலினும் பெரிய இக் கண்களையும் கயல், மான், வேல், வில், வாள் போன்ற இந்த இரு கண்கள் மீதாவது தங்கள் இரக்கச் சித்தம் தோன்ற வில்லையா ? "

அவள் குரலில் எவ்வளவோ சோகம் தொனித்தது. நீலகண்டன் செவியாரக் கேட்டு பதறவில்லை. பதில் சொல்லுகிறானே படுபாவி !

"தோன்றவில்லையே. இம் மலர்க் கரத்தையும், பவள வாயையும் அமிர்தகானம் போன்ற உன் பேச்சையும் வெறுக்கிறேன்."

## 2

'இதோ பாருங்கள். நாம் நிற்குமிடம் நதிக்கரை சம்பு நதியின் சாட்சியாகச் சொல்லுகிறேன். என் காதல், நதிப் பிரவாகம் போன்றது இதை அழிக்க முடியாது.'

நதியை ஏறிட்டுப் பார்த்தான். தங்கத் தகடு உருகிப் போவதைப்போல இருந்தது.

'அடாடா! நதிப் பிரவாகம். அதன் சுகத்தை எமன் எருமை யல்லவா அனுபவிக்கிறது.' அவன் முகம் மலர்ந்தது.

'உங்கள் முகத்தில் தேஜோ மயமான ஜாஜ்வல்லிய ப்ரகாசம் ஜொலிக்கிறதே.'

'பெண்ணே, விளக்கு அணையுமுன் பிரகாசமாகத் தான் எரியும்.'

'விளக்கு? விளக்கைப்பற்றி நாம் பேசவில்லையே விளக்கு ஏன் அணைய வேண்டும்.'

'என் வாழ்க்கையாகிய விளக்குபற்றிச் சொல்ல வந்தேன்.'

'அது அழியா விளக்கு. உங்கள் முகத்தில் தேஜோ மயமான அழகு என்னைக் கிரங்க வைக்கிறது.'

'உன் மூக்குத்தியின் ஒளி வர்ணத்தைவிடவா?"

அவள், பார்த்தாள் அவனை. 'சாகப்போகிறவர்கள் இப்படிப் பேசலாமா? ஓகோ எனக்குத் தங்கள்

இதயத்தில் இடம் கிடைத்துவிட்டது!' என்று கை கொட்டி நகைத்தாள்.

'இடமில்லை' என ரத்னச் சுருக்கமாகச் சொன்னான்.

'இல்லையென்றால் இதயம் இல்லையா; இடமில்லையா? இருந்தால் அந்த இதயம் ஆச்ரமப் பெண்...அவள் பெயர் சைத்திரியோ வல்லி.

குறுக்கிட்டு, 'சைத்யோவல்லி இல்லை மைத்ரேயி' என்று திருத்தினான்.

'ம்மைத்ரேயிக்குத்தான் இடமா எனக்கு ஒரு பாகம் இருக்கட்டும்'

இல்லை. மற்றோர்...என எதையோ விழுங்கியவன் போல் விழித்தான்.

'இன்னொரு பெண்ணா? சிவ சிவா...' என ஆவலும் திகைப்பும் சேரப் பார்த்தாள். அவன் முகச்சாயை துக்கத்தின் பிறப்பிடமாக இருக்கவே, அவள் அவன் வார்த்தையை செவிமடுத்தாள்.

ஐயோ! என் இதயத்தை வியாதியல்லவா பற்றிக் கொண்டிருக்கிறது.

'இருதய வியாதி தானே! வாருங்கள் தன்வந்திரியிடம் போவோம்.'

'துன் மந்திரியா? அவன்யார்? என வெகு பரிவாகக் கேட்டான். குரலில் வாத்ஸல்யம் தொனித்ததா; வாக்குச் சாதுர்யம் தொனித்ததா?

கலகலவென நகைத்தாள். அது முற்றிய மாதுளம் பழத்திலிருந்து முத்துக்கள் உதிர்வது போலிருந்தது. 'துன்மந்திரி இல்லை தன் வந்திரி தேவ வைத்தியர்' என்றாள்.

நீலகண்டன் யோசனையில் ஆழ்ந்தான். ஆழ்ந்து கிடக்கும் எருமையை என்ன செய்கிறது. அதை அவளிடமே கேட்டான்.

'எருமை மாட்டை என்ன செய்கிறது? அவரிடம்— தன்வந்திரியிடம் கொண்டு போகலாமா'

அவள் சட்டென 'மிருக வைத்தியர் அல்ல' என முல்லை முறுவல் பூத்தாள். நீலகண்டன் அப்படியானல், எருமையை என்ன செய்கிறது என்று கேட்டான்.

அவள் திகைக்கவில்லை பண்ணினுமினிய குரலில் கருப்பா...ஆ...ஆ...என்ருள். நீரிலிருந்து எருமையும் தாமரை மொட்டு கதிரவனுக்குத் தலை தூக்குவதுபோல தலை தூக்கியது. நீலகண்டன், அவள் வார்த்தையில் தன்னைப்போல, எருமை அதிலும் எமனின் கடா மயங் கியதைக் கண்டு பிரமித்து நின்ருன்.

'கருப்பனு! அது யார்?'

'எருமையின் பெயர் கருப்பன்'

'அதெப்படி கருப்பன் என்று தெரியும்?'

'அந்த எருமையின் அடையாளம் கண்டுதான் உங்களை சந்தித்தேன்.'

ஒருதரம் எருமையைப் பார்த்தான். ஸ்படிகம்போல் ஓடிய நதியில் தன் நிழலையும் நீலகண்டன் பார்த்தான். அப்போ, கீழ் பக்கம் நிலா உதயமாவது போல அவன் கண்ணிற்பட்டது.

'உன் முகத்திற்குப் போட்டியாக சந்திரோதயம்.'

'அது நிலா அல்ல. எமப்பட்டணத்தின் விளக்கு.'

'பெண்ணே உன் அன்புக்கு அடிமைப்பட்டேன். ஆனல் என் உயிர் பிரிந்துவிடும். எட்டி நில்.'

'எமன் வந்தாலும் நம் உயிரைப் பிரிக்க முடியாது.'

'நம் அல்ல. என் உயிர்.?

'ஓருயிர் ஈருடல் என்றே காதல் இலக்கணம். காதலரே தங்கள் பெயர் ?'

'நீலகண்டம்.'

'ஆஹா. எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது. என் பெயர் தெரியுமோ?'

'எவ்வளவு அமிர்தமாய் பேசுகிறாய்?'

'அதுதான் என் பெயர்.'

'எதுதான்.'

'சற்றுமுன் சொன்னீர்களே?'

'நீலகண்டம் என்றேன்; உன் பெயரும் நீல கண்டமா? சிவ சிவா.'

'என் பெயர் அ-மி-ர்-த-ம்!'

அமிர்தமா? நெஜமாகவா?"

அதற்குமேல் பேசமுடியாமல் தத்தளித்த சமயம் எருமைக் கடா சப்தம் கொடுத்தது.

'பெண்ணே, போவோமா?'

'இதை ஓட்டிக்கொண்டே அரண்மனை வைத்தியரைப் பார்க்கச் செல்வோம்.'

'ஏன்?'

'தங்கள் இருதய வியாதி.'

நீலகண்டம் ஒரு விநாடி திகைத்து நின்றான். புரு வத்தை நெளித்து "யாருக்கு இருதய வியாதி. உனக்கா அல்லது இந்த எருமைக்கா?

'இரண்டுபேருக்குமில்லை. தங்களுக்குத்தான்.'

'எனக்கா?...எனக்கே எனக்கா?' என சிரிப்பாய் சிரித்தான். சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி கலந்தாற் போல, அமிர்தமும் சேர்ந்து கொண்டாள். இருவரையும், பார்த்துக்கொண்டு எமவாகனம் நடந்தது.

பேச்சு சுவாரஸ்யத்தில் எமவீதியின் வழியாக வந்து கொண்டிருந்தார்கள். நந்திதேவர் ஒரு வழியாக, டமாரம் அடித்தார். நீலகண்டன் காதில் விழவே யில்லை.

'இந்திர சபையில், நடனம். சித்ரலேகை அப்ஸரஸ் ஆட்டம். நடன அரங்கு செல்வோமா? மன்மதன் மேற் பார்வையில் நடக்கிறது.'

'மன்மதனா? நீ மன்மதனைப் பார்த்திருக்கிறாயா? எப்படி இருப்பான்?'

'என் மன்மதனைப் போலிருப்பான், ஆனால் உன்னை விட அழகாக இருக்கமாட்டான்.'

பெரிய உண்மை அருளும் முனிவன்போல, அப்படி யானால் 'நீ எனக்கு ரதி' என்றான். இதில் தவறு இல்லை. அவள் அவனைப் பார்த்த பார்வை, சிவபெருமான் மன் மதனைப் பார்த்தமாதிரி இருந்தது. 'என்ன சொன் னீர்கள்?' என உறுமினாள். நீ எனக்கு ரதி என்றேன்.

'ரதியா? ரதிக்குப் போனமாதம் அம்மை போட்டி ருந்ததே. எனக்கும் போட்டிருக்கிறதோ?' என நாலெட்டு நடந்தாள். ஓடிப்போய் எதிரே நின்றான்.

'நீ ரதி இல்லை' என்றான். அவள் புன்முறுவல் பூத்தாள். மாட்டின் மா மா என்ற சப்தம் தொடர, இரு வரும் சிறிது தூரம் சென்றார்கள்.

'இங்கே நில்லுங்கள், நான் என் தோழியைப் பார்த்து விட்டு வருகிறேன்,'

'எனக்குப் பயமாக இருக்கிறது'

'இந்த மோதிரத்தை வைத்துக் கொள்ளுங்கள்...... அடடா இதென்ன உங்கள் விரலில்! மோதிரமா?'

'சங்கு மோதிரம். இதையேன் கழட்டுகிருய்?'

'தேவலோகத்தில், லக்ஷ்மிதேவி ஒருத்திதான் சங்கு மோதிரம் போட்டிருக்கிருள். நானும் போட்டுக்கொள் வேன்,' என்று நாணம் தொனிக்கச் சொன்னுள்.

'இந்தக் கோமேதக மோதிரம் எனக்கே, எனக்கா?'

ஆமோதிப்பதை 'உம்...உம்' எனச் சொன்னுள் அப்பால், 'மோதிரம் மட்டுமல்ல; மோதிரத்தின் சொந்தக் காரியான நானும் சொந்தமே' என்று ஒரு மாளிகைக்குள் நுழைந்தாள்.

நீலகண்டம் அமிர்தம் என்ருன். மேலே, பூச் சொறியும் நிலாப்போன்ற எமபட்டணத்தின் வான விளக்கின் பிரகாசம். குளுகுளு, தென்றல் வாடை. கையில், எமனின் வாகனம் பிடித்து, அந்த மாளிகை வாசலில் நின்ருன்.

## 5

சாமளாதேவி, பூக்காரன் வரவை எதிர்பார்த்தாள்.

அவன் வருமுன்னே பூவின் வாசமும், அதற்குப் பின்னுல் எமனின் பிரவேசமும் ஆயிற்று. தாமரை முகத்தை கடுகடுப்பாக வைத்தபடி இருக்கவே, யமன் என்னவாகுமோவென பயந்து, 'ப்ரிய சகியே' என்ருன்.

சாமளா மனம் இளகிற்று!

'நாதா, இந்திரசபை நடனத்திற்குப் போவோமா?' என்றாள்.

'இதோ உத்தரவு தேவி.'

இந்த சமயம் எம கிங்கரன் ஔதும்பரன் வந்து 'மகராஜ்!' என்றான். அவன் கையில், ஓலை இருந்தது. சாமளை உள்ளே சென்றாள்.

எமன் பார்த்து 'யாருக்கு ஓலை?' என்றான்.

'தங்களுக்குத்தான்.'

'டேய் எனக்கு ஓலை ஏதுடா? நான் சாகாவ்ரம் பெற்றவன்.'

'காலதேவர், தங்கள் திருமுகத்திற்கு கொடுத்த ஓலை.'

சித்ரபுத்திரன் மெதுவாகத் தலையைநீட்டி நமஸ்காரம் செய்தார். சாமளை தேவி, தன்னறைக்குள் சிங்காரம் செய்துகொண்டிருந்த வாசனைத் திரவியங்கள், பூக்களின் பரிமள வாசனை கம்மென உலாவிற்று.

'எஜமான் காலதேவர், இன்று பொழுதுசாய வீடு சென்றவர், ஓய்வுச் சீட்டு எழுதி அனுப்பிவிட்டார். இன்றைய வேலை இன்னும் பாக்கி இருக்கிறதே........'

'காலன் இல்லாவிட்டால் தூதன் எங்கே?'

'அவருக்கு ஓய்வு கொடுத்திருக்கிறீர்கள். காலதேவர் இருநாள் ஓய்வு கோருகிறார். இன்றைய வேலை பாக்கி இருக்கிறது. ஆகவே தாங்களே போய்வர வேண்டும்' என சித்ரபுத்திரன் சொன்னார்.

எமன்பாடு இருதலைக்கொள்ளி எறும்புபோல் ஆயிற்று. சாமளை வெளியே வந்தாள்.

'கணக்கரே, நான் போய் வருகிறேன். எதுவரை போக வேணும்?'

'என்ன சொன்னீர்கள்?' என்றாள் சாமளை.

சித்ரபுத்திரர் காதில் இருந்த எழுத்தாணி அலறிப் போய் அவர் காலில் குத்தியது. இரண்டொரு சொட்டு ரத்தம் பீறிட்டது. அவர் அந்த நிலைமையிலும், 'தாங்கள் போகவேண்டிய விலாசம் நைமிசாரண்யம். திரிஜடா வல்லபர் ஹேமவதி இருவர்களின் புத்திரனை நீலகண்டன்' என்று முடித்தார்.

எமன், 'மே......மே......மே...எனக் கத்தினான்.' அப்படித்தான் கடாவை அழைப்பது வழக்கம். அவன் குரலுக்கு எதிரொலி போல், எருமைக்கடாவே கத்திற்று.

முன்னால் எருமை வர, பின்னால் நீலகண்டன் வந்தான்! எமன் எருமையைப் பார்க்க, சாமளை எமனைப் பார்க்க, சித்ர புத்திரன் எழுத்தாணி விழுந்த புண்ணைப்பார்க்க, ஔதும்பரன் கற்சிலைபோல நிற்க, எல்லாவற்றையும் நீல கண்டன் கண்டான்.

'டேய் பதரே, என் மாட்டை ஏன் திருடினாய்?' என்றான் எமன்.

'அதோ உர்ன்னு நிக்கிற அம்மாவைக் கேளு.'

'நான் எமன் என்பதை மறக்காதே.'

'ஓகோ நீங்கதானா அந்தப் பேர்வழி. ரொம்ப சந் தோஷம்.'

சாமளை கண்ணில், நீலகண்டன் கையில் கிடந்த மோதிரம் படவே, 'டேய் திருட்டுப்பயலே, ஏதுடா அந்த

மோதிரம்' என்றாள். இதையே திருப்பி எமன் சொன்னான், தன் பங்கை. ஔதும்பரனும் சொன்னான். ஏக காலத்தில் எமனும் சாமளையும் 'இது அமிர்தத்தின் மோதிர மல்லவா?' என்றார்கள்.

சித்ரபுத்திரன் 'என் கணக்குப்படி பார்த்தால் இவன் தான் நீலகண்டன்' என்றார்.

'ஆமாம். நைமிசாரண்யத்தின் வட பாரிசத்திலுள்ள ஆச்ரமத்தின் முனிபுங்கவரும், தபோ சிரேஷ்டருமான திரிஜடாவல்லபரின் குமாரனும்...

'கதையை நிறுத்தடா' என்றான் எமன்.

'மோதிரத்தை கழட்டுங்கள்' என சாமளை சொன்னாள். எமனே எழுந்து போய் கழட்ட ஆரம் பித்தான்.

'ஐயைய்யோ!...... மோதிரத்தைத் திருடுகிறானே. இந்த ஊரிலே நியாயமில்லையா? நீதி இல்லையா?'

கணக்கர் 'தம்பி, அது உன் மோதிரம் அல்ல' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சொன்னார்.

'யாரைப் பார்த்து தம்பியிங்கிறே, பல்லை உதிர்த்துப் போடுவேன்' என்றதும், எமன் கிட்டே நெருங்கி மோதிர விரலைப் பிடித்தான். 'தொட்டே உசிரை வாங்கிப் போடுவேன்.'

'எமன் திருடலாமா?' என்று குறுக்கு விசாரணை கேட்டான்.

எமன் 'ஔதும்பரா பாசக்கயிறு கொண்டுவா. மோதிரத்தைப் பிறகு கழட்டலாம்' என்றதும்

ஔதும்பரன், பாசக் கயிற்றை எடுக்க ஓடினான். சாமளை 'அமிர்தம் அமிர்தம்' என்றும் அவள் வரக்காணோம்.

பாசக்கயிறு வந்தது, எமன் எட்டி நின்று வீசினான். நீலகண்டன் இதயம் வேகமாகத் துடித்தது. இருதய வியாதியின் சப்தம் அவன் காதையே அடைத்தது, துளைத்தது.

'ஹா! ஹிருதய வியாதி நில்! நில். நின்றுவிடு' என்றான். பாசக்கயிறு முறுக்க ஆரம்பித்தது.

அமிர்தம் ஓடி வந்து, 'நில் அண்ணா' என்றாள்.

'அவள் கையைப் பாருங்கள்!' என்றாள் சாமளை.

எமன் 'அவன் திருடன்' என்றான்.

'இல்லை. நானாகவே கொடுத்தேன், அவர் உயிரை வாங்கு. நானும் இதோ அவரோடு மாய்கிறேன். அண்ணா! பாசக் கயிற்றில் எனக்கும் ஒரு முழம்' எனக் கதறினாள்.

வீசிய பாசக் கயிற்றுக்குள் நுழைந்தாள்.

எமன், 'தங்காய்! அவன் உயிர் இன்று பிரிய வேண்டுமே, தடுக்காதே' எனக் கெஞ்சினான்.

'என் உயிரும் அப்படியே.'

'கணக்கரே நான் என்ன செய்கிறது.'

கணக்கர் 'எல்லாம் கால வித்தியாசம்' என்றார்.

'ஆம் காலனால் வந்தது.'

நீலகண்டன் எமனைப் பார்த்து 'என் உயிரை வாங்க மாட்டாயா?' என்று பரிதாபமாகக் கேட்டான்.

அமிர்தம், 'அண்ணு உன் உயிரை வாங்கட்டும் பார்க்கலாம்!' என்று சவால் கொடுத்தாள்.

எமன் மூர்ச்சையானுன். கணக்கரும், ஔதும்பரனும் சைத்யோபசாரம் செய்தனர், எழுந்த எமன் முதலாக கேட்டது இதுதான்.

'நான் யார்?'

'எமன்' என்றுன் நீலகண்டன்.'

'எமன் தர்மத்தை விட்டுப் பிரள்வதா?'

'ரொம்ப யோக்யர்தான். வாயை மூடுங்கள்' என்ற குரல் வந்த திக்கை எல்லோரும் பார்த்தனர், சாமளா நின்று கொண்டிருந்தாள்.

சாமளா 'இரண்டு தப்பிதம் செய்தவர்கள் யோக்கியரா அயோக்கியரா?' என்றுள்.

'தப்பிதமா? அதுவும் இரண்டா?' என சாமளா நின்ற திக்கு நோக்கினுன்.

'மார்க்கண்டேயனைக் காப்பாற்றினீர்களோ?' என்றுள் சாமளா. அடுத்த அம்பை அவள் எய்யுமுன் 'சத்தியவான்!' என்றுள் அமிர்தம்.

எமன் தலை, நாணத்தால் கவிழ்ந்தது. சாமளா, அன்பு கனிய 'தம்பீ......த...ம்...பீ...இ...இ......' என மொழிந்தாள்.

'அக்காள், அக்காள்' என்றுன் நீலகண்டம்.

எமன் தலை நிமிர்ந்து 'நீ எனக்கு என்னடா உறவு!' என்றுன்.

'எமனுக்கு மச்சான்' என்று நீலகண்டம் சொல்லி அமிர்தத்தைப் பார்த்தான். அவள் தலை குனிந்தாள். வெட்கம், நாணம், எல்லாம் சேர்ந்து கை முகத்தைப் புதைக்க, சங்குமோதிரம் பளீரெனப் பிரகாசித்தது.

சாயலை, 'டேய் ஔதும்பரா அந்தப் பாசக் கயிற்றைக் கொண்டுபோய், தண்ணீர் இறைக்கிற வாளியில் கட்டு. மாட்டை மரகதக் கொட்டிலில் அடை. இன்னொரு ரதம் கொண்டுவா.'

'ரதமா எதற்கு?' என்றான் அப்பாவி எமன்.

'புது மாப்பிள்ளை—பெண்ணிற்கும் தனி ரதம் வேண்டாமோ?'

இந்தச் சமயம், காலதேவரும் அவர் மனைவியும் வந்தார்கள். புது மணத் தம்பதிகளை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

சிறிது நேரத்தில், மூன்று ரதங்கள் இந்திர சபைக்கு நடனம் பார்க்கப் புறப்பட்டன. ஒன்றில், நீலகண்டம்—அமிர்தம் இருந்தனர். ரதத்தில் ஏறுமுன், அமிர்தம் ஏறுகிறதா நீலகண்டம் ஏறுகிறதா எனத் தர்க்கம்.

'முதலில் அமிர்தம் ஏறட்டும்' என்றான் நீலகண்டம்.

'இல்லை விஷமே வரட்டும்' என்றாள் அமிர்தம்.

சாமளை இதைக் கேட்டதும் 'இருவரும் அமிர்தமும் விஷமும் போல இருங்கள்' என்றாள்.

ரதங்கள் பறந்தன.

* * *     * * *     * * *

நைமிசாரண்யத்தின் தபோசிரேஷ்டரும் தீர்க்கதரிசியுமான திரிஜடாவல்லபர் சிரித்தார். ரிஷ் பத்னி 'என்? இந்த சிரிப்பு?' என்றாள்.

'இந்திர சபையில் நம்ம பயல் பார்த்துக் கொண்டிருக்கிறான், கலியாணம் ஆகிவிட்டது.'

ஹேமவதி குறையும் கேட்காமல் ஆரத்திக்குத் தயார் செய்ய ஆரம்பித்தாள்.

# ஞாபக சக்தி நிலையம்

இந்தக் காலத்தில் அறிவை விருத்தி செய்யப் பல வழிகள் இருக்கின்றன. முக்கியமாக நேர்முகமாகக் கல்வி கேட்கவேண்டியதில்லை. ரேடியோ மூலம், தேகப்பயிற்சி செய்கிற இக்காலத்தில், தபால் மூலம், ஞாபக சக்தி பெற முயற்சி செய்வது, ஆச்சரியமான காரியமல்ல!

தபால் மூலம், ஓவியம் காவியம் எல்லாம் எழுத முடியுமாம்: நான், அவைகளை நன்கு கற்றுக் கொள்ளுமுன் ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்ய முயன்றேன். அதன் விளைவுகளைப் பின் வரும் கடிதங்கள் தெரிவிக்கின்றன, என்பது என் ஞாபகம்.

## 1

அன்புள்ள ஐயா,

தங்கள் ஞாபக சக்தி நிலையத்தில், நான் ஒரு மாணவி. சென்ற ஒரு வருஷகாலமாக நான் பாடம் கற்றுவருகிறேன். இது தங்களுக்கு ஞாபகம் இருக்குமென நம்புகிறேன். தங்கள், பாடங்களைப் படித்துப் படித்து ஞாபக சக்தி ஏற்படவில்லை; ஆனால் ஞாபகக் குறைவு அதிகமாகிறது! தங்கள் தபால் முறை படிப்பில் பலன் இல்லையென்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

இப்படிக்கு,
நினைவின்மை,
21—12—40

## 2

அன்புள்ள அம்மணி,

தங்களுடைய 21—12—40 கடிதம் பெற்றோம். தங்கள் விலாசமுள்ள, எவரும் எங்கள் பள்ளியில் மாணவி யாக இல்லை என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறோம். எங்கள் பள்ளிக்கூடத்தில் பன்முறை, விலாசங்களைச் சோதனை செய்தபின்பே இக்கடிதம் எழுதப்படுகிறது. எங்கள் பள்ளிக்கூட மாணுக்கர் இல்லையென தங்களை அநுமானம் செய்கிறோம்.

தங்கள் நன்றியறிதலுள்ள
ஞாபகன்.
23—12—40

## 3

ஐயா!

தங்கள் 23—12—40 கடிதம் வியப்பாக இருக்கிறது. தங்கள் பள்ளிக்கூடத்தில் 21—12—39 அன்று சேர்ந்தது ஞாபகம் இருக்கிறது. அதன் பின் ஒன்றும் சரிவர ஞாப கம் இல்லை. என்னதான் இருந்தாலும், பலன் இல்லாத படிப்பிற்கு யாரும் பணம் கொடுக்க விரும்பார்கள். ஆகவே, எனக்குச் சேர வேண்டிய பணத்தை (எவ்வளவு என்று ஞாபகம் இல்லை) உடன் அனுப்பவும்.

தங்கள் அன்புள்ள,
நினைவின்மை.

## 4

அன்புள்ள அம்மணி,

தங்களிடம் நாங்கள் மன்னிப்புக் கோருகிறோம். பள்ளிக் கூடத்தில், சரியாகப் பரிசோதனை செய்யப்

பட்டது. அதிலிருந்து தாங்கள் எங்கள் கலாசாலையில் ஒரு வருஷம் படித்து வருகிறீர்கள் என்று ஞாபகம் வந்து விட்டது. இதில், தாங்கள் செலுத்திய தொகை போக, செலுத்த வேண்டிய பணத்தை இன்னும் செலுத்தவில்லை. ரூ 19—9—8. இதைச் செலுத்தும்படி இரண்டு மூன்று முறை கடிதம் எழுதியும், பதில் எழுதாததற்கு வருந்துகிறோம். பணம் அனுப்பவும்.

தங்கள் அன்புள்ள,
ஞாபகன்,
ஞாபக சக்தி நிலையம்.

## 5

ஐயா,

தாங்கள் தேதியின்றி எழுதிய கடிதம் கிடைத்தது. தங்கள் தபால் முறைப் படிப்பில் நான் சேர்ந்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள். 23—12—40 கடிதத்தில் நான் சேரவில்லையென எழுதினீர்கள். இதிலிருந்தே, தங்கள் தபால் முறையில் ஞாபக சக்தியை விருத்திசெய்ய முடியாது என்று தெரிகிறது.

ஆகவே தாங்கள் கேட்கும் ரூ 19—9—8 அனுப்ப முடியாது.

இப்படிக்கு,
நினைவின்மை.

## 6

அன்புள்ள அம்மணி,

நாங்கள், தேதி போடவில்லை என்பது உண்மையோ பொய்யோ, தங்கள் கடிதத்தில், தேதியைக் காணவில்லை.

அதுமட்டு மல்லாமல், ஸ்டாம்பு ஒட்ட மறந்துவிட்டீர்கள். இரட்டிப்பு சார்ஜ் கொடுத்து வாங்கினோம். தாங்கள் 21—12—40உ கடிதத்தில் படித்ததாகவும், சென்ற கடிதத்தில் படிக்கவில்லை யென்றும் சொல்லுகிறீர்கள். இதிலிருந்தே தங்களுக்கு ஞாபகசக்தி குறைவென்று படுகிறது. ஞாபக சக்திதான், வாழ்க்கையில் முன்னுக்கு வரும் வழி; குடும்பத்தின் உயிர்நாடி ஞாபகசக்தியே. இதை உத்தேசித்து, எங்கள் ஞாபக சக்தி தபால் முறையில் தங்களை மாணவியாகச் சேரத்துக்கொள்ள விரும்புகிறோம். இத்துடன் முதல் அத்தியாயம் 'ஞாபகச் சின்னம்' என்ற தலைப்பை அனுப்பி யிருக்கிறோம். மாணவியாகச் சேர்ந்துகொள்ள இஷ்டம் இருந்தால் மட்டும், முன்பணம் ரூபாய் 25 அனுப்பவும்.

தங்கள் அன்புள்ள,
ஞாபகன்,
ஞாபக சக்தி நிலையம்,
31—12—40

## 7

அன்பும் அருமையும் உள்ள ஐயா,

தங்கள் 31—12—40 கடிதம் பெற்றேன். பேரானந்தம் அடைந்தேன். தங்கள் முதல் அத்தியாயம் ஞாபகச் சின்னம் மிகவும் உபயோகமாக இருக்கிறது. எனது ஞாபக சக்தி ஆலம் விழுதுபோல் வளருகிறது. ஆகவே, மற்றும் அத்தியாயங்களை அனுப்பும்படி கேட்டுக் கொள்வதோடு, ரூ 25-க்கு செக் அனுப்பித்துள்ளேன்.

அன்புள்ள மாணவி,
நினைவுள்ளாள்,
3—1—41.

## 8

அன்புள்ள அம்மணி!

தங்கள் 3—1—41 கடிதம் கிடைத்தது. அதில் காணப் பட்ட விஷயங்களைக் கண்டு பரமானந்தம் அடைந்ததை விட, காணப்படாத விஷயத்தைக் கண்டு, பதைபதைப்புக் கொண்டோம். 'செக்கு' அனுப்ப வேண்டியதற்குப் பதில் தங்கள் வீட்டு பால் கணக்குக் குறிப்பை அனுப்பி விட்டீர்கள். பால் கணக்கை இதே தபாலில் அனுப்பு கிறோம். 'செக்' அடுத்த தபாலில் அனுப்பும்படி ஞாபக மூட்டுகிறோம். இரண்டாம் அதிகாரம் அனுப்பப்படு கிறது.

அன்புள்ள,
ஞாபகன்
ஞாபகசக்தி நிலையம்,
7—1—41.

இதற்கு நான் என்ன பதில் எழுதினேன்? அது, இப்போது ஞாபகம் இல்லை.

# கடவுளுக்கே வெளிச்சம்!

சிவசிதம்பரம் பிள்ளை பெரிய கோவில் தரும கர்த்தா, படுக்கையில் பள்ளிகொண்டார். நீட்டி நிமிர்ந்து ஒருக்களித்து அவர் சயனிப்பதே ஒரு கலை. தலையணை ஒரு அங்குலம் உயரமாகப் போய்விட்டாலும் தூக்கம் வராது. அரை அங்குலம் குறைந்தாலும் சிவராத்திரிதான். வாயில் குதப்பியிருந்த வெற்றிலையை உரசிக் கொப்பளித்துவிட்டு வந்தார். ஒரு தம்ளர் தண்ணீரைக் குடித்துவிட்டு நிம்மதியாக ஏப்பம்விட்டார்.

இடுப்பில் தங்க அரணாவிற்குப் பக்கத்தில் பட்டுப்பை. அதற்குள்ளிருந்து இரு விரலினால் விபூதியைத் துளாவி, அண்ணாந்து, கண்ணைச் செருகியபடியே 'சம்போ சங்கரா' என்று பரக்க இட்டபடியே படுத்தார்.

சிறிது நேரத்தில் அந்த அறையில் குறட்டை சப்தம்; பிறகு எதிரொலியான குறட்டை நாதம்.

'இந்தாருமையா உம்மைத்தான்' என்ற குரல் கேட்டது. சொப்பனமாக இருக்கலாமோ எனப் புரண்ட சமயம்.

'நான்தானய்யா கடவுள்' என்றார் வாசற் பக்கம் நிற்பவர்.

திடுக்கிட்டு விழித்தார் சிவசிதம்பரம். கடவுளாவது மண்ணாங் கட்டியாவது? ஆனால் குரல் கேட்கிறதே.

கதவைத் திறக்க எழுந்த சமயம் உள்ளே கடவுள் வந்து விட்டார்.

'யாரய்யா நீர்?'

'கடவுள்.'

'கடவுளா? அப்படியானால் நீர் பிரம்மாவா? விஷ்ணுவா, இல்லை எங்கள் சிவனா? அதுவும் அல்லாமல் இயேசுவா, அல்லாவா?'

கடவுள் நிலைமையை சமாளிக்கச் சிரித்தார்.

அந்த அறையெங்கும் சிரிப்பின் எதிரொலி முட்டி மோதிற்று, கலகலவென.

'பக்தனுக்கு எல்லாம் கடவுளின் சொரூபந்தானே' என்று ஒரு குறுக்குக் கேள்வி கேட்டார் கடவுள்.

உடம்பு நடுக்குற்று மெய் சிலிர்த்தது. பட்டுப் பையைத் திறந்து 'சிவ சிதம்பரம்' என விபூதியைத் தொட்டார். அது சுட்டது. இருந்தாலும் உதறி நெற்றியில் பழக்கத்தின் தோஷத்தால் இட்டார். சுரீர் என்றது நெற்றி. முகத்தைச் சுளித்த படியே 'என்ன விஷயம்?' என்றார்.

'சிவ சிதம்பரம், பெரிய கோவில் தர்மகர்த்தாவிடம் ஒரு வேண்டுகோள்; வரம் கேட்க வந்துள்ளேன்.'

'என்னிடமா?'

ஸ்ரீமான் கடவுள் தன்னிடம் வரம் கேட்க வந்தது அவருக்குத் திகைப்பைத் தந்தது. அப்படி அவர் கேட்கப் போகும் வரம் எதுவாக இருக்கலாம். எக்கச்சக்கமாக எதையாவது சொல்லிவிட்டு அப்பால் முழிக்கக் கூடாதே என்ற சிந்தனைப் போராட்டம்.

'சாக்ஷாத் தர்ம கர்த்தாவிடமே அடியேன் வந்திருக்கிறேன்.'

கணீரென்ற குரல். 'அடியேன்' என்ற சொல்லாட்சி அவரைச் செவிடு படச் செய்தது. கடவுள் தம்முடைய கனவில் தோன்றுவது உண்டென்று சொல்லும் அவருக்கு சற்று கஷ்டமாகவே இன்று இருந்தது. அப்படிப்பட்ட கனவாகவே இருக்கலாமோ என்ற சந்தேகம். ஒரு திகைப்பு.

கடவுளை எரித்துவிடுவார் போல் பார்த்தார், தர்ம கர்த்தா. கடவுளோ கூனிக் குறுகி, உத்யோகஸ்தன் முன் நிற்கும் குமாஸ்தா போல நிற்கிறார். என்ன விநயம், என்ன மரியாதை, அவர் தருமத்தின் கர்த்தா முன்னல்லவா நிற்கிறார்?

'சிறு வேண்டுகோள், ஐயா, நாளைக் காலையில் பெரிய கோவில் உண்டியலில் விழ இருக்கும் பத்தாயிர ரூபாய் நோட்டுகள் இரண்டும், ஆயிர ரூபாய் நோட்டுகள் முப்பதும், ஐநூறு ரூபாய் நோட்டுகள் நூறும் விழாமல் தடுக்கக் கூடாதா?'

அட கடவுளே! இந்தக் கேள்வியை சிவசிதம்பரம் எதிர்பார்க்கவில்லை. அப்படி விழுகிற நோட்டுகளை வரவு வைத்து லக்ஷ ரூபாயில் 25 ஆயிரம் ரூபாய் கடவுளுக்கு; 25 ஆயிரம் தனக்கு, மிச்சமுள்ள 50 ஆயிரம் போட வருகிற பக்தருக்கு எனப் பேசியது நினைப்பில் வரலாயிற்று.

முகத்தைச் சுளிக்கவே, 'அந்தப் பணம் எனக்கு அவசியமா? அதாவது பெரிய கோவிலுக்கு அவசியமா?' என்று கேட்டார் கடவுள்.

'கடவுளே! இதுவும் நின் திருவிளையாடலா? உமக்கு 25000 சம்பாதித்துக் கொடுக்கிறேன். நானும் அவ்வளவே எடுத்துக் கொள்ளுகிறேன். கொடுக்கிற தரும தாதாவும் பூர்ண மனசோடுதானே கொடுக்கிறான். இதில் உமக்கு என் ஆக்ஷேபனை?'

கடவுள் திடுக்கிட்டார். தம்மீது எவ்வளவு கருணை காட்டுகிறார் தரும கர்த்தா என்ற வியப்பு. பெரிய கோவில் என்றும் பெரிய கோயிலாக நிற்க அவர் செய்யும் முயற்சியை ஆதரிப்பதா வேண்டாமா? ஒரு கணம் தயங்கினார் கடவுள். உண்டியலில் விழுகிற அத்தனை பணம் காசுகளும் மனப் பூர்வமாக போடுகிற நாணயங்களா என்ற கேள்வி கடவுள் நெஞ்சத்தில் எழுந்தது.

'நீர் செய்கிற செயலை அரசாங்கம் கண்டு கொண்டால்?'

கடவுள்கூட அரசாங்கத்துக்குப் பயப்படும் பொருளா என்ன? அப்படியில்லாவிட்டால் ஏன் இந்தக் கேள்வி கேட்கிறார்?

"பெரிய கோவில் உண்டியல் இன்று நாளை திறக்கப் போகிறதா? இன்னும் ஒரு மாதம் கழித்துத்தானே திறக்கப்போகிறோம்?"

"உண்டியலுக்குள் கிடக்கும் பெரிய நோட்டுகள் செல்லாது என்று சொல்லிவிட்டால்?"

கடவுளின் அறியாமையை நினைத்துச் சிரித்தார். அது செல்லுபடியாகும் என்று சிவ சிதம்பரம் பிள்ளைக்குத் தெரியும். இல்லாவிட்டால், கண்ணப்ப நாயனார் போல தானும் சுவைத்து கடவுளுக்கும் சரிபங்கு கொடுப்பாரா என்ன?

என்ன இருந்தாலும் கடவுள் பயந்தாங்கொள்ளி வுன்கிறதுபோல, "என் பெயர் பேப்பரில் அடிபடாமல் நாலிடத்தில் நடமாடாமல் இருக்க வேண்டுமே?" என்று தயங்கினர்.

"நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!" எவ்வளவு ஆறுதலான வார்த்தை. கடவுள் பிழைத்தார்.

"என்ன தைரியமய்யா உமக்கு. உம் துணிச்சல் எனக்கு இல்லே!"

கடவுளின் வியப்பும் ஆச்சர்யமும் சொல்லி முடியாது யாருடைய துணையினுல் இவ்வளவு தைரியம் ஏற்பட்டிருக்கலாம்?

"கடவுளே துணை!" என்ருர் சிவ சிதம்பரம். கலகல வெனச் சிரித்தார் கடவுள். மனிதனின் ஆசைக்கு தான் கூட்டாளியா? ஆம். மறுநாள் தாம் ஒரு லக்ஷ ரூபாய் வாங்கி சில தினங்களில் பக்தனுக்கு சரிபாதியும், தனக்கு கால் பங்கு தேடிக் கொடுத்த கருணைமூர்த்தி சிவசிதம்பரத்திற்கு கால் பங்கும் வரவு செலவு வைத்துக்கொள்ளுவதை நினைத்தபோது நடுக்கமே யெடுத்தது.

கடவுளுக்குக் கையெடுத்து அபயம் கொடுத்தார் தருமகர்த்தா. இருவரும் சேர்ந்து நகைத்தனர். நகைப்பு வரவர அவுட்டுச் சிரிப்பாக மாறி அறை யெங்கும் சிரிப்பின் எக்காள அலைகள்!

அடுத்த அறையில் படுத்திருந்த முத்தம்மையாச்சி பாம்படம் குலுங்க ஓடோடி வந்து பார்த்தாள். இருட்டறையில் சிரிப்போசை. பிள்ளைவாள் கலகலவெனச் சிரிக்கிருர். நெருப்புப்பெட்டியை எடுத்துக் கீச்சி கை விளக்கில் ஏற்றினுள்.

"என்ன, உங்களேத்தானே என்ன சிரிக்கிறீஹ?" சத்தம் கேட்கவே திடுக்கிட்டார். கைவிளக்கின் ஒளி

கண்ணை உறுத்தி கூசச் செய்தது. விரல்களால் கண்ணைப் பிசைந்தபடி மிரள மிரள விழித்தார்.

ஆச்சிக்கு என்னவோ ஏதோவென நெஞ்சம் கெதக் கெதக்கென அடித்தது.

" அட, நீ தானு புள்ளே? கடவுளு தான் நிக்க ராராக்கு முன்னு பயந்திட்டேன். நல்லாத்தான் எழுப்பினே. ''

" சொப்பனமா? என்ன சொல்லுதீஹ?''

" என்னமோ சொப்பனம். கொஞ்சம் குளிந்த தண்ணீரு கொண்டா புள்ளே'' என்றவர் பட்டுப் பையைத் திறந்து விபூதியை நெற்றி நிறைய 'சம்போ சிவசங்கரா?' எனப் பூசிக்கொண்டார். நெற்றியில் திருநீறு பிர காசித்தது. நெற்றியைச் சுடவில்லை. விபூதியில் இருந்த பன்னீர் மணம் குளுகுளுவென நெற்றிக்கு ஒரு சொகுசு கொடுத்தது.

படுக்கையில் படுத்தார். தலையணை சரியான உயரம். கண் மூடியிருந்தது. ஆனால் தூக்கம் கண்ணைத் தழுவக் காணோம். மனசில் ஒரே சலனம். கடவுளுக்குப் பதில், அந்த அறையில் கலக்கமே பிரசன்னமாக இருந்தது.

* * *

சில மாதங்களுக்குப் பின்னால், ஊரில் தர்மகர்த்தா சிவசொத்தை வேட்டு விட்டதாக சொல்லிக் கொண் டார்கள். ஆனால் இந்த உண்மை, பிளாக் மார்க்கெட்டில் சம்பாதித்து கோவிலுக்கு 25 ஆயிரம் வழங்கிய தரும தாதாவிற்கும், தர்ம கர்த்தாவிற்கும் காதுக்கு காது தைத்தாற்போல நடந்ததை, அந்த கோவிலிலுள்ள கடவுளுக்கே தெரியுமோ என்னமோ!

# கம்பனுக்குக் கடிதங்கள்

ஹனுமான்

26—5—40

கம்பன் இன்று உயிரோடு இருந்தால்? கீழ்கண்ட கடிதங்கள் அந்தப் புலவனுக்கு வந்தே தீரும். ஒரு சில மாதிரிக்கு இங்கு தரப்பட்டிருக்கிறது.

## 1

அன்பு மிக்க கம்பரே,

நமஸ்காரம். தங்கள் இராமாயணம் அற்புதமான காவ்யந்தான். ஆனுலும், மிகவும் பெரிசு; விலை கொடுத்து வாங்கவும் முடியாது. மேலும் தங்களால் வசனத்தில் எழுதவோ பேசவோ முடியாது....என்று நெடுநாளாக ஒரு வதந்தி உலாவுகிறது. இந்தக் கெட்ட பெயரை நீக்க வேண்டுமானுல் இனிமேல் பாட்டுப் பாடுவதை அறவே நிறுத்திவிட்டு வசனத்தில், ராமாயணத்தையோ கீமா யணத்தையோ எதையாவது எழுதும். அதைப் பிரசுரம் செய்ய நாங்கள் இருக்கிறோம்.

தொழில் முறை தெரியாத மனுஷன் என்றுல் அது சாக்ஷாத் நீர் தான். கவியால் என்னய்யா பிரயோசனம்? வாய் நிறையுமா, வயிறு நிறையுமா? கை மேல் காசு வேண்டுமானுல் நாங்கள் சொல்லுகிறபடி கேளும்.

தமிழில் போதிய பயிற்சி இருப்பதால் தமிழ்ப் புஸ்தகங்களுக்கு நோட்ஸ் எழுதித்தந்தால், தங்களுக்குப் பெயரும் புகழும், முக்கியமாக நாலு துட்டும் கிடைக்கும்

தங்கள் நலம் கோரும்,

அப்/டு/டேட்/நோட்ஸ்/கம்பெனி

நோட்ஸ் என்பது பதவுரை, பொழிப்புரை, அன்வயம், இலக்கக் குறிப்பு, வினவிடை முதலியவைகள் நிறைந்தது.

## 2

கவிஞனே,

நீ உண்மைத் தமிழனா? உன்னுடைய இரத்தத்தில் தமிழன் இரத்தம் எத்தனை சொட்டு இருக்கிறது? அட துரோகி நீ தமிழன்தானா? வட நாட்டு ஆரியன் இராமனை ஏன் பாடினாய்? ஏதாவது கவிபாடித் தொலைக்க வேண்டுமென்றால், உன்நாக்குத் துடிதுடித்தால், வண்டிமறிச்சான், நொண்டி, சாமுண்டி, முனியன் இவர்களைப்பற்றி நீ பாடினால் என்ன?

நீ தமிழனாக இருந்தால், தமிழிற்கு உழைப்பவனாக இருந்தால், இப்படி ஒரு சூழ்ச்சியில் சிக்கி யிருக்க மாட்டாய். நாளைக்கு காங்கிரஸ் பாட்டு எழுதினாலும் எழுதுவாய். உன் மண்டை ஜாக்கிரதை. ஊரிலுள்ள கல், மண், மூட்டை உன் வீட்டிற்குள் வரவேண்டுமா? மரியாதையாக நடந்து கொள்.

பதில் என்ன?

இப்படிக்கு,

திராவிட வீரன்.

## 3

வருக கம்பரே,

வருவீர். 'வந்து களி கூறுவீர்.' 'ஆடுவீர்.' 'பாடுவீர்.' 'எமது ஸ்டுடியோவைப் பார்த்து பரவஸம் அடையும்.' கவிகளெல்லாம் நல்ல காட்சிகளைக் கண்டால் உணர்ச்சிப் பெருக்கெடுத்துப் பாடுவார்களாம்.

ஆகவே தங்களிடம் உணர்ச்சிப் பெருக்கு அதிகம் என்று சொல்லுகிறார்கள். அப்படி உணர்ச்சியுள்ள தங்கள் வரவு, எங்கள் ஸ்டுடியோவிற்கு நல் வரவு ஆகுக.

சினிமாத் துறையில் தங்களுக்கு நல்ல சான்ஸ் இருக்கிறது. முக வெட்டைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். (நான் தங்களைப் பார்க்கவில்லை. இலக்கியத் துறையில் இருப்பவர்கள் எல்லாம் அசங்கிய ரூபமுடையவராகத் தான் இருப்பார்கள் என்பது மரபு; அதனால்தான் சொன்னேன்)

நடிகன் என்றதோடு பாடல் இயற்றவும் இடம் தருகிறோம். கொஞ்சம், ஹிந்துஸ்தானி, பெங்காலி, மராத்தி முதலிய டியூன்கள் தெரிந்து கொண்டால், வெற்றி நிச்சயம். சும்மா, தாங்கள் கவி காவ்யம் இலக்கியம் என்பதில் தம்பிடிகூட மிச்சம் கட்டாது. சொன்னதைக் கேட்பீர்கள். என நம்புகிறோம்.

உங்கள் அன்பன்,
டைரக்டர்,
கும்பகர்ண ஸ்டுடியோ.

## 4

தோழரே,

உமது கவிகளைப் படித்தேன். சுமாராகயிருக்கிறது. அதன் காரணத்தை நீர் அம்உறியவில்லை. கவிதையை

அற்புதம் ஆக்கியிருக்கிறேன் பாரும். ஒரு சின்ன வேலை. அவ்வளவுதான். உமது கவியில், எங்கெங்கு வட மொழிகள் வருகின்றனவோ அங்கெல்லாம் தனித்தமிழ் செந்தமிழ், பைந்தமிழ், மொழிகளைப் போட்டிருக்கிறேன். அப்படிப் போட்டிருக்கும் ஆறு காண்டங்களையும் பார்த்து மகிழுங்கள். இப்படித் தங்களுக்குச் செய்த உதவியை, நீங்கள் உயிருள்ளவரை மறக்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.

இப்படிக்கு,
ஒரு தனித்தமிழன்பன்.

## 5

அடே தம்பி,

நீ இருக்குமிடம் இப்போதுதான் தெரிந்தது. நீ என் கிட்டத் தமிழ் படித்த பையனுத் தான் இருக்கவேண்டும் என்று உன் எழுத்துப் போக்கிலேயே தெரிந்து கொண் டேன். ஆனுல் நீ சிலேடைகள் வைத்துப் பாடாமல் வழ வழா என்று பாட்டுகள் பாடி இருக்கிருயே, இந்தப் பாடல்கள் நிற்குமா தம்பி? ஒரு மாலை மாற்று ஒரு இரட்டை நாக பந்தம், இருபொருள் முப்பொருள் விருத் தங்கள், 28 சீருடைய பிரும்ம விருத்தம் இவைகளை உன் காவியத்தில் நடு நடுவே எழுதியிருந்தால் இன்னும் நல்ல பெயர் வாங்கியிருப்பாய்.

இப்போது உனக்குக் கடிதம் எழுதும் காரணம் இதுதான். உன்னோடு தமிழ்ப் படித்தானே என்கிட்ட அந்த நடராசன் என்ற பிள்ளையாண்டன் ரேடியோவிலே நாதசுரம் வாசிக்கப் போகிருனும். அடுத்த மாசத்துக்கு அடுத்த மாசத்திலே. அவன் என் மீதுள்ள பழைய பிரியத் தால் என்னைத் தவிலை எடுத்துக்கிட்டு வரச் சொன்னுன். என் தவுலோ ஒரு பக்கம் தோல் கிழிஞ்சு கிடக்குது.

இப்போது என் சிஷ்யனில் ஒருவனுன நீ செளக்கிய மாக இருப்பதாகக் கேள்விப்படுகிறேனுதலால் அந்தத் தோல்க் கிரயம் ரூபா $2\frac{1}{2}$ மட்டும் குரு தட்சணையாக எனக்கு அனுப்பி வைத்தாயானுல் பரம உபகாரமாக இருக்கும். ரேடியோவில் எனது பழையகால கெத்துக் களைத் தவுலில் காட்டித் தமிழ்நாட்டை மகிழச் செய்வேன்.

இப்படிக்கு
உன் குரு,
கருப்பையாக் கம்பர்.

## 6

அன்புள்ள ஐயா,

அநேக நமஸ்காரங்கள். நீர் மொழி பெயர்ப்பில் கை தேர்ந்தவர் என அறிகிறோம். உமது ராமயணம், நன்றாக இருப்பதாக 'கிரிட்டிக்குகள்' அபிப்பிராயம் கொடுக்கி ருர்கள்.

இலக்கிய மறுமலர்ச்சி யென்பதின் அர்த்தம் உமக்குத் தெரியவில்லை. வங்காளம், ஹிந்தி, உருது, மராத்தி முதலிய வட நாட்டுப் பாஷைகளிலிருந்து நாவல்கள் மொழி பெயர்த்து அனுப்புங்கள். நாங்கள் போடுகிறோம். இக் கடிதத்துடன் தங்கள் பாட்டுச் சுவடி களைத் திருப்பி அனுப்பி யிருக்கிறோம். தங்களுடைய மொழி பெயர்ப்பு நாவல்களை விரைவில் எதிர்பார்க்கிறோம்

அன்புள்ள
நாவல் பிரசுரகர்த்தர்கள்.

குறிப்பு: தங்களுடைய பாட்டுக்களை அனுப்பி விட்டதால். மனம் குன்ற வேண்டாம். மொழிபெயர்ப்பை விரைவில் அனுப்புங்கள். ஆதரியுங்கள்.

## 7

ஐயன்மீர்,

நீர் ஏதோ பழம் புத்தகங்கள் சிலவற்றை எமது சர்வ கலாசாலையில் படிக்க விரும்புவதாகவும், ஆகவே உள்ளே அநுமதிக்கும்படியும் விண்ணப்பம் போட்டிருந்ததாகத் தெரிகிறது.

இந்தப் புத்தகசாலையில் பி, ஏ, எம், ஏ. பட்டம் பெற்றவர்களுக்குத்தான் அநுமதியுண்டே தவிர, உங்களைப் போன்ற திண்ணைப் பள்ளிக்கூடப் பட்டதாரிகளுக்குக் கிடையாது.

ஓர் யோசனை வேண்டுமானால் சொல்லித் தருகிறோம். எமது சர்வகலாசாலையில் தமிழில் பி, ஏ, வகுப்புக்கூட உண்டு. தங்களுக்கு விருப்பமிருந்தால் ஏதாவதொரு, காலேஜில் எப்படியாவது சேர்ந்து படியும். பி, ஏ; வகுப்பில் மாணவனென்றிருந்தாலும் போதும்; எங்கள் புத்தகாலயத்தில் நுழைய அருகதை பெற்றவராவீர்.

இப்படிக்கு,
லைபெரேரியன் மதரூஸ் சர்வகலாசாலை.

## 8

ராமாயணம் பாடிய புலவரே,

க்ஷேமலாபம். இது............/பகவானின் கடைசி அவதாரம் எடுக்கும் காலமய்யா/உமது கவி யெல்லாம் விழலுக்கு............../பூர்த்தி செய்க/நாங்கள் நடத்தி வரும் தலையெழுத்துப் போட்டிக்கு ஆசிரியர் தேவை. சுமார் ஆயிரத்தியம்பது ஆல்டர்னட்வ், உடைய போட்டிக் காகிதங்களைத் தயார் செய்ய உங்களைப் போன்ற

அறிஞர்களால்த்தான் முடியும். பாஷா ஞானம் சொற் பெருக்குமுடைய நீங்கள் வந்தால், கிடைத்ததில் ஆளுக்குப் பாதி போட்டுக் கொள்ளுவோம்.

தங்கள் அன்பன்,
தலையெழுத்துப் போட்டி
உரிமையாளன்.

## 9

**கனம் மிகுந்த ஆசிரிய,**

தமிழிலே எங்கள் அச்சாபீஸில் போன வருஷம் அச்சாயிற்றே அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் நீங்கள்தான் என்று கண்டு பிடித்தோம்.

அந்தப் புத்தகம் அச்சுப்போட்ட குதிர் வேல் பண்டிதர் என்ற பேர்வழி பெரிய ஆசாமியாகத்தான் இருக்க வேண்டும். அச்சுப் போட்டு முடிந்த பின்பு புத்தகங்களை விற்று அச்சுக்கூலி அவ்வளவையும் கொடுத்துவிடுவதாகச் சொன்னார். நம்பி நாங்களும் அச்சுப் போட்டோம் போட்டோம்.

புத்தகம் அச்சுப்போட்டு முடிந்த மாதிரிப் பிரதிகளாக 20 பிரதிகள் எடுத்துக் கொண்டு அந்த போனாரே அவ்வளவுதான். இன்னும் அவர் திரும்பிவரவில்லை. அவர் விலாசமும் தெரியவில்லை.

இந்தப் புத்தகத்தை எங்கள் புத்தகசாலையில் வைத்து விற்றுப் பார்த்தோம். சென்ற ஒரு வருஷமாக மூன்றே மூன்று காப்பிகள்தான் விற்பனையாகியுள்ளது.

மேற்படி புத்தகத்தை எழுதிய ஆசிரியர் என்ற முறையில் உங்களுக்கு இந்த அச்சுக்கூலி கொடுக்கும் விஷயத்தில் பொறுப்பு உண்டு என்று நினைக்கின்றோம்.

எங்களுக்குக் கீழ்க்கண்டவாறு ஷை புத்தகம் அச்சிடச் செலவாகி யிருக்கிறது.

| | |
|---|---|
| காகிதம் | 879—8 |
| ராப்பர் | 150–12 |
| அட்டை | 141—4 |
| அச்சுக் கூலி | 650—8 |
| புரூப் படித்தவருக்கு 6 மாதத்துக்கு | 60—0 |
| பைண்டிங் | 120—0 |
| பிளாக் செய்ய | 20—8 |
| ஆக ரூ. | 2021—8 |

இந்த 2021–8–0 ரூபா யத்தனையும் நீங்கள் கொடுக்க வேண்டாம். 1000 ரூபா கொடுத்தால் போதும். அத்தனை புத்தகங்களையும் நீங்களே வாரிக்கொண்டு போகலாம். உடனே பதில் விரும்பும்.

காரியதரிசி,
குலமகள் விலாசம் பிரஸ்.

..............................

மே மாதம் 26, 1940,
சுகி.

# “வெற்றி”

“வி” வெற்றியைக்குறிக்குமென்ருல், தோல்வியிலுள்ள ‘வி’ எதிர்க் கட்சியின் வெற்றியைத்தானே குறிக்க வேண்டும்! அப்படித்தான் காமுவின் விவாதம் இருந்தது.

வாதமோ, விவாதமோ, காமுவிடம் நான் பேசுகிறது இல்லே. ஆக்ஷேப சமாதானங்களுக்கு, வழி வைத்துக் கொள்ளுகிறதும் அப்படி அப்படித்தான். இது நேற்று, இன்று செய்த தீர்மானம் அன்று. அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும்போது ஏதோ ஒரு காரியத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. அன்று விட்டுக்கொடுத்தவன், அப்புறம் அபிப்பிராய பேதத்திற்கே வழி வகுத்தது கிடையாது.

ஆனல் விவாதம் செய்வதில் நான் சமர்த்தன்: காமுவோ இதற்கு எதிரிடை (வால்) கரிக் குருவியைக் கண்டு, பருந்து பயந்து ஓடவில்லேயா? அந்தக் கதைதான் என் விஷயத்திலும். என் பிடித்த முயலுக்கு, யானேக்குக்கூட மூன்றே கால்தான் என்று பிடிவாதம் பிடிப்பவள் காமு. தோல்வியை ஒப்புக்கொள்கிற பழக்கம் இந்த ஜன்மத்தில் இல்லே.

காப்பி சாப்பிடும்போது, ஏதோ அவள் அண்ணன் கலியாணம்பற்றி பிரஸ்தாபம் வந்தது. “அது ஆவணி மாசம் நடந்தது. அப்போதான் நீங்கள் மதராசுக்குப்

போனீர்கள், வேலைக்காக கொழும்பிலிருந்து கலியாணி அக்காள் மாப்பிள்ளையும் வந்தாங்க எருமை-இளிக்கொம் பெருமை கண்ணு போட்டதும் அந்த ஆவணி மாசம்தான்."

நான் சொல்ல முயற்சித்த விஷயம். "இல்லை, காமு. ஆனியில் எருமை கன்று போட்டது. கலியாணியின் புருஷன் வந்ததும் ஆனி மாசந்தான். உன் அண்ணைச்சி கலியாணமும் அப்போதான். நான் மதருஸ் போனதும் ஆனி மாசமே."

"எங்க மதனியே சொன்னளே. ஆவணி என்ருல், அது ஆவணி மாசந்தான். சும்மா, ஆனி ஆனி என்று உளற வேண்டாம்."

'நான உளறுகிறேன்! உன் மதனி சொன்னல் அது வேதவாக்கா?'

"நீங்கள் ரிக்ஷிபோல தாடி வளர்த்துள்ளீர்கள்"

"அதனல் ரிக்ஷி தப்பு ரிஷிதான் சரி"

"சரிதான் ரிஷிகளே! ப்ரபோ அடியாள் வாக்கையும் செவிமடுங்கள். நீங்கள் சொல்வதுதான் வேதவாக்கு. ஒப்புக்கொள்ளுகிறேன். அதற்கு ஒரு திருத்தம். ஆனி என்பது ஆவணியல்ல!"

"தாடி மீசைக்கும் நம்முடைய விவாதத்திற்கும் சம் மந்தம் இல்லை. அது, சூனியமாசக் கல்யாணம். அப் போது நம்மூரில் தேரோட்டம் நடைபெற்றது."

"நடைபெறவில்லை; ஓட்டம் பெற்றது. தேர் அப் படியே நிற்க, நான் பொய்யா சொல்லுகிறேன். ஆவணி நல்ல நினைப்பு இருக்கிறது. ஒரு மணி முகூர்த்தம், பழய

மணிக்கு. புதுமணிக்கு 2 மணி. தேதிகூட 12" என்று ஆக்ஷேபனை செய்தாள்.

என் பெட்டியில், அவள் அண்ணாவின் கல்யாணப் பத்திரிகை கிடந்தது; அதை எடுத்து முகத்துக்கு நேரே நீட்டினேன். அதிலே ஆனி முகூர்த்தம் புது மணி ஒன்றுக்கு, தேதி சரியாக 21 என்றும் போட்டிருந்தது. அப்படியாவது தோல்வியை ஒப்புக்கொண்டாளா? அந்தச் சமயம் கல்யாணியம்மாள், உப்போ புளியோ கடன் வாங்க வந்து சேர்ந்தாள்.

"ஏனம்மா, உன் கல்யாணி அக்காளிடம் கேட்டு விடேன் ஆனியா ஆவணியா என்று கொளும்புப் பிள்ளைவாள் எப்போ வந்தது?"

கேட்டதும் கல்யாணி "ஆமாம் அவுக,போன ஆனியிலே வந்தாங்க அப்போ தான் உங்க வீட்டு கிளிக் கொம்பு எருமை கூட கண்ணு போட்டுது. உங்க அண்ணாச்சிக்கும் கல்யாண சமயம்" என்று சொன்னாள்.

இது நறுக்குத்தெறித்த உண்மை. பேஷ் பார்த்தாயா? நீ வாதாடுகிறது, ரொம்பத்தப்பு. கல்யாணப் பத்திரிகை ஆனியில் நடந்தது என்கிறது: உன் கல்யாணி அக்காளும் ஆனி என்று விட்டாள். எருமை, கன்று போட்டதும் ஆனியில் தான் இனிமேலாவது விதண்டா வாதம் வேண்டாம்! என்று வெற்றிக் கொடி நாட்டினேன்.

என் ஜயஸ்தம்பத்தை அப்படியே தலை கீழாகக் கவிழ்த்து விடுகிற மாதிரி "இருக்கலாம் அதெல்லாம். ஆனால் கன்று போட்டது ஆவணியில் தான்," என்று கம்பீரமாகச் சொன்னாள்.